# அகரம் எனது சிகரம்



சு. வள்ளியம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகரம் எனது சிகரம்"

ஆக்கியோன் :

திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை

சாவகச்சேரி

வெளியீடு :

வளர்பிறை வெளியீட்டுக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் :- "அகரம் எனது சிகரம்"
நூலாசிரியர் :- திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை
பதிப்புரிமை :- ஆசிரியருக்கே
பதிப்பு :- 2021
நூலின் அளவு :- A5
அட்டைப்பட ஓவியம் :- ச.தர்மதாஸ் (காட்டூன் செல்வன்)
நூல் வடிவமைப்பு :- துஷ்யா தனேந்திரன் (குரு பிறிண்டேர்ஸ்)
அச்சகம் :- குரு பிறிண்டேர்ஸ்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
தொ.பே :- 021 221 4777
பக்கங்கள் :- xxxiv + 145
விலை :- ரூபா 400/=
வெளியீடு :- வளர்பிறை வெளியீட்டுக் குழு
வெளியீட்டு அனுசரணை:- திரு திருமதி சின்னத்தம்பி பரமலிங்கம் குடும்பம் (ஜேர்மனி)

Book :- "Akaram Enathu Sigaram"
Writer :- Mrs. Subramaniyam Valliyammai
Copyright :- Mrs. Subramaniyam Valliyammai
First Edition :- 2021
Size :- A5
Cover Photo :- S. Tharmathaas (Cartoon Selvan)
Book design :- Thusya Thanenthiran (Guru Printers)
Printed by :- Guru Printers
Adiyapatham Road,
Thirunelvely.
T. P -: 021 221 4777
Pages :- xxxiv + 145
Prize :- 400/=
Published by :- Valarpirai
Published Sponsor :- Mr & Mrs.Sinnathambi Paramalingam Family (Germony)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்னையும் இப் பூவுலகில்
நல்ல மனிதனாய் வாழவைத்து
அமரர்களான என் பெற்றோருக்கும்
மருமகளாய் எண்ணாது
மகளாய் அரவணைத்து
நல்வழி காட்டி அமரர்களான
மாமா,மாமிக்கும் (அப்பு,ஆச்சி)
என் அன்புச் சகோதரிக்கும்
தம்பியாக நண்பனாக
கூடித் திரிந்து விளையாடி
யாருமே காண முடியாத
வட்டு வாகலில் உயிர்நீத்த
என் அன்புப் பெறாமகன்,பேரனுக்கும்

களி மண்ணாய் இருந்த என்னை
பதம் பார்த்து பக்குவப் படுத்தி
அகரம் என்னும் சிகரம் தொடவைத்த
எல்லா ஆசிரியர்களுக்கும்
இக் கவிச் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் வாழ்த்து

விக்ந விநாயகா விக்நேஸ்வரனே
விரகழ லமுதே முத்தமிழ் முதல்வனே
பண்ணிறையும் கவிதைப் பாமாலையினை
பண்ணோடு வரைந்து இசைத்திடவே
கற்றவர்க்குக் கவினூறு தமிழினிமை கலந்தவனே
கஜமுகத்துக் கணபதியே சரணமைய்யா! சரணம்!!

## அறிவருள் சுரப்பாள் சகலகலா வல்லியவள்

சரசசல்லாப சங்கீத வாணியே - தினமும்
செந்தமிழாற் கீதங்கள் இசைத்திடவே
அருளமுதம் என்னும் கல்விச் செல்வத்தை
அள்ளி அள்ளி அருள் சுரக்கும் அருணிதியே
ஏழிசையாய் இசைப்பயனாய் எழில் பெற
எந் நாளும் என் நாவில் தேனெனும் அறிவருள் சுரந்திட
அருமருந்தென்னும் கல்வித் திரு மருந்தை
அருள் தந்தருள் புரிவாய்
அபிராமித் தாயே சகலகலா வல்லியே
சரணமம்மா! சரணம்!! சரணம்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்



021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

02.02.2021

## அருளாசிச்செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தென்மராட்சி சாவகச்சேரி நகரில் வசிக்கும் ஆசிரியை திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்கள் "அகரம் எனது சிகரம்" என்னும் கவிதை நூலினை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

இவரது இக் கவிதை நூலில் அகரம் I என்ற பகுதியில் பக்திக் காவியங்களாக விநாயப் பெருமானை தொழுதேத்தி நல்லூர்க் கந்தனுக்குரிய கவிதைகளோடு செல்வச்சந்நதி முருகன், நயினை நாக பூசணி அம்மன் ஸ்கந்தபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் (காட்டம்மன்) ஆகிய தலங்களுக்குரிய கவிதைகளையும் இணைத்து இதில் கொரோனா நோயினை மையமாக வைத்து பக்திக் காவியமாக்கியமையும் வரவேற்கத் தக்க விடயமாகும்.

இந்தப் பூலோகத்தில் எம்மைப்படைத்த இறைவனுக்கு இரண்டாவது நிலையில் இருக்கும் தாய் தந்தையரை நினைவு கூர்ந்து வரைந்த கவிதை ஆசிரியரின் உள்ளார்ந்த அன்பை உணரக்கூடியதாகவும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிலே நடந்த பேரவலைத்தையும், தாய் தந்தை இழந்த சிறுவர்களையும் நினைவு கூர்ந்து அன்றும், இன்றும் நம் மக்களுடைய வாழ்க்கைத் தத்துவத்தையும் எடுத்துக் காட்டி பத்திரிகைத்துறைக்கும் ஓர் முக்கியத்துவம் கொடுத்து, ஒவ்வொருடைய வாழ்கைப் பயணத்தையும் எடுத்துக்காட்டி ஒவ்வொரு கவிதையையும் புனைந்து இந் நூலினை முழுமை யாக்கியமை அழகாக உள்ளது. இங்கே இவரது முன்பள்ளிக் கல்வித் துறையின் அனுபவங்களை இந் நூலில் காண முடிகிறது. இவரது இந்த முயற்சி உயர்வடைந்து சிறப்பாக அமைய வேண்டுமென இறைவனுடைய ஆசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்சுவாமிகள்
இரண்டாவதுகுருமஹாசந்நிதானம்


நல்லூர் ஆதீனம்,
நல்லூர்.

இரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற்செல்வனின் வாழ்த்துச்செய்தி



இறைவனை வாழ்த்துவதற்கு பாக்களை பயன் படுத்துவது தமிழர் மரபாகும். கவிதை ஊடாக தமது எண்ணக் கருத்துக்களை திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்கள் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார். கவிதை இலக்கணம் கடந்து, தனது உள்ளத்தில் எழுந்த சொற்களால் இப்பாக்களை உருவாக்கியுள்ளார். அவரது முயற்சியும், அவரது விருப்பமும் வரவேற்கத்தக்கது.

தமிழில் நல்ல சொற்களை இணைத்து செய்திகள் கூறும் கவிதை நடை அன்றும் இன்றும் தொடர்கிறது. ஒரு செய்தியை பிறருக்கு எடுத்துரைக்கும் வழியாக கவிதை புனைதல் வழக்கமாகும். நூலாசிரியர் தமது குலதெய்வங்களையும், உற்றார் உறறவினர்களையும், ஊர் பெரியவர்கள் சிலரையும் நீளநினைந்து எழுதிய விடயங்களையும் நூலாக்கியுள்ளார். இவரது முயற்சியை வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

**கலாநிதி ஆறுதிருமுருகன்**
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை
உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



முன்னைநாள் முன்பள்ளி முதன்மை ஆசிரியராக, சேவையாற்றிய திருமதி சு. வள்ளியம்மை அவர்களின் "அகரம் எனது சிகரம்" எனும் நூல் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

"அகரம் எனது சிகரம்" என்ற தலைப்பிற்கு பொருத்தமாக பெரும்பாலான கவிதைகளை அகர வரிசைப் படி எழுதியிருப்பது ஆச்சரியமான விடயமாகவே கருதப்படக் கூடியது. ஒரு சிறந்த கவிதை முயற்சியாக அமைந்திருப்பது பாராட்டப்பட வேண்டியது. பத்திரிகைகள், சிறப்பிதழ்கள், நாளிதழ்களில் பிரசுரமாக்கப்பட்ட கவிதைகளின் தொகுப்புக் களும் அதன் தொடர்ச்சியான கவிதைகளும் இங்கு கொடுத்திருக்கின்றார்.

எத்தனை பெயரும் புகழும் கொண்டாலும் அத்தனைக்கும் இறைவன் துணை இருக்க வேண்டும் என்பது நிதர்சனம். அந்த வகையில் தங்களின் இக்கவிதைத் தொகுப்பு முயற்சியில் முதற்கடவுள் விநாயகரை துதி பாடி ஆரம்பித்து நல்லூர் கந்தன், நயினை நாகபூசணி அம்மன், கிளிநொச்சி காட்டம்மன், சந்நிதி முருகன் என கடவுள்களின் கவிதைகளை முதலில் கொடுத்திருப்பது சிறப்பானது.

இன்றையை காலகட்டத்தில் உலகளாவிய அச்சுறுத்தும் உயிர் கொல்லி நோயாகிய கொரோனா இவ்வுலகை விட்டு அகல வேண்டி அபிராமி தாய்க்கு எழுதப்பட்டுள்ள கவிதை நூலாசிரியரின் உலக பற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

பக்தி கவிநயங்களோடு பல்வேறுபட்ட ஆலயங்களை சார்ந்து கவிதைகளை கொடுத்து தொடர்ச்சியாக அகரம் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரம் என்ற மிக நீண்ட கவிதையின் வாயிலாக தனது பாடசாலை மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், சக மாணவர்கள், தோழிகள் போன்றவர்களை கண்முன் நிறுத்தி எழுதியிருப்பது நூலாசிரியரின் கவித் திறமையினை பறைசாற்றி நிற்கின்றது.

மேலும் தமிழ் மக்களின் மீளாத்துயர், செந்தமிழ், என்ற வகையில் தொடர்ந்து உயிரெழுத்து கவிதை நயங்களில் அனைத்து கவிதைகளையும் உயிரெழுத்து அகர வரிசைப்படி மிக அழகாக கொடுத்திருக்கின்றார்.

பெற்ற அன்னைக்கோர் கவிதை சிறுவர்களுக்கோர் கவிதை போன்ற பல்வேறு பட்ட வடிவங்களிலும் சந்தர்ப் பங்களிலும் எழுதப்பட்ட இவ் அகரவரிசை கவிதைகள் படிப் பதற்கு வியப்பாகவே இருக்கின்றது.

ஏதோ ஒரு தொனிப்பொருளை மாத்திரமே கொண்டு செல்லாமல் பரந்துபட்ட வகையில் கவிதைகளை கொடுத் திருப்பதும் அதனை தொகுத்து நூலாக்க வேண்டும் என்ற எண்ணமும் நல்லதொரு படைபாளியாக வளர்ந்து வருவதற் கான ஆரம்பமாகவே அமைந்திருக்கின்றது. திருமதி சு. வள்ளியம்மை அவர்களின் கவிதை முயற்சினை பாராட்டி மேலும் மிகச் சிறந்த வகையில் கவிதைகளை எழுதி தொகுத்து நூல் வெளியீடு செய்ய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**ஜெயா தம்பையா**
பணிப்பாளர்,
ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திருமதி சு. வள்ளியம்மை எழுதிய "அகரம் எனது சிகரம்" எனும் கவிதை நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். அகரம் எனது சிகரம் என்னும் கவிதைத் தொகுப்பினுள் பக்திக்கவிதைகள் அல்லது பாடல்கள் சிறப்புக் கவிதை நயம், உயிரெழுத்துக் கவிதை நயங்கள், பொதுக்கவிதை நயங்கள் போன்ற தலைப்புக்களின் கீழ் கவிதைகளை எழுதி உள்ளார்.

மிக மெல்லிய உணர்வில் உலகில் நடக்கும் சம்பவங்களை தொகுத்து இசையுடன் பாடக்கூடிய வகையில் இவரது கவிதைகள் அமைந்துள்ளன. மிக எளிமையான சொற்கோர்வைகளால் ஆன இவரது கவிதைகள் நீதி நேர்மை போன்றவற்றை எடுத்துக் கூறுவதாக உள்ளது. அவரது இந்த முயற்சியினை பாராட்டுகின்றேன். "அகரம் எனது சிகரம்" என்ற கவிதைத் தொகுப்புக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி உஷாசுபலிங்கம்
பிரதேச செயலர்
பிரதேச செயலகம்
தென்மராட்சி - சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைனாள் கரைச்சி பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி



திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்களால் வெளியிடப்பட்டும் "அகரம் எனது சிகரம்" எனும் கவிதை நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்கள் ஸ்கந்தபுரம் இல 1 அ.த.க பாடசாலை மற்றும் அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான இவர் இப் பாடசாலையின் பெருமைகளை எடுத்தியம்பும் கவிதை மிக மிகச் சிறப்பாக வரைந்துள்ளார். இவர் முன்பள்ளிக் கல்வித் துறையில் 30 ஆண்டுகள் பழுத்த அனுபவமிக்க ஆசிரியரால் இக் கவிதை நூல் வெளியிடப்படுகின்றது.

எமது கல்வி பாரம் பரியத்தில் மழலைகளுக்கான கல்வி முறைமையை எடுத்துக் காட்டும் வகையில் தெள்ளு தமிழ் பாடல்களை அள்ளி எடுத்து வெளியீடு செய்துள்ளமையோடு "மழலைகள் இல்லம், பறவைகள் சரணாலயம், நிலவே " எனும் கவிதையும் இங்கு எடுத்துக் காட்டியமை சிறப்பாக உள்ளது. அகரம் எனது சிகரத்தில் பொதுக் கவிதைகளோடு இறைவன் மீது கொண்டுள்ள பக்தியை முதலில் தொடங்கி படிப்படியாக வன்னியில் நடந்த பேரவலத்தையும் தாயின் மகிமையையும் சுட்டிக் காட்டி பத்திரிகைத் துறைக்கும் ஓர் இடத்தை கொடுத்திருப்பது சிறப்பம்சமாக உள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்கள் கூடுதலாக உயிரெழுத்துக்களை மையமாக வைத்து கவிதைகளை புனைந்துள்ளமை அவரது அனுபவ முதிர்வின் வெளிப்பாடாய் "அகரம் எனது சிகரம்" எனும் இக் கவிதை நூலை வெளியிட்டு வைக்கின்றார். அந்நூலை நாம் அனைவரும் அகரம் எமது சிகரமாகக் கொண்டு வரவேற்கின் றோம். இவ்விழா சிறப்படைய அகரம் என்னும் சிகரத்தை வாழ்த்துகின்றேன்.

த. முகுந்தன்
முன்னைனாள் பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னாள் முன் பள்ளித் திட்டமிடல் முதன்மை ஆசிரியரின் "அகரம் எனது சிகரம்" என்னும் கவிதை மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முன்னாள் முன்பள்ளி முதன்மை ஆசிரியர் திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்கள் தனது ஆரம்ப கற்றல் செயற்பாடுகளை ஸ்கந்தபுரம் தலவிருட்சமான இத்தியடி அம்மன் அருகே அமைந்திருக்கும் கிளி/ஸ்கந்தபுரம் இல:01, அ.த.க பாடசாலையில் கற்று (1966- 1971) 1972இல் கிளி/அக்கராயன் ம.வித்தியாலயத்தில் காலடி பதித்து உயர்தரம் வரை கற்று 1976 இல் அங்கிருந்து தனது கற்றலை நிறைவு செய்து வெளியேறினார். அவரது இரு பாடசாலை வாழ்க்கையில் தன்னுடன் கற்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள், அதிபர்களுடன் தொடர்ந்த சிந்தனை அவரது குறிக்கோள், அவரது ஆழ் மனதில் பதித்துள்ள அலைகள் அவரது எண்ணத் திறமையை வளர்த்து, தன் குறிக்கோளை அடையத் தேவையான வழிமுறைகளை உணர்த்துகின்றது.

அவரது "அகரம் எனது சிகரம்" என்றும் கவிதை மலருக்கு தனது களப்பயணத்தில் மேற்கொண்ட எண்ணப்பகிர்வுகளை எவ்வித பயமும் கூச்சமும் இன்றி அவ்வழி முறைகளைக் கடைப் பிடித்து தன் செயல்களில் வெற்றிபெறும் இவ் ஆசிரியர் கற்றலை நிறைவு செய்த காலப்பகுதியில் கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்தில் நான் தரம்-6 இல் காலடி பதித்தேன். தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர கற்றலின் பின் முன் பள்ளிகளில் தன்னை அர்ப்பணித்து மழலைச் செல்வங்களுடன் கூடிக் குலாவி முன்பள்ளி ஆசிரியராக சேவையாற்றி முன்பள்ளித் திட்டமிடல் முதன்மை ஆசிரியரா கவும் காணப்பட்ட இவரது கவிதை நூல் "அகரம் எனது சிகரம்" என்பது பல படிக்கற்களாக அமைகின்றது.

அக்கராயன் பகுதியில் முன்பள்ளியாகத் திகழ்ந்த "வைகறை" முன்பள்ளியில் தனது சேவையினை ஆற்றி பல சிறார்களை சிறந்தவர்களாக உருவாக்கியவராவார். முன்பள்ளி களின் வளர்ச்சிக்கு ஒளியேற்றியுள்ள இவ் முதன்மை ஆசிரியரின் "அகரம் எனது சிகரம்" கவிதை நூலாக வெளியிடு வதற்கு எனது வாழ்த்துரையும் வழங்குவதில் மனநிறைவு அடைகிறேன்.

**திருமதி.வ.விமலேஸ்வரன் (அதிபர்,)**
**கிளி/ இல 02 அ.த.க பாடசாலை**
**ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு நிலைப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



முன்பள்ளித் திட்டமிடல் முன்னாள் முதன்மை ஆசிரியர் திருமதி சு. வள்ளியம்மை அவர்களின் வெளியீடான 'அகரம் எனது சிகரம்' என்னும் கவிதை நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

கருவிலே உருவாக்கி எல்லா உறுப்புக்களையும் அழகாக அற்புதமாகத் தோற்றுவித்து பத்துமாதம் வயிற்றிலே பக்குவமாய் அரவணைத்து இறை நிலைக்கு நிகராய் நின்று தன்னைத் தரணிக்கத் தந்த அன்னையை, அன்போடு அரவணைத்து, அறிவூட்டி வளர்த்த தந்தையை, அகரத்தை தந்து தன்னை சிகரமாக்கிய ஆசான்களை பக்தியால் திளைத்து பரவசமடைந்த தெய்வங்களை மனதிருத்தி மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களின் மலரடி பணிந்து பாமாலை சூட்டி ஆசிரியர் ஆனந்த மடைவதை நூலில் காண்கின்றேன்.

தனது வாழ்க்கைப் பயணத்தில் தான் சந்தித்த கூடிப் பழகிய அனுபவங்கள் பற்றி ஏணிப்படிகளாய் அமைந்த அத்தனை நல்லுள்ளங்களையும் நினைவுகூர்ந்து உள்ளத்தால் போற்றி நன்றி ததும்ப எழுந்த கவிதைகளை சிகரத்திலே காண்கின்றேன். நன்றி மறப்பது நன்றன்று என்ற ஆசிரியர் அவர்களின் இச் செய்தி இன்றைய சந்ததிக்கு ஒரு பாடமாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரெழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட கவிதைகளை, நூலில் காண முடிகிறது. இது பாரட்டப்பட வேண்டிய விடயமாகும். கால் நூற்றாண்டுக்கு மேலாக முன்பள்ளிச் சிறார்களை, ஆசிரியர்களை வளப்படுத்தும் அற்புதப் பணியினை பல வடிவங்களில் உன்னதமாக இயற்றிய ஆசிரியை இயல்பாகவே தமிழ் மீது பற்றுடையவர். தமிழ் மொழியிலே பல ஆக்கங்களைப் படைத்துள்ளார். அவரது தன்னம்பிக்கையினையும், விடா முயற்சியையும் நான் மிகவும் பாராட்டி மகிழ்கின்றேன். தொடரட்டும் அவர் பணி.

ஆசிரியரும், அவரது அன்புக் குடும்பமும் அருட் பேராற்றல் கருணையினால் உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெஞ்ஞானம் ஓங்க வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்

**திருமதி அ. வேதநாயகம்**

ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பழைய குடியேற்றக் கிராமங்களில் அக்கராயன் கிராமமும் ஒன்றாகும். கரைச்சிப் பிரதேச பிரிவின் ஆளுமைக்குட்பட்டு வந்தோரை வரவேற்கும் பண்பும், மிகப்பெரிய பரந்த பிரதேசத்தில் பச்சைப் பசேலென அசைந்தாடும் நெல் வயலும், அதைக் காண்போர் மனதை கொள்ளை கொள்ளும் அழகும், காற்றிலே அலைகள் கரை மோதும் வற்றாத குளங்களும் நிறைந்த அக்கராயன் மன்னன் ஆட்சி செய்த அழகிய பூமியே அக்கராயன் பிரதேசமாகும்.

மருத நிலமான அக்கராயன் பிரதேசத்தில் அழகிய பெரிய நிலப்பரப்பில் அமைந்திருக்கும் அக்கராயன் மகா வித்தியா லயம் மற்றும் இல 1 அரசினர் தமிழ் கலவன் பாடசாலைகளைச் சித்தரிக்கும் கவிதையோடு வேறு பொதுக் கவிதைகளையும் புனைந்து "அகரம் எனது சிகரம்" என்ற கவிதை நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கிராமத்தில் யாழ்ப்பாணம் தீவகம் பொன்ற இடங்களிலிருந்து 1956இல் குடியேறிய மக்களே இங்கு அதிகமாக வாழ்கின்றனர். இம்மக்களது வாழ்க்கை முறை, ஒழுக்கம் பண்பாடு நிறைந்த கிராமத்தில் வாழ்ந்து அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற பழைய மாணவியும் நூலின் ஆசிரியருமான திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்களின் "அகரம் எனது சிகரம்" என்னும் நூல் பெறுமதியானதாக இருக்கும் என நினைக்கின்றேன் இவ்விரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளின் உருவாக்கம் தொடர்பாகவும் செயற்பாடுகள் தொடர்பாகவும் எழுதப்படுவது சாலச் சிறந்ததாகும். இக் கவிதை நூலினை வெளியிடும் ஆசிரியர் அவர்கள் இமயமலைச் சிகரமாகும், மாணவச் சமுதாயத்திற்கோர் வரப்பிரசாதமாகும் மேலோங்கி நிற்பதோடு இவரது " அகரம் எனும் சிகரம " என்ற நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நானும் இப் பாடசாலை யில் ஒர் அதிபராக சேவை புரிந்த மகிழ்ச்சியோடு இவரது பணி மென்மேலும் தொடர வேண்டும் என்று இறைவனிடம் வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு.க.மதுரநாயகம்
ஓய்வு நிலை அதிபர்.
கிளி/ அக்கராயன்மகாவித்தியாலயம்.
அக்கராயன்குளம் கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரம் தொட்ட மாணவிக்கு வாழ்த்துக்கள்



1974 ஆம் ஆண்டு தொடக்கம் 1976 ஆம் ஆண்டு வரை அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கணித ஆசிரியராக கடமையாற்றினேன். அக் கால பகுதியில் இலைமறை காயாக அங்கு கல்வி கற்றுக் கொண்டிருந்த இந் நூலாசிரியரும் எனது பழைய மாணவியுமான திருமதி. சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்கள் உயர் படிப்பு, பட்டம் பதவிகளை பெற்று தனது அறிவாற்றலாலும், ஆர்வத்தோடும் இந்நூல் ஆகியதையிட்டு நான் மிகவும் பெருமையும், மகிழ்ச்சி அடைகின்றேன்.

இறையருளால் இவ்வாற்றல் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து சமூகத்தில் இவருடைய நூல்கள் காலத்தால் அழியாது மக்கள் மனதில் நிலைத்து நிற்க வேண்டுமென அகரம் என்னும் சிகரத்தை தொட்ட என் மாணவி திருமதி சு. வள்ளியம்மை அவர்களை மனமுவர்ந்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன்

திருமதி வ. புஸ்பலிங்கம்
ஓய்வுநிலை கணித ஆசிரியை,
அக்கராயன் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிக்கு எனது வாழ்த்துரை



"அகரம் எனது சிகரம்" என்னும் அருமையான கவிதை நூல் வெளியீடு செய்யும் இளைய எழுத்தாளர் திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்களது முயற்சி வெற்றிபெற வேண்டும். அவர் இது போன்ற சிறுவர்களுக்கான பாடல்களையும், பக்திக் காவியங்களையும், பல்சுவையான நாடகங்களையும் மேடையேற்றியதோடு திருவூஞ்சல் பாடல்களையும் இயற்று வதிலும் வல்லமை பெற்றவராவார்.

திருமதி சு. வள்ளியம்மை அவர்கள் கல்வி பயின்ற காலப் பகுதியில் என்னிடம் சங்கீதம் பயின்றவராவார். இவரது இந்த ஈடுபாட்டால்தான் கவிதை வரையும் ஆற்றல் ஏற்பட்டதோ என்ற எண்ணம் எனக்கு தோன்றுகின்றது.

திருமதி சு. வள்ளியம்மை அவர்கள் இது போன்ற பல நூல்களை வெளியீடு செய்ய வேண்டுமென்றும் அவருக்கு இறைவன் நீண்ட ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும் அருள் வேண்டுமென்று எமது குல தெய்வமான காட்டம்மனை வேண்டி அவரின் இம் முயற்சியை மனதார பாராட்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி

கலாபூசணம் மறவனும்
T.M வாசகர்
மறவன்புலோ சாவகச்சேரி
(து. மாணிக்கவாசகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனையின் செயல்வடிவம்
# அகரம் என்னும் சிகரம்



முன்பள்ளி முன்னாள் முதன்மை ஆசிரியையும் எனது நண்பியுமான திருமதி சு.வள்ளியம்மை அவர்களின் சிந்தனையின் சிகரமான "அகரம் எனது சிகரம்" எனும் கவி நூலினை வெளியிடு செய்வதையிட்டு மகிழ்வடைகின்றேன். திறந்த பல்கலைக்கழகத்தில் முன்பள்ளி கற்கை நெறியினை நான் கற்ற வேளையில் ஆசிரியருடன் பழகும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அன்றும் சரி இன்றும் சரி என்றும் அவரது சிந்தனை எல்லாம் சமூகத்திற்கு குறிப்பாக முன்பள்ளிச் சமூகத்திற்கு எதையாவது செய்யவேண்டும் என்றே சிந்திப்பார். என்னுடன் பேசும் வேளையில் எல்லாம் தனது சிந்தனைகளை செயல்வடிவம் ஆக்க வேண்டும் என்றே அதிகம் பேசுவார். அதற்கேற்ற சிலவற்றை செயல்வடிவமும் ஆக்கியுள்ளார்.

இன்று அவர் உடல் நலம் குன்றிய நிலையிலும் தனது கவிகளை நூலாக்கி இச் சமூகத்திற்கு வழங்கவேண்டும் என்ற அவரது விடா முயற்சியை நான் பாராட்டுகின்றேன். நிறைவாக முன்பள்ளித் துறையில் நிலைத்து நின்று தனது வாழ்நாளில் பெரும் பகுதியை முன்பள்ளிக் குழந்தைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் என அர்ப்பணித்து வாழ்ந்த ஆசிரியரின் பணி சிகரமாகி உயர்ந்து நிற்கின்றது. அவரது தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் தொடர பாராட்டுவதோடு, அவரும் அவர்தம் குடும்பமும் நீண்ட ஆயுளுடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**செல்வி ச.சியாமளா**

பொறுப்பாசிரியர், நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப்பணி தொடர வாழ்த்துக்கள்



திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் அவர்களின் "அகரம் எனது சிகரம்" எனும் கவிதை நூல் வெளியீடு செய்வதையிட்டு பெரு மகிழ்வு அடைகிறேன். கல்வி கற்கும் காலத்தில் இலக்கிய நயம் நிறைந்தவராகவும், ஆடல் பாடல்களில் வல்லவராகவும், நல்ல மொழிப்புலமை உள்ளவராகவும் திகழ்ந்தவர் ஆவார்.

மாணவர் மன்றம், தமிழ்த்தின விழாக்கள், கலாச்சார நிகழ்வுகளில் பங்கு பற்றி பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றதை நினைத்துப் பார்க்கின்றேன்.

நாற்பத்தைந்து வருடங்களின் பின்பு அவருடைய பெருமை பற்றி சிந்தனை வளமும் உளவியல் அறிவும் சிறந்த படைப்பாற்றலும் நிறைந்த இவரது இலக்கியப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.

"வாழ்க தமிழ், வளர்க அவர் பணி"

சறோஜினி சங்கரலிங்கம்
ஓய்வுநிலை அதிபர்
கிளி/கனகாம்பிகைக்குளம் வித்தியாலயம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக் கவிநூல் கண்டு களிப்புறுகின்றேன்



அகரத்தில் அடியெடுத்து சிகரம் தொட்ட சிந்தனைத் திருமகளின் சிறப்புக் கவிநூல் கண்டு களிப்புறுகின்றேன் என் பள்ளித்தோழி கல்வி கற்கும் காலத்திலேயே கவி சொல்வதில் வல்லமை படைத்தவர்.

காலமூப்பின் கனிவான சிந்தனையில் அனுபவ முது மொழியில் அரவணைக்கும் தலைப்புக்களில் காலத்தின் கருப்பொருளில் மூழ்கி நிற்கும் படைப்பானது "அகரம் எனது சிகரம்"

வளம் சுமந்த விழுதுகளின் விருட்சமென வானளாவி கிளை பரப்பி வீசட்டும் வசந்தமதை பார்போற்றும் சிந்தனையால் பல பதிப்பு தவளட்டும்.

பல்வகைத் தளங்களில் நின்று பரந்துபட்ட சிந்தனையின் படைப்புக்கள் கால ஓட்டத்தில் கரையாத கவிதைகள் தேவை. "அகரம் எனது சிகரம்" பாரதனில்அகரம் தரும் ஆதரவுடன் பல நூல்கள் படைக்க வேண்டும். அதற்கு துணை நிற்கும் அனைவரையும் வாழ்த்துகிறேன் உளங்கனிந்து உவகையுடன்

**திருமதி நிர்மலன். புவனேஸ்வரி**
**ஓய்வுநிலை கணக்காளர்**
**கரைச்சி.தெற்கு. ப.நோ. கூ. சங்கம்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடு வாழ்வியல் நிறைந்தது அக்கராயன் மகாவித்தியாலயம்



அகரம் எனது சிகரம் எனும் இந் நூலாது அக்கராயன் பிரதேசத்தின் சமூக பொருளா தாரம், பண்பாடு வாழ்வியல் அம்சங்களை கொண்ட இப் பாடசாலைகளின் தனித்துவத்தை மேம்படுத்தி அங்கு பயிற்றுவித்த அதிபர் ஆசிரியர்களை நினைவு கூர்ந்தும், அக்கால கட்டத்தில் நெருங்கிப் பழகிய சக மாணவர்களையும் உள்வாங்கி முதன்மைப் படுத்தியிருப்பதை காணமுடிகின்றது.

பள்ளிப்பருவத்திலே குறும்புத்தனத்தோடு முதல்தர மாணவியாக திகழ்ந்து கவிதை புனைந்து பாடல் இசைப் பதிலும், விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கிய இந் நூலாசிரியரும், நண்பியுமான திருமதி சு.வள்ளிம்மை அவர்க ளோடு ஒரே பாடசாலையில் நாம் எல்லோரும் கல்வி பயின்றதை நினைத்து பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். அவரது இம் முயற்சி வெற்றி பெற முருகப்பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.

**திரு. த. கிருஷ்ணபிள்ளை**
இல. 130. ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் என்னும் சிகரம் தொட்ட
# என் தோழிக்கு



அகரத்தில் அடியெடுத்து சிகரம் தொட்ட
சிந்தனைக் கவியே கலைகொண்டு காப்பியமாக
இசைத்த உன்கவிகள் நாற்திசையும் ஒலிக்கட்டும் உன்புகழ்.

ஒலிவுற்று சோர்வுறாது விருட்சமென பல தழைத்து
சிறுவர் முதல் முதியோர் வரை கண்டு களிக்கும்
படைப்பாக வளரட்டும் இந்நூல்.

பல் வகைத் துறைகளில் ஆழ்ந்த சிந்தனைத் துளிகள்
பார் போற்றும் சாதனைச் சான்றாக அமையட்டும்
"அகரம் எனது சிகரம்" எனும் இந்நூல்.

திருமதி சின்னத்தம்பி பத்மினி
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகங்களை நினைவூட்டிய தோழியே



அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியும் எங்கள் நண்பியும் நூலாசிரியருமான திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்களின் "அகரம் எனது சிகரம்" என்னும் கவிதை நூல் வெளியிடுவதையிட்டு நாம் பெரும் மகிழ் வடைகிறோம்.

மறக்க முடியாத நினைவுகளைத்தந்த அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கற்றதை நினைத்து பெருமிதம் கொள்கிறோம். இங்கு கற்றது சிறிது காலம் என்றாலும் அங்கு கிடைத்த நல்லறிவும், ஆசான்களின் வழிகாட்டலும் எங்களை நெறிப் படுத்தியதோடு, கிடைத்தற்கரிய நற்குணமுடைய நல்ல நண்பர்கள் எமக்குக் கிடைத்தனர். இன்று நாங்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் அகரம் எனது சிகரம்" என்ற கவிதை நூல் வெளியீடு எங்கள் அனைவரையும் ஒன்றிணைத்தது மட்டு மன்றி ஒருகணம் எங்கள் பாடசாலைக் கால ஞாபகங்களை நினைவூட்டியமைக்கு எங்கள் அன்புத் தோழி திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மையும், அவரது குடும்பத்தாரும் நீடூழி காலங்கள் வாழ்ந்து இன்னும் பல சாதனைகளை என் தோழி நிலைநாட்ட வேண்டும் என்று ஆண்டவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.திருமதி யோகாநாதன் முருகானந்ததேவி**
பண்டிவிருச்சான் மடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்மை நிலையானது
# அக்கராயன் மகா வித்தியாலயம்



இக் கவிதை நூலில் நாம் கல்வி கற்ற பாடசாலையின் பெருமையை எடுத்துரைத்து அதிபர் ஆசிரியர்களை நினைவு கூர்ந்து எம்மோடு கல்வி கற்ற நண்பர்களையும் ஒன்றிணைத்து கவிநயம் புனைந்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். கல்வியிலும் சரி அபிவிருத் தியிலும் சரி முதன்மை நிலை பாடசாலையாக அக்கராயன் மகா வித்தியாலயம் இருக்கின்றது.

இப் பாடசாலையில் நாம் கல்வி கற்றதையிட்டு பெருமைப் படுகின்றேன். இந் நூலின் வெளியீட்டினால் பிரிந்துபோய் பல பல இடங்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் எமது சிநேகிதர்களை ஒன்றிணைக்கும் சந்தர்ப்பத்தைத் தந்த திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. அகரம் என்னும் சிகரத்தைத் தொட்ட என் அன்புத் தோழியின் இக் கவிதை நூல் சிறப்பாக அமைய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி கேதீஸ்வரன் தமயந்தி**
முன்னாள் முன்பள்ளி ஆசிரியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத நினைவலைகள்
# எங்கள் பள்ளி வாழ்க்கை



அக்கராயன் ஸ்கந்தபுரம் என்னும் பசுமையான பிரதேசத்தில் முதன்மை பாடசாலையாக விளங்கும் அக்கராயன் மகா வித்தியால யத்தில் கல்வி பயின்ற பழைய மாணவர்களில் நானும் ஒருவன்.

அன்புச் சகோதாரியான திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்களால் வெளியீடு செய்யப்படும் கவிதை நூலில் எங்கள் அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பெருமையை எடுத்தியம்பும் வகையில் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களையும் நினைவு கூர்ந்து இக் கவியினை வடித்துள்ளார். இக் கவிதையோடு பக்திக் கவிதைகள், பொதுக் கவிதைகளும் இணைத்துள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

எங்கள் அன்புச் சகோதரியின் இம் முயற்சியால் இக் கவிதை நூலின் மூலம் மறக்க முடியாத நினைவுகளைத் தந்து எங்கள் எல்லோரையும் ஒன்றிணைத்தமைக்கு முதற் கண் நன்றி கூறி இவ் விழா சிறப்பாக நடைபெற இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**சின்னத்தம்பி பரமலிங்கம் (ஜேர்மனி)**
அக்கராயன் மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் ஓர் அறிமுகம்...

"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

ஒரு தாய்க்கு தன் பிள்ளைப் பேறுதான் பேரின்பம் தருவது அதனை விடவும் பேரின்பம் அடைவது தன் பிள்ளை மற்றவர்களால் மிக நல்லவன் என்று புகழ்படும் போதுதான்.

இக் குறளுக்கமைவாக என் பெற்றோரின் விருப்பத்தை ஓரளவு ஈடு செய்துள்ளேன். என்ற திருப்தியோடு என்னையும் இவ்வுலகில் நல்ல மனிதனாய் வாழவைத்து அமரர்களான என் பெற்றோரின் ஆத்மா சாந்தி வேண்டி வாரிவனச் சிவனாரையும், சித்திர வேலாயுதப் பெருமானையும் வேண்டி நிற்கின்றேன்.

எனது கல்விக்கும் இச் சமூகத்திற்கும் கடுகளவாவது பயன் பெறச் செய்து அகரத்திலிருந்து சிகரம் நோக்கிச் செல்ல நல்வழி காட்டிய எனது ஆசான்களை நெஞ்சிலே நிலை நிறுத்தி பணிந்தெழுந்து முன்பள்ளிச் கல்வித் துறையில் காலடிபதித்து முன்பள்ளி ஆசிரியர் முதல் முன்பள்ளித் திட்டமிடல் முதன்மை ஆசிரியராக ஒவ்வொரு படிக்கற்களாக அகரத்திலுருந்த என்னை சிகரம் தொடவைத்த ஆரம்பப்பிள்ளை பருவ பிரிவு மற்றும் திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வளவாளர்கள் அனைவரையும் நினைவிலே சுமந்து எங்கள் குல தெய்வமான காட்டம்மன் ஸ்ரீ முத்து மாரி அம்பாளை வணங்கி அகரம் ஓர் அறிமுகம் நோக்கிச் செல்கின்றேன்.

நான் கல்வி கற்கும் காலப்பகுதியில் சிறுவயது முதல் புத்தகத்தின் மீது தீராத ஆர்வம் கொண்டு எப்பொழுதும் வாசிக்கும் பழக்கம் எனக்குண்டு.

"தொட்டணைத்து ஊறும் மணற்கேணி
மாந்தர்க்குக் கற்றணைத் தூறும் அறிவு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இக் குறளின் படி கவிதை, சிறுகதை, சஞ்கிகை மற்றும் மாயாவி, புராணக் கதைகள் வரலாற்றுக் கதைகள் என பலதரப்பட்ட நூல்களை வாசிப்பது சிறு கவிதைகள், பாடல்கள் என எழுதி வாசிப்பது எனக்கு மிகவும் பிடித்தமானது. நான் கல்வி பயின்ற காலப்பகுதியில் கூடுதலாக பாடசாலைகளில் இவற்றை நிறைவேற்றியுள்ளேன்.

எனக்கு கவிதையின் மீது மீண்டும் தீராத ஈடுபாடு ஏற்படக் காரணமானவர்களின் வரிசையில் முதலாவதாக கவிதை சிறுகதை எழுத்தாளரும், புகைப்படப் படைப்பாளியும் ஓவியனும் எனது பெறாமகனுமான திரு சவுந்தியஸ் அமரதாஸ் (யோகன், சுவிஸ்) அவரது உந்துதலாலும், கருத்தாளமிக்க கவிஞர்களின் ஊக்கத் தாலும் மனத்தைரியத்தை தந்து ஆக்கமும் ஊக்கமும் தந்த எனது கணவரான திரு. து சுப்பிரமணியம் அவர்களின் பக்கத்துணை யாலும், சிறுவர் இலக்கியம் படைப்பாளியாகவும், சிறுவர் நாடக ஆசிரியராகவும், கவிஞனாவும் செயல்படவும், சிறுவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களை வழிநடாத்துவதில் முழுமையாக முப்பது (30 வருடங்களுக்கு) மேலாக சேவையாற்றிய மையாலும், இத்துறையில் முழுமையாக ஈடுபடக் காரணமானது.

முதல் எனது கன்னிப் படைப்பான விரியும் மொட்டுக்கள் என்னும் சிறுவர்களுக்கான பாடல்களை இசை நயத்தோடு சந்தம் நிறைந்ததாக நூலாகவும் இறுவெட்டாகவும் ஒலிப்பதிவு செய்தேன். இதைத் தொடர்ந்து பத்திரிகை, நல்லைக்குமரன் இதழ் மற்றும் வேறுசில பக்திக் காவியங்கள், பொதுக் கவிதைகள் என பல் வேறுபட்ட நூல்களுக்கும், சஞ்சிகைகளுக்கும் திருவூஞ்சல் பாடல்கள் சிறுகதைகளென எழுதியுள்ளேன். இப்படைப்பானது நான் வாழ்ந்த காலப்பகுதியில் பல கவிதைகளில் ஒருசில கவிதைகளை மட்டும் மீட்டு ஒன்றிணைத்ததே

**"அகரம் எனது சிகரம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலானது பத்திரிகைகளிலும், நல்லைக்குமரன் இதழ்களிலும் பிரசுரமான பக்திக் காவியங்களையும், வேறு சில பொதுக் கவிதைகளையும் இணைத்து இதனோடு உயிரெழுத் துக்களை அடிப்படையாக வைத்து உருவான கவிதைகளில் எனது தாயாருக்காகவும், சகோதரிக்காகவும் ஏனையவர்களை நினைவு கூறும் கவிதைகளாகவும் இணைத்து வன்னிப் போரில் தாய் தந்தை இழந்த சிறுவர்களுக்காகவும், வேறு சில பொதுக்கவிதைகளையும் இந்நூலில் இணைத்துள்ளேன்.

இதில் சிறப்புக் கவிதையாக நான் கல்வி பயின்ற பாடசாலை களான கிளி/ஸ்கந்தபுரம் இல 1 அ.த.க படசாலை , கிளி/அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பெருமைகளையும் 1966-1976 வரை அங்கு சேவையாற்றிய அதிபர் ஆசிரியர்களையும் என்னோடு கல்வி பயின்ற சக மாணவர்கள், அன்புத் தோழிகள், தோழர்களையும் நினைவு கூர்ந்து ஒரு நகைச்சுவையாக இக் கவிதையை புனைந் துள்ளேன். இக் கவிதை நூலானது ஒரு விளையாட்டுத் தனமாகவோ, வெகுளித் தனமாகவோ? இருக்கலாம். ஆனால் இது ஒவ்வொருவருக்கும் அர்த்தமுள்ளதாகவும், பிரயோசனமாகவும் குறிப்பாக ஆசிரியர் மாணவர்களுக்கு ஓர் உந்துதலாகவும் இருக்கும் என நினைக் கின்றேன். இதோடு மட்டும் என் பயணம் நின்று விடாது இனிஎன் பயணம் சிறுவர்களுக்காகத் தொடரும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கு அமைவாக செய்நன்றி மறவாப் பண்பு அடிப்படையில்,

இந் நூலுக்கான ஆசியுரையினை வழங்கிய நல்லை ஆதீன குரு மஹா சந்நிதான ஸ்சுவாமிகள் அவர்கள், மற்றும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவர் திரு ஆறு திருமுருகன் அவர்களுக் கும் பல சிரமங்களுக்கும் மத்தியிலும் எனது வேண்டுகோளை ஏற்று ஆசியுரை தந்தமைக்கு நன்றிகள். முன்பள்ளிக் கல்வித் துறைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம் கொடுத்தவர்கள் ஏராளம் பேர். அவர்களில் ஒருவரான ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் அம்மா அவர்களுக்கும், மாகாணக் கல்வித் திணைக்களம் ஆரம்பபிள்ளைப் பருவ அபிவிருத்திப்பிரிவு வடமாகாணப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா அவர்களுக்கும், முன்பள்ளிக் குழந்தைகளுக் காகவும், முன்பள்ளிக்கல்வித் துறைக்கும், ஆசிரியர்களுக்கும் முக்கிய இடத்தைக் கொடுத்து வழிநடாத்திக் கொண்டிருக்கும் ஓய்வு நிலை அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களால் நடாத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், ஒரு சில நாட்கள் முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய பயிற்சிகள் வழங்கும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது. அந்தவகையில் அவரது வாழ்த்துரையும் இந் நூலுக்கு கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியோடு நன்றி கூறக் கடமைப்பட்டவளாவேன்.

"அகரம் எனது சிகரம்" என்னும் இக் கவி நூலினை வெளியீடு செய்வதற்கு கலை கலாச்சாரப் பிரிவினரிடம் உரிய அனுமதி பெற வேண்டும். அதற்கமைவாக கலை கலாச்சாரம் பிரிவினரால் சரி பிழைகளை பார்வையிட்டு வெளியீடு செய்வதற்கு அனுமதியும் தந்ததோடு வாழ்த்துச் செய்தியை வழங்கிய தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி ஊஷா சுபலிங்கம் அவர்களுக்கும், கலை கலாச்சாரப்பிரிவு உத்தியோகத்தர்களான திரு. க. றஜீபன் அவர் களோடு செல்வி பிரியதர்சினி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

கரைச்சி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் அக்கராயன் மகாவித்தியாலயமும் உள்ளடங்கியிருப்பதால் 2020ல் கரைச்சி பிரதேச செயலாளராக சேவைபுரிந்த திரு.த. முகுந்தன் அவர்களும் வாழ்த்துச் செய்தி அனுப்பியதையிட்டு மகிழ்ச்சியோடு நன்றி கூறுகின்றேன்.

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர் திரு க.மதுரநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும், கிளி/ஸ்கந்தபுரம் இல 2 அ.த.க பாடசாலை அதிபரான திருமதி வ.விமலேஸ்வரன் அவர்களுக்கும், எமது அக்கராயன் மகா வித்தியாலயத்தில் நாம் கல்வி கற்கும் காலப்பகுதியில் கணித மற்றும் சமய பாட ஓய்வு நிலை ஆசிரியரான திருமதி வ.புஸ்பலிங்கம் (கமலா டீச்சர்) அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நோயுற்று இருந்த வேளையிலும் எனது கவி நூலுக்கு தானுமோர் வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்த கலாபூசணம் மறவனூர் T.M வாசகர் (திரு.து.மாணிக்கவாசகர்) அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். அத்தோடு நல்லூர் முன்பள்ளி பொறுப் பாசிரியரான செல்வி ச.சியாமளா அவர்களுக்கும் என் நன்றிகள்.

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் ஒன்றாய் கூடிவிளையாடி கல்வி பயின்ற பழைய மாணவர்கள் நண்பிகளின் உள்ளத்திலிருந்து உதித்த பாராட்டுக்கள், நினைவுகள் எனது இறுதிக்காலம் வரை நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக கிளி/ கனகாம்பிகை குளம் வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் திருமதி சறோஜினி சங்கரலிங்கம் மற்றும் கரைச்சி தெற்கு ப.நோ.கூ சங்கத்தின் ஓய்வு நிலை கணக்காளர் திருமதி நி.புவனேஸ்வரி இவர்களோடு அன்புத் தோழியான திருமதி சி.பத்மினி அவர்களுக்கும், மற்றும் திரு திருமதி யோகநாதன் முருகானந்ததேவி, திரு.த.கிருஸ்ணபிள்ளை அவர்களுக் கும், திருமதி. கே. தமயந்தி அவர்களுக்கும், எனது நூல் வெளியீடு பற்றி கேள்வியுற்று ஜேர்மனியில் இருந்து உடனடியாக தொடர்பு கொண்டு பாராட்டி வாழ்த்துச் செய்தி அனுப்பியதோடு இந்நூலினை முதலில் அக்கராயன் மகா வித்தியாலயத்தில் வெளியீடு செய்வதற்காக வெளியீட்டு அனுசரணையாளராக முழுப்பொறுப்பினையும் ஏற்றுக்கொண்ட தம்பி சின்னத்தம்பி பரமலிங்கம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அகரம் எனது சிகரத்திற்கான அட்டைப்பட ஓவியத்தை அழகாக ஆக்கியதோடு இந்நூல் நல்ல வகையில் அமைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பதற்காக பல ஆலோசனைகளை எடுத்துரைத்து பல சிரமங்களுக்கு மத்தியிலும் எனக்காக வரைந்து தந்த காட்டூன் ஓவியனும், சித்திரப்பாட விரிவுரையாளரும், எனது பெறாமகனுமான திரு சவுந்தியஸ் தர்மதாஸ் (செல்வன்) அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இந்நூல் சம்பந்தமாக சகலவழிகளிலும் துணைநின்ற என்பிள்ளைகளான சு. சுபதீபன் (கனடா), ர.சுபதீபினி, சு.சுபகஜன் மற்றும் என் மருமகள் சு.ஜெயமலருக்கும் இந்நூலினை எழுதும் போது அடிக்கடி வந்து கேள்விக்கணை தொடுத்து விளையாடிய என் அன்புப் பேத்திகள் சு.ஜக்ஷனா, சு.டனுத்ராவுக்கும் இந்நூலினை வெளியீடு செய்வதற்கு முழுமையான முயற்சியும் ஒத்துழைப்பும் தந்து உறுதுணையாக செயற்பட்ட நண்பன் திரு.த.கிருஷ்ணபிள்ளை, திரு.மகாதேவன் பிரபாகரன் (ரஞ்சன்) இவர்களோடு அக்கராயன் மகா வித்தியாலய பழைய மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இந்நூலினை அழகுற வடிவமைத்துத் தந்த செல்வி த. துஷ்யா மற்றும் குரு பிறிண்டேர்ஸ் உரிமையாளர் திரு. பாலகுரு விமலேந்திரன் அவர்களுக்கும் அவரது குழுவினர் அனைவருக்கும் என்னுடைய இக் கவி நூலுக்கு அன்பும் ஆதரவும் தந்த அனைவருக்கும் என் நன்றிகள்.

எனது மூச்சு இருக்கும் வரை என் எழுதுகருவி (பேனா) தொடர்ந்து சிறுவர்களுக்கான பயணமாகத் தொடரும் எனக்கூறி நன்றியோடு நிறைவுசெய்கிறேன்.

**திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை**
முன்னைனாள் முன்பள்ளித் திட்டமிடல்
முதன்மை ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐங்கரத்தாள் அணைத்திடுவான் ஐங்கரன்

ஐங்கரனைத் தொழுதிடுவோம்
ஐயமின்றி வாழ்ந்திடுவோம்
"ஐங்கரத்தாள் அணைத்திடுவான் ஐங்கரன்" அவன்
யானை முகங் கொண்ட எங்கள் விநாயகன்

வாருங்கள் அரோகராப் பாடுங்கள் - ஐங்கரனைப்
பாடுங்கள் அரோகராச் சொல்லுங்கள்//

குன்றத்தில் ஆடுங் குமரன்
குறத்தி வள்ளி கரம் பிடிக்க
யானை வேடம் போட்டு வந்தான் ஐங்கரன் - அவன்
யாவருக்கும் அருள் புரியும் விநாயகன்

வாருங்கள் அரோகராப் பாடுங்கள் - ஐங்கரனைப்
பாடுங்கள் அரோகராச் சொல்லுங்கள்//

அருகம் புல் மாலை சூடி
அன்பர்க் கெல்லாம் அருள் புரியும்
அன்னை உமையாள் பெற்றெடுத்த பாலகன் - அவன்
அர்த்த நாதீஸ் வரருக்கு மூத்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள் அரோகராப் பாடுங்கள் - ஐங்கரனைப்
பாடுங்கள் அரோகராச் சொல்லுங்கள்//

தொல் வினைகள் போக்கிடுவான்
தொந்திக் கண பதியான்
உலகம் உனது பெருவயிற்றில் அடைக்கலம் - அதை
உணர்ந்து தினம் தாள் பணிவோம் வரம் தாரும்

வாருங்கள் அரோகராப் பாடுங்கள் - ஐங்கரனைப்
பாடுங்கள் அரோகராச் சொல்லுங்கள்//





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை எனக்கருள்வாய்

அன்பெனும் பொருள் கொண்ட திருமுருகா - உனை
அனுதினமும் தான் பணிந்தோம் வரம் அருள்வாய் முருகா

ஆடி அசைந்து வரும் ஆறுமுகா - நீ
ஆறுதலைத் தந்தருள்வாய் வேல் முருகா

இன்னிசைப் பொருளான இளையோனே - முருகா
இன்னல்களைப் போக்கிடுவாய் அருளோனே

ஈடினை இல்லாத வேல் முருகா// - எங்கள்
ஈசன் திருமகனே நல்லூரா

உமை அம்மைப் பாலகனே பால குமரா
உந்தன் இன்னிசைப் பாடிடவே நான் வரவா//

ஊருலகம் எல்லாம் உன்நாமம் - நல்லூரா
ஊமை எந்தன் நினைவில் உன் திருவுருவம்

எங்கும் எதிரொலிக்கும் ஓங்காரம் - குமரா
எந்தன் நினைவில் என்றும் உன் கோலம்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுலகை யாளும் வேல் முருகா - குமரா
ஏழை எந்தன் குரல் கேட்கலையா

ஐயம் (மெ) எல்லாம் தீர்க்கும் குருபரனே - முருகா
ஐங்கரன்/தான் சோதரனே குமரேசனே//

ஒரு நாளும் உனை மறவேன் உமைபாலனே - என்றும்
ஒற்றுமையைத் தந்தருள்வாய் ஒளி வேலனே

ஓம் என்னும் பிரணவத்தின் பொருளுரைத்தாய் - குமரா
ஓங்காரமாய் நின்று வடிவெடுத்தாய்//

ஔவைக்கு உபதேசம் செய்தவனே - முருகா
ஔடதமான பொருள் ஆனவனே

நல்லைக் குமரன் இதழ் - 15
2007.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ட துயர் போதுமையா

நெற்றிக் கண்ணில் உதித்தவனே - எம்
நெஞ்ச மெல்லாம் நிறைந்தவனே
நல்லையம் பதி யுறையும்
நல்லூரானை நாடி வந்தோம்
நல்லருள் புரிய வாராய் - கந்தா
நின்னருளைத் தந்த ருள்வாய்
நல்லூர் நல்லையம் பதிக்குமரா

நீல கண்டன் மைந்தனே
நின் பாதம் சரணடைந்து
நிம்மதியைத் தேடுகின்றோம்
நீல மயில் மீதேறி வள்ளி தெய்வானையுடன்
நல்லருள் புரிய வாராய் - கந்தா
நின்னருளைத் தந்த ருள்வாய்
நல்லூர் நல்லையம் பதிக் குமரா

நானிலம் போற்றிடும் நல்லைக் குமரனே
நாவரண்ட போதிலும் - உன்
நாமம் தினம் துதிப்போம்
நாடி வந்தோம் கந்தா ஓடி வந்தோம்
நல்லருள் புரிய வாராய் - கந்தா
நின்னருளைத் தந்திடுவாய்
நல்லூர் நல்லையம் பதிக் குமரா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழனி மலைக் குமரனே
பன்னிரு கை வேலவனே
"பட்ட துயர் போதுமைய்யா" - ஐயா
பாவவினை நீக்கி பாவிகளைக் காத்திடவே
பறந்தோடி வந்திடுவாய்
நல்லருள் புரிய வாராய்க் - கந்தா
நின்னருளைத் தந்தருள்வாய்
நல்லூர் நல்லையம் பதிக் குமரா

ஏறுமயில் ஏறிடும் ஏழுமலையானே
எம்மினத்தை காத்திடவே
வேலோடு நீ வருவாய்
பச்சை மயில் மீதேறி விளையாடி வருங்குமரா
பரந்தாமன் மருகா சேவற் கொடியழகா
நல்லருள் புரிய வாராய் - கந்தா
நின்னருளைத் தந்த ருள்வாய்
நல்லூர் நல்லையம் பதிக் குமரா

நல்லைக் குமரன் இதழ் 17
2009.



# காண்டா மணியின் ஓசை கேட்குது

காலை வேளை விடியும் நேரம்
கான மழை பொழிவது போல்
காண்டா மணி/யின் ஓசை கேட்குது - நல்லூரானின்
காண்டா மணி ஓசை கேட்குது

சேவல் கூவும் ஒலி இசையில்
ஓம் என்னும் பிரணவம் கேட்டேன்
தோகை விரித்தாடும் மயிலின் - ஸ்
தோஸ்த்திரத்தின் சுதி லயங் கண்டேன்

வள்ளி தெய்வானையோடு தேரேறும் மயிலழகா
வந்த வினை தீர்த்தருளும் கந்தன் கருணையப்பா
நர்த்தனமும் கீர்த்தனமும் நாவினிக்கப் பாடியாடி
நல்லையம் பதியினிலே நல்லாட்சிப் புரிபவனே//

நல்லூரெனும் பேர் கொண்டு நானிலங் காப்பவனே
நாடி வரும் பக்தருக்கு நம்பிக்கையாய் இருப்பவனே
நீதி நிலைத்திடவே நேர்வழி காட்டிடவே
நீறணி கோலத்தோடு நாடுமன்பர்க் கீந்திடுவாய்

வலம்புரி பத்திரிகை
2013.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனிடம் மன்றாடுகின்றேன்

ஆறு காலப் பூஜையிலே - வேலோடு
ஆறு முகத்தானைக் கண்டேன்
ஆனை முகன் தம்பியிடம் - மன
ஆறுதலை வேண்டி நின்றேன்

மலைக் குறத்திவள்ளியுடன் - தெய்வானையும்
மணந்த குமரேச னிடம்
மக்கள் துயர் போக்கிடவே - நல்லூரானிடம்
மன முருகி மன்றாடு கின்றேன்

முட்கம்பி வேலிக்குள் - நாம்
முடங்கிக் கிடந்தாலும் - ஓம்
முருகா என்ற நாமத்தை
எந்நாளும் நான் உரைப்பேன்

மயில் மீதில் காட்சி தரும்
மலை மகளின் பாலகனே - கொட்டும்
மழை வெள்ளத்திலும் - உன்னை
மனமுருகி நான் தொழுவேன்

தேவர் குறை தீர்த்தவனே - எங்கள்
மனக் குறையை தீர்த்திடவே
வேலோடு நீ வருவாய் - நல்லூர்
வேலவனே அருள் புரிவாய்

வலம்புரி பத்திரிகை
10.08.2009.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறந்தோடி வரவேண்டும் நல்லூர்க் கந்தா

நடராஜன் மைந்தனே
நல்லூர்க் கந்தனே
நல்லருள் புரிய நீ வா! வா!
நிழலாகி விழுதாகி வா!
நிரந்தர தீர்வினைத் தந்திட நீ வா!

குன்றத்தில் ஆடும்
குமரவடி வேலனே
குறைகளை தீர்த்திட நீ வா! வா!!
குஞ்சரியாள் மணவாளா வா!
குலம் காக்கும் குமரனே நீ வா!

மருதமலை மருகனே
மக்கள் துயர் தீர்த்திட
மயில் மீதேறி நீ வா!வா!
மங்கள இசை முழங்க சங்கத் தமிழ் பண்ணிசைக்க
மனமுருகி நான் தொழுவேன் நீ வா!

பழனி மலைக் குமரனே
பஞ்சம் பசி போக்கிட
பறந்தோடி வரவேண்டும் வா!
பார்வதியாள் பாலனே நீவா!
பாவச் சுமை இறக்கிட நீ வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறு படை சூரனின்
சிரம் அறுத்த குமரனே
சிந்தையில் எந்நாளும் நிலைத்திட நீ வா! வா!
சிங்கார வேலனே செந்தமிழாய் நீ இருந்து
செஞ்சுடராய் அருள் சுரக்க நீ வா!

பச்சை மயில் வாகனனே
பன்னிருகை வேலவனே
பண்ணோடு பாட்டிசைப்பேன் நீ வா! வா!
பரந்தாமன் மருகனே வா!
பால சுப்ர மணியனே நீ வா!

வலம்புரி பத்திரிகை
21.08.2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரேறி நீ வர வேண்டும்

தேரேறி நீ வர வேண்டும் - நல்லூர்த்
தேரடி மண்ணில் நான் தவழ வேண்டும்

வண்ணமயில் மீதேறி நீ வரவேண்டும்
வன்னியூர் மீட்டு நீ தர வேண்டும்
வடி வேலோடு நீ வர வேண்டும்
வல்வினை அகற்றிட வரம் தரவேண்டும்

வள்ளி தெய்வானையுடன் நீ வர வேண்டும்
வஞ்சமிலா நெஞ்சிலே அருள் சுரக்க வேண்டும்
வண்ணத் தமிழ் காவியங்கள் நான் பாட வேண்டும்
வளம் கொழிக்கும் நாடாக செழித்திட வேண்டும்

சங்கரன் மைந்தனே நீ வரவேண்டும் - உந்தன்
சேவடியை யெந் நாளும் தாள் பணிய வேண்டும்
சங்கிலியன் ஆண்ட செந்தமிழ் நாட்டில்/லே
சந்ததிகள் வாழ்ந்திட காத்தருள வேண்டும்

வலம்புரி பத்திரிகை
29.08.2008.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் எந்நாளுமே...

அலங்காரக் கந்தனின் அழகு முகம் கண்டேன்
அழகன் முருகனிடம் அருள் வேண்டி நின்றேன்
ஆராத காதலோடு அவன் பாதம் பணிந்தேன்
ஆனைமுகன் தம்பியிடம் மனமுருகி நின்றேன்
நல்லைமா நகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் எந்நாளுமே

இருமாதர் புடைசூழ மாமயிலின் மீதமர்ந்து
இருளடைந்த ஆணவத்தின் இருட் பிணிப்பை நீக்கிடவே
ஈசன் உமையாளின் இளைய மகன் முருகனாய்
ஈராறு கரமுடைய ஆறுமுகத்தான் அவன்
நல்லைமாநகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் எந்நாளுமே

உயர்ந்த கோபுரத்தின் கலசமணி ஒலிக்க
உகங்கள் தோறும் வேத நெறி யோங்க
ஊருலகமெங்கும் நல்லூரான் பேர் சொல்ல
ஊடுறு ழூழ்வினைகள் பறந்தோடி விடுமே
நல்லை மா நகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் எந்நாளுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுத் திக்கெங்கும் காவடிகள் எடுத்தாடி வர
எல்லையிலா எழிலழகன் நல்லூர்க் கந்தனுக்கு
ஏழிசையும் திருமுறையும் செந்தமிழால் பாடிடவே
ஏது வரினும் நினைக்கினும் மேகமெனத் திகழ்ந்திடுவான்.
நல்லை மா நகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் எந்நாளுமே

ஐயன் சிவனார்க்குப் பொருளுரைத்த பாலனவன்
ஐந்துமொன்று ஆறாகி அணைத்து அருள் சுரப்பான்
ஒன்பது வாசல் கோபுரத்திலுள்ளிருந்து - நல்லூரான்
ஒளி திகழும் வேலோடு தேரேறி வலம் வருவான்
நல்லை மா நகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் எந்நாளுமே

ஓங்குபுகழ் சரவணப் பொய்கையில் உதித்த வா
ஓவியமாய் காவியமாய் தித்திக்கும் செந்தமிழால்
ஔவைக்குச் சுட்டபழத்தின் பொருளுரைத்தக் குமரா
ஔடதப் பொருளாகி மருந்தாகி அருள்வாய்
நல்லை மா நகர் வாழும் நல்லூர்க் கந்தனை
நல்லையம் பதியானை பணிந்தெழுவோம் எந்நாளுமே

உதயன் பத்திரிகை
19.08.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அமைதி வாழ்வைத் தேடுகின்றோம்"

அலை கடலின் ஓசையிலே
ஆர்ப்பரிக்கும் கடலலை/யே போல்
அன்னை தந்தை உறவிழந்து/தோம்
அகதிகளாய் அலைகின்றோம்
அருவினைகள் நீக்கி எமை
ஆதரிக்க வாருமம்மா
நாகம்மாள் தாயவளே
நயினை நாக பூசணியே
அலை...................................

கற்புக்கோர் நாயகியாய்
கண்ணகியாய் உதித்தவளே
கடுஞ் சினங் கொண்டதனால்
கடலலையில் வந்தவளே
கதி கலங்கிப் போனோமம்மா
கருணை மழை பொழிந்திடம்மா
நாகம்மாள் தாயவளே
நயினை நாக பூசணியே
அலை........................................

நாட் கடல் அலையினிலே
நயினா தீவுக் கரையினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக படம் மீதினிலே
நர்த்தனமாய் அமர்ந்தவளே
நாதியற்று அலைகின்றோம்
நல்லருளைத் தாருமம்மா
நாகம்மாள் தாயவளே
நயினை நாக பூசணியே
அலை ……………………………………

அன்னதான மடமைத்து - தினம்
அடியவர்க்கு அமுதூட்டும்
அமிர்த சுரபி நாயகியே
அமிர்தாம்பிகைத் தாயவளே
"அமைதி வாழ்வைத் தேடுகின்றோம்"
அகிம்சை (யை) பாதை காட்டிடம்மா
நாகம்மாள் தாயவளே
நயினை நாக பூசணியே
அலை……………………………………

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய புனராவர்த்தன மஹாகும்பாபிஷேக மலர் "நாகேஸ்வரி அருளமுதம்" 2012

## ஆலம் விழுதினிலே
## ஆடி வருஞ்சுந்தரியே

வாடியம்மா காட்டம்மன் தாயவளே
வாடியம்மா ஸ்ரீமுத்து மாரியம்மா//

செங்கமலப் பட்டுடுத்தி செம்பாம்பின் மீதேறி
செய்தவினை போக்கிடவே செந்தாமரைத் தாயவளே//
வாடியம்மா..............................

கருகுமணி மாலையிட்டு கரும்பாம்பின் மீதேறி
கருமை வினை போக்கிடவே கருமாரித் தாயவளே//
வாடியம்மா..............................

நாகசிம்மாசனத்தில்/லே (நர்த்தனமாய்) வீற்றிருக்கும் தாயவளே
நல்லநீதி வேண்டுமடி நாகேஸ்வரித் தாயவளே//
வாடியம்மா..............................

ஆலமரச் சோலையிலே ஆலம் விழுதினிலே
ஆடி வருஞ் சுந்தரியே அடி பணிந்தோம் தாயவளே//
வாடியம்மா ..............................

அக்கராயன் (ஸ்) கந்தபுரம் அண்ணாசிலையடி வீதியிலே
ஆனந்தமாய் அமர்ந்திருக்கும் காட்டம்மன் தாயவளே//
வாடியம்மா ..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைமரம் வீரமரம் சோலையாகச் சூழ்ந்திருக்க
பக்குவமாய் வீற்றிருக்கும் பார்வதியாள் தாயவளே//
வாடியம்மா ..............................
சிவனாரின் ஈஸ்வரியே சிலம் பொடித்தக் கண்ணகியே
சிவகாம சுந்தரியே சீதாபிராட்டித் தாயவளே//
வாடியம்மா ..............................

மதுரையை எரித்தவளே மங்கையர்குலம் காத்தவளே
மக்கள் மனங் குளிர மனமிரங்கும் தாயவளே//
வாடியம்மா ..............................

நீரோடும் ஆற்றருகே நெல் மணிகள் விளைந்திருக்க
நிர் வளமும் கனி வளமும் ஆவினங்கள் பால் சொரிய
மும்மாரி பெய்ய வேண்டும் மாண்புகளென்றும் உய்ய வேண்டும்
கார் வளம் பெருகி இன்பக் கலைவளமும் பெருக வேண்டும்//
வாடியம்மா ..............................

உடுக்கோசைக் கேட்டாலே உருவெடுத்து வந்திடுவாய்
பாற் கரகம் எடுத்தாலே பறந்தோடி வருவாயம்மா
கோபுரத்துக் கலசங்கள் ஊரையெல்லாம் காத்திடுமே
கோயில் மணி யோசை கேட்டுன் திருவடியை நாடி வந்தோம்//
வாடியம்மா ..............................

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் காட்டம்மன் என்னும் ஸ்ரீமுத்துமாரி அம்மனின் கும்பாபிஷேக சிறப்பு மலர்
2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இன்பத் தமிழ் அழகன் சந்நதிக் குமரன்"

அலைகடல்கள் அலை மோதும் கரையினிலே - எங்கள்
ஆறு முகத்தான் அமர்ந்தான் அருகினிலே
"இன்பத் தமிழ் அழகன் சந்நதிக் குமரனவன்"
ஈராறு கரங் கொண்ட ஓராறுமுகத்தான் - கந்தன்
ஈசனின் இளையமகன் மாயனின் மருகனவன்

உனையன்றி எனக்கருள எவருமில்லை- கந்தா
உன் துணையே எனைக் காக்கும் கவலையில்லை
உன் நாமம் தினமுரைப்பேன் குறையேது மில்லை குமரா
ஊரெல்லாம் கூடி நிற்கும் செல்வச்சந்நதி வாசலிலே
ஊருலகம் எங்கும் உந்தன் கந்தன் புகழ் பாடிடுமே

எனதென்ற அகங்காரம் அவன் பாதம் பணிந்தாலே
எளிதி(னி)ல் ஓடி விடும் ஓம் முருகா என்றாலே
எனதென்ற அகங்காரம் அவன் பாதம் பணித்தாலே
எளிதி(னி)ல் அகன்று/பறந்து விடும் கந்தன் பெயர் சொன்னாலே
ஏறுமயிலேறி விளையாடி வருங் குமரன் - தேர்
ஏறி வள்ளி தெய்வானையுடன் வலம் வருவான் கந்தன்

ஐங்கரத்தானின் அன்புத் தம்பியவன் முருகன்
ஐயன் சிவனாரின் சிங்கார வேலனவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாய் திரண்ட ஆறுமுகத்தான் அழகனவன்
ஓதிடும் அன்பர்க் கெல்லாம் காட்சி தரும் சுப்ரமணியனவன்
ஔவைக்குச் சுட்ட பழங் கொடுத்த வேலனவன்
ஔவையின் செந்தமிழால் மயங்கினான் கந்தன்
ஔவையின் செந்தமிழால் மயங்கினான் கந்தனவன்

சந்நிதி முருகன் சந்நிதானத்தில் வரையப்பட்ட கவிதை
03.01.2020.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையாளி கொரோனாவை விரட்டிட வாடியம்மா

அபிராமித் தாயே அகிலாண்டேஸ்வரியே
அகிலத்தைக் காத்திடம்மா
கொடுங்கோலாய் ஆட்சி செய்யும்
கொலையாளிக் கொரோனாவை
ஓடோட விரட்டிட
வீரமாகாளி சங்கரி சௌந்தரி
ஓடோடி பறந்தோடி வாடியம்மா - கொரோனாவை
விரட்டிட வாடியம்மா
தாயே காத்திட வாடியம்மா - அகிலத்தை
மீட்டிட வாடியம்மா

கொரோனா என்னும் கிருமி
நாளுக்கு நாள் பெருகி
உலகத்தை/அகிலத்தை அழிக்குதம்மா
கொடிய நோய்க் கிருமியை
ஓடோட விரட்டிட
ஓங்கார ரூபினியே சிவகாம சுந்தரியே
ஓடோடி பறந்தோடி வாடியம்மா - கொரோனாவை
விரட்டிட வாடியம்மா
தாயே காத்திட வாடியம்மா - அகிலத்தை
மீட்டிட வாடியம்மா

பொன்னான தேசமெல்லாம்
பொசிங்கிப் போகுதம்மா
சொந்தங்கள் பந்தமெல்லாம்
தூரமாய்ப் போச்சுதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் வீடெல்லாம்
வெறிச் சோடிக் கிடக்குதம்மா
பொன்னாத்தாத் தாயவளே
பொல்லா நோய்/யை விரட்டிட வே
பொடி நடையாய் வந்திடம்மா
கருமாரி மகமாயி காட்டம்மன் தாயவளே
ஓடோடி பறந்தோடி வாடியம்மா - கொரோனாவை
விரட்டிட வாடியம்மா
தாயே காத்திட வாடியம்மா - அகிலத்தை
மீட்டிட வாடியம்மா

மெஞ்ஞானம் விஞ்ஞானம்
ஒன்றாகி நிற்கையிலே
விதி என்ன? சதி என்ன?
மதி யாலே வென்றிடவே
பூமித் தாய் மடியினிலே / மடியிருந்து
பொல்லா நோய்/யை விரட்டிடவே
ஓய்வில்லை உறக்கமில்லை - ஒரு நேரம்
உணவுண்ண நேரமில்லை //
வைத்தியரும் தாதியரும்
செவிலியரும் போராட
கொரோனா என்னும்
கொடிய நோய்க் கிருமியை
ஓடோட விரட்டையிலே - அம்மா தாயே

பக்கத்தில் வந்து துணையாக நின்று
ஆறதல் தந்திடம்மா - தாயே
அரவணைத்துக் காத்திடம்மா
பூமகளே சுகநிதியே நாமகளே ஈஸ்வரியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடோடி பறந்தோடி வாடியம்மா - கொரோனாவை
விரட்டிட வாடியம்மா
தாயே காத்திட வாடியம்மா - அகிலத்தை
மீட்டிட வாடியம்மா

திருநீறு பட்டாலே
தீயவினை பொசிக்கிடுவாய்
தேசிக்காய் நெய்விளக்கில்
தீமைகளை அழித்திடுவாய்
ஒரு பிடி வேப்பிலையில்
பிணி நோய்கள் விரட்டிடுவாய்
உள்ளங்கை தீர்த்தத்திலே
உயிர்களைக் காத்திடுவாய்

பார்வதித் தாயவளே
பரமசிவன் உத்தமியே
பசுமையான ஓர் உலகம்
படைத்திட வாடியம்மா
பூரணியே சீரணியே நாரணீயே தாரணியே
ஓடோடி பறந்தோடி வாடியம்மா - கொரோனாவை
விரட்டிட வாடியம்மா
தாயே காத்திட வாடியம்மா -அகிலத்தை
மீட்டிட வாடியம்மா

கொரோனா நோயினை மையமாக வைத்து பக்திக் காவியமாக வரையப்பட்ட கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணற்காட்டுக் கந்தனவன் தேர் ஏறி வருகின்றான்

அலை கடலின் அலையோசை
ஏழிசையாய்த் தாலாட்ட
அழகொழுகும் இளமுருகன்
தேரேறி வருகின்றான்
அணையாத ஒளியாக
தமிழ்த் தாயின் புகழாக
அவனியிலே நாம் வாழத்
தேரேறி வருகின்றான்
மறவன்புலோ தனங்கிளப்பு
மணற்காட்டுக் கந்தனவன்
மணித் தூண்கள் சேர்ந்தாட
தேரேறி வருகின்றான்
வருகின்றான் வருகின்றான்
மணற்காட்டுக் கந்தனவன்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்.

ஆடுமயில் மீதமர்ந்து
இரு மாதர் புடைசூழ
ஆறுபடை வீடுடையான்
தேரேறி வருகின்றான்
ஆணழகன் முருகனவன்
ஆனந்த நடனமிட்டு
ஆதி சிவன் மைந்தனவன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரேறி வருகின்றான்
மதி சூடி மானேந்தும்
மா மறையோன் ஈன்ற
மணற் காட்டுக் கந்தனவன்
தேரேறி வருகின்றான்
வருகின்றான் வருகின்றான்
மணற்காட்டுக் கந்தனவன்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்.


இன்றெமது வாழ்வமைய
தமிழ்க் கடவுளானாய்
இன்னல்கள் போக்கிடும்
வேலழகன் ஆனாய்
இனி வருங் காலங்கள்
இனிதாய் அமைந்திடவே
மணற்காட்டுக் கந்தனவன்
தேரேறி வருகிறான்
கலி பிணி கொரோனா
வேல் பட்டோடிட
கார்த்தி கேயன் அவன்
தேரேறி வருகின்றான்
வருகின்றான் வருகின்றான்
மணற்காட்டுக் கந்தனவன்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு கரங் கொண்ட
மாயனின் மருகனவன்
ஈஸ்வர னார் இளைய மகன்
தேரேறி வருகின்றான்
ஈராறு விழி தோறும்
கருணை விழி யாட
வேல் விழியார் இருவருடன்
தேரேறி வருகின்றான்
தேவர்களும் முனிவர்களும்
தேனுருகப் பாடிடவே
மணற் காட்டுக் கந்தனவன்
தேரேறி வருகின்றான்
வருகின்றான் வருகின்றான்
மணற்காட்டுக் கந்தனவன்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்

உன்மீது எனதுள்ளம்
உளமுருகித் தாள் பணிவோம்
உறவுகளைக் காத்திடவே
தேரேறி வருகின்றான்
உமையாளின் பாலகனே
உளமெங்கும் இருள் நீக்கி - பூ
உலகைக் காத்திடவே
தேரேறி வருகின்றான்
உமை மகிழ்ந் துறவாடும்
வண்ணப் பொற் சித்திரமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத் துதிப்போர்க்கு
சித்தம் மகிழ்வுறவே
மணற் காட்டுக் கந்தனவன்
வருகின்றான் வருகின்றான்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்.

ஊழ்வினை போக்கியே
வாழ்வினை உயர்த்திட
ஊர் தோறும் கோயில் கொண்ட
அழகு முக வேலனவன்
ஊருலக மெங்கும்
செந் நெல் விளைந்திட
மாரிமழை பொழிந்திட
ஆவினங்கள் பால் சொரிய
மணற்காட்டுக் கந்தனவன்
தேரேறி வருகின்றான்
ஊரும் நாடும் தேசமும் வாழ
நஞ்செனச் சூழ் கிருமி வேல் பட்டோடிட
சூரனை அழித்து இடர்த்துயர் நீக்கிய
மணற் காட்டுக் கந்தனவன்
வருகின்றான் வருகின்றான்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்.

எல்லையில்லா அருள் சுரக்கும்
சுப்ர மணியன் அவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மினத்தை வாழ வைக்க
தேரேறி வருகின்றான்
என் றெமது உயர்வுக்காய்
வேலேந்தும் மா மருகன்
எங்கள் குலங் காத்திடவே
தேரேறி வருகின்றான்.

ஏழையின் இதயத்தில்
தமிழ்க் கந்தனானவனே
ஏந்தலே உனையன்றி
அகிலத்தில் யாருளரோ
ஏறுமயில் மீதமர்ந்து
ஏழுலகைக் காத்திடவே
மணற் காட்டுக் கந்தனவன்
வருகின்றான் வருகின்றான்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்.

ஐயமின்றி நாம் வாழ
அல்லல் தீர்த் தெமையாள
ஐங்கரத்தான்தம்பி அவன்
தேரேறி வருகின்றான்
ஐயன் சிவனார்க்கு
ஞானம் புகட்டியவன்
வள்ளி தெய்வானையுடன்
தேரேறி வருகின்றான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐய நீர்க் குமிழியான
வாழ்வில் கனதி பெரும்
அசுர குணம் அழித்திட
தேரேறி வருகின்றான்
ஐயனே அப்பனே
மணற் காட்டுக் கந்தனே
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்


ஒன்று கூடி அடியார்கள்
உன் புகழைப் பாடிடவே
ஒப்பற்றக் கருணை யால்
அன்பர் உள்ளம் கவர்ந்தவன்
ஒப்பில்லாத் தெய்வமாய்
ஒளி திகழும் முருகனாய்
மணற் காட்டுக் கந்தனவன்
தேரேறி வருகின்றான்
செந்தணலில் உருவாகி
செந்தாமரையில் வளர்ந்தவன்
ஞானப் பழமாகி
ஏழை எனக் கருள் புரிய
மணற் காட்டுக் கந்தனவன்
வருகின்றான் வருகின்றான்
செஞ்சுரடாய் அருள் சுரக்கும்
சிங்கார வேல் முருகன்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் என்னும் பிரணவத்தின்
பொருள் தெரியாப் பிரம்மனை
ஓங்கார வடிவமாய்
சிறையிட்டப் பிள்ளையிவன்
ஓராறு முடி தோறும்
மணிகள் ஆடிட
ஓம் என்னும் மந்திரம்
எங்கும் ஒலித்திட
ஓங்கும் மேன்மையும்
புனிதமும் மலர்ந்திட
கோமகனார் முருகனவன்
தேரேறி வருகின்றான்
பண்ணிசையோடு தேனிசை முழங்க
மணற் காட்டுக் கந்தனவன்
வருகின்றான் வருகின்றான்
சங்கத் தமிழ் வளர்த்த
சங்கரன் மைந்தனவன்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்.

ஔவைக்குச் செந் தமிழை
அழகுற உரைத்தவன்
சுட்டப் பழத்தின் சுவையை
தேன் தமிழால் சுவைத்தவன்
பெம்மானே எம்மானே
நற்றமிழின் நாயகனே
பூங் கொல்லை மணம் பரப்பு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரேறி வருகின்றான்
ஒளி திகழும் சூலமொடு
முடுக்கையும் யேந்தி
மெஞ்ஞானத் தூண்டு கோலாய்
பைரவர் அருகிருக்க
கன்னி வள்ளி தெய்வானையுடன்
கறையான் புற்று முருகனவன்
ஒளிர் ஞான வடிவாகி
கனிவோடு அருள் சுரக்க
ஔடதப் பொருளாகி
நல்லாட்சிப் புரிந்திடவே
அழ கொளிரும் ஆறுமுகன்
அலங் கரித்த தேரில் அமர்ந்து
அடியவர்கள் வடம் பிடித்து
அரோகரா எனக் கூவ
வருகின்றான் வருகின்றான்
மணற் காட்டுக் கந்தனவன்
தங்க ரதம் மீதமர்ந்து
தேரேறி வருகின்றான்.

சாவகச்சேரி தனங்கிளப்பு மறவன்புலோ
தேர் வெள்ளோட்டத்திற்கான கவிதை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ஸ்கந்தபுரம் முருகப் பெருமானின் பஜனை

அறுகொடு மலர் மாலை அணிந்தவனே
ஆத்தி சூடி யமர்ந்த தேவனே
பிரணவப் பொருளான பெருந்தகையே
பெருகிடு மன்பின் பெருமருந்தே
சீல மோங்கும் கல்விச் செல்வம்
ஞால மோங்கத் தந்தருள்பவனே
ஓதுமா மறைநான்கும் ஒருங்கு நின்றருள் பவனே
ஓங்கார ரூபனே முத்தமிழ் முதல்வனே
ஐங்கரா போற்றி ! போற்றி!!
ஐங்கரா போற்றி ! போற்றி!!

உமை சிவன் பாலகனே பாலமுருகா முருகா
உன்நாமம் தினமுரைப்பேன் பாலகுமாரா - ஸ்
கந்தபுரம் தன்னில் வீற்றிருக்கும் பாலமுருகா
கணப் பொழுதும் உனை மறவேன் பாலகுமரா

கந்தா கடம்பா எங்கள் காரத்திகேயா - முருகா
காத்தருள்வாய் ஏழைகளைக் கார்த்திகேயா
அல்லலுறும் தமிழினத்தைக் கார்த்திகேயா - முருகா
அரவணைத்தோர் அருள்புரிவாய் கார்த்திகேயா

பழனி மலையில் வாழும் பாலமுருகா - முருகா
பாலகரை காத்தருள்வாய் பாலமுருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சம் பசியில் வாடும் பாலகரை முருகா
பசிதீர்த்தோ அரவணைப்பாய் பாலகுமரா

கதிர்காமக் கந்தனே சண்முகவேலா -முருகா
கஸ்ட்டங்களைக் களைந்திடுவாய் சண்முகவேலா
திருப்பதியில் அமர்ந்திருக்கும் சண்முகவேலா - ஓமெனம்
திருமந்திரம் ஓது அருள் புரிவாய்

குன்றத்தில் ஆடுகின்ற குமரேசா - முருகா
குறைகளை தீர்த்தருள்வாய் குமரேசா
கூடி லந்த பறவை போல வாழுகின்ற - எங்கள்
சந்ததியைக் காத்தருள்வாய் குமரேசா

மாயோன் மருகனின் மருமகனே முருகா
மாயனுடன் வந்தருள் புரிந்திடுவாய்
மரநிழலில் வாழுகின்ற எம்மின மக்கள் முருகா
மன நிறைவோடு வாழ வந்தருள் புரிவாய்

சிவனாரின் நெற்றிக் கண்ணிலு தித்தவனே - முருகா
சிந்தனையில் சிவசின்னம் தந்தருள்வாய்
முடிவில்லாக் கருணை உள்ளங் கொண்டகுமரா - எங்கள்
முந்துங் கருமை வினை போக்கிடுவாய்

தொந்திக் கணபதியின் சோதரனே - குமரா
தொல்வினை அகலவே வரமருள்வாய்
கோலமயில் வாகனனே கார்த்திகேயா - குமரா
கோடான இன்ப வாழ்வினைத் தந்தருள் புரிவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகங் கொண்டவனே ஆறுமுகா - முருகா
ஆறுதலைத் தந்தருள்வாய் பன்னிருகை வேலா
வேலினைக் கையேந்தும் வேல்முருகா - முருகா
வள்ளி தெய்வானையுடன் வந்தருள்புரிவாய்

சூரனை வதஞ் செய்த சுப்ரமண்யா - குமரா
சூரியனாய் சந்திரராய் வலம் வருவாய்
செந்தமிழர் போற்றி சைக்கும் சுப்ரமண்யா - குமரா
சாமவேத கீதம் பாடும் சுவாமி நாதா

சந்ததிகள் நிம்மதியாய் வாழ வேண்டும் - முருகா
தீயோர்கள் இம்மண்ணிலே ஒழிய வேண்டும்
நல்லதோர் சமுதாயம் உருவாக வேண்டும் - முருகா
நம் நாடு செழித்தோங்கி வளர வேண்டும்

திருச் செந்தூர் குமரனை சரண் புகுந்தோம் - முருகா
திருவருள் தந்தருள்வாய் திருக்குமரா
ஈராறு கையுடைய ஆறுமுகனே - முருகா
இருகரங் கூப்பி நின்றோம் எழுந்தருள் புரிவாய்

முருகா முருகா ஸ்கந்தபுரம் முருகா - முருகா
முருகா முருகா எங்கள் சண்முக வேலா
முருகா முருகா எங்கள் திருக்குமரா - முருகா
முருகா முருகா அரகர முருகா//

ஓம்முருகா

1997.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி ஸ்கந்தபுரம் காட்டம்மன் எனும் ஸ்ரீ முத்துமாரித்தாயாளின் திருவூஞ்சல்

**காப்பு**

சீர்மேவு ஈழவளத் திருநாட்டில்
சிவனோங்கு யாழ்ப்பாணத் தென் திசைப் பதியில்
ஏர்மேவு கிளிநொச்சி யெனும் மாபெருந் நகரில்
ஏருழவர் வாழும் அக்கராயன் குளம் (ஸ்) கந்தபுரமூரில்
பார்மேவு அண்ணாசிலை வீதியில் பதியுரையும்
பார்வதியாள் காட்டம்மனெனும் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு
கார்மேவு மணி ஊஞ்சல் பாடலை பைந்தமிழால் பாட
காராருஞ் விநாயகன் தாள் பணிந்து வாழ்வோம்.

**நூல்**

பலனோங்கு நான் மறைகள் தூண்களாக
பகர்வைர ரத்தினமே விட்டமாக
புலனோங்கு சிவாகமங்கள் பலகையாக
புகழ் னோங்கு பிரணவப் பொற் பீடமாக.
வலனோங்கு தவநெறிகள் வடங்களாக
மலர் மகளுங் கலைமகளும் வடந்தொட்டாட்ட
நலனோங்கு ஸ்கந்தபுரம் அண்ணாசிலை வீதியில் பதியுரையும்
தாரணியே காட்டம்மனெனும் ஸ்ரீமுத்து மாரித்தாயேஆடீரூஞ்சல்.

ஆலரசு சோலை யெங்கும் அன்னையவள் வீற்றிருக்க
ஆர்வமுடன் அடியவர்கள் அஞ்சலித்து தோத்தரிக்க
பாலதனைப் பொழிந்து தரும் பசுக்கள் மேயும்
பசுந்தரையும் மலர் வகையுங் பரந்து காணும்
நீலநிற வான்னின் றுநித்தம் மழை பொழியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள் வயலுந் களனி வாழ் உழவர்கள் வாழும்
சாலவுயர் ஸ்கந்தபுரம் அண்ணாசிலை வீதியில் பதியுரையும்
சிங்கவாகினியே காட்டம்மனெனும்ஸ்ரீ முத்துமாரித்தாயே ஆடீருஞ்சல்

காராருங் கனிமொழிக் காருண்ய தேவியவள்
கயமுகக் கணபதி கதிர் வேலோடு பைரவருந்
சீராருங் காளி ஐயனார் நாக தம்பிரானோடு
பரிவாரத்திரு மூர்த்திகளுந் சூழ்ந்திருக்க
பாராரும் பெருநோய்கள் பஞ்சம் பிணி பறந்தோட
பணியுமன்பர் பிணியகற்றும் சிவகாம சுந்தரியாள்
நீராரும் ஸ்கந்தபுரம் அண்ணாசிலை வீதியில் பதியுரையும்
பூமகளே காட்டம்மனெனும் ஸ்ரீ முத்துமாரித்தாயே ஆடீருஞ்சல்

தாயாகி சிந்தனையில் தவயோக வாழ்வருளுந்
தூமதியாய் தூநிழலாயத் தாரகமாய் மந்திரமாய்
மாயாத மகமாயை மாசகற்றும் அருமருந்தாய்
மாதா பிதாவாக மாங்கல்ய வாழ்வழிக்கும்
ஆயாத போதெனினும் அருவுருவாய் நின்றருளும்
ஆராத காதலொடு அணைத்தன்பை அளித்தருளும்
காயாகி கனியாகி ஸ்கந்தபுரம் அண்ணாசிலை வீதியில் பதியுரையும்
கற்பகவல்லி காட்டம்மெனும் ஸ்ரீ முத்துமாரித்தாயே ஆடீருஞ்சல்

செந்தாமரை வயல்களெங்கும் செழித்தோங்க
செம்பொன்னா நெல் விளையும் வன்னியூரில்
செந்தமிழாய்ச் சிறந்த கல்விக் கூடங்கள் சூழ்ந்த
சங்கத் தமிழ் மூன்றுந்தரும் சகலகலா வல்லியவள்
சந்தமும் தர்மநெறி என்றென்றும் தழைத்தோங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையெ லாந்தருஞ் சைவத் திருமணியாள்
சிந்தையில் நிறைந்து அண்ணாசிலை வீதியில் பதியுரையும்
சீரணியே காட்டம்மனெனும் ஸ்ரீ முத்துமாரித்தாயே ஆடீரூஞ்சல்

வெள்ளி செவ்வாய் விளக்கேற்றி துளிர்ந்த மலர் தூவி
வந்து வந்து அடியவர்கள் வழுந்திற் பொங்கலிட
அள்ளுமவல் கடலையொடு கூழமுதும் படைத்து
ஆரணமந் திரங்களவை அந்தணர்கள் தினமோத
தெள்ளுதமிழ் திருமுறைகள் தெளிவாய்ப் பாடி
தேவாதி தேவரெல்லாந் திரண்டு தோன்றி
வெள்ளிமலையேறி (ஸ்கந்தபுரம்) அண்ணாசிலை வீதியில் பதியுரையும்
விண்ணாளுங்காட்டம்மனெனும்ஸ்ரீ முத்துமாரித்தாயே ஆடீரூஞ்சல்

பொன்னுமணி வைரங்கள் அங்கமெ லாஞ்சூட்டி
புனுகு சவ்வாதணிந்து முல்லை மலர்சூடி
மின்னுநவ ரெத்தினங்கள் செம்பவளப்பட்டுத்தி
மீனாட்சி யாகவரும் தேவியுமை பார்வதியாள்
தன்னிகரிற் கருணை யொழி தாவிடுந் தாயாய்
தீங்கொன்றும் வராதே தினமுங் காத்து
இன்பரசந் ததும்புமுயர் அண்ணாசிலையடி வீதியில் பதியுரையும்
இஸ்ட தெய்வக் காட்டம்மனெனும் ஸ்ரீ முத்துமாரித்தாயே ஆடீரூஞ்சல்

நாற்றிசையும் சோலைமகன் ஏழிசையாய் தாலாட்ட
நளின மலர்ச் சுந்தரியாள் சயனித் துறங்கிட
சிற்சபையில் வீற்றிருக்கும் இத்தியடி அம்மனவள்
சாராசங்கள்காத்தருளும்கண்ணபிரானோடுதொட்டிலடிப்பிள்ளையாரும்
நற்போத நெறி காட்டும் ஸ்கந்தபுர முருகனவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோடும் ஆற்றருகே நாகதம்பிரான் குடைபிடிக்க
பேற்றினை யருளி ஸ்கந்தபுரம் அண்ணாசிலை வீதியில் பதியுரையும்
பொன்னவளே காட்டம்மனெனும் ஸ்ரீ முத்துமாரித்தாயே ஆடீரூஞ்சல்

பூரணநல்லை புதுமண நாயகியாய் சீரணியாய்
பேரின்பச் சுவையான காட்டம்மன் தாயவளே
ஆரண நல்லை அற்புத நாயகியாய் தாரணியாய்
ஆர்த்த பிறப்பறுத் தாள் நிதியே மாரணியே
தாரண மரகதப் பொன்னவர வாலிழையே
தங்கத் தமிழாய் திகழ்ந்தவளே தவநிதியே
சீரணி நாயகியாய் ஸ்கந்தபுரம் அண்ணாசிலையடி வீதியில் பதியுரையும்
சங்கரியே காட்டம்மனெனும் ஸ்ரீ முத்துமாரித்தாயே ஆடீரூஞ்சல்

அண்டமெலாம் அசைந்தாடக் காட்டம்மனெனும் தாயவளே
ஆலமரச் சோலையிலே ஆனந்தமாய் ஆடீரூஞ்சல்
உண்ணாமுலை உமையாளென்னும் தாயவளே
உயர் சூலத் தோடுடுக்கை யாடிநீ ஆடீரூஞ்சல்
தண்ணிய நீர் நிழலாய்த் தருபுனித நதியவளே
தவயோக வாழ்வருளுந் சுந்தரியே ஆடீரூஞ்சல்
அண்ணா சிலையடி வீதியில் பதியுரையும் காட்டம்மன் தாயவளே
ஆரம்பையர்கள் தொட்டாட்ட ஸ்ரீ முத்துமாரித் தாயே ஆடீரூஞ்சல்

**வாழி**

வானவரு மந்தணரும் பசுக்குலமும் வாழி
வளர்கல்வி செல்வமொடு செய்யறங்கள் வாழி!!
ஆனமறை யாகமும் அருந்தமிழும் வாழி
அடியவரும் திருமுறையு மைந்தெழுத்தும் வாழி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானமொடு உழுமுழவர் நற்குலமும் வாழி
தந்தை தாய் சிறுவரொடு தகும் கற்பும் வாழி!1
தேனருவியோடு அக்கராயன் ஸ்கந்தபுரம் வாழி
திருவிழியால் காட்டம்மன் என்னும் ஸ்ரீ முத்துமாரித் தாயே வாழி!!

**எச்சரீக்கை**

தண்ணார் தமிழ் மூன்றும் தரும் தாயாள் எச்சரீக்கை
தாவிலறம் எண்ணான்கும் தருவாள் எச்சரீக்கை
கண்ணாயிர முடையால் கதிர்காளி எச்சரீக்கை
காடாண்டு நாடாண்டு காப்பாள் எச்சரீக்கை
பண்ணார் திரு முறையாயருள் பரமே எச்சரீக்கை
பணியும் மன்பர் பிணியகற்றும் பரையே எச்சரீக்கை
திண்ணார் தவ மோங்க வருள் காட்டம்மனே எச்சரீக்கை
தேமலி தேவி ஸ்ரீ முத்துமாரித்தாயே எச்சரீக்கை

**பராக்கு**

மலையான்மக ளாகவளர் மருந்தே பராக்கு
மாறாத் திரு ஞானம் தரு தீர்ப்பாய் பராக்கு
அலைபுனல் சேர்கங்கா நதி அணைத்தாய் பராக்கு
ஆடிப் பெருக் காயோட்டம் அருள்வாய் பராக்கு
கலைவாணி ரூபிணியாய் பரந்தாய் பராக்கு
கலந்தருள் கனகயா ழிசைப்பாய் பராக்கு
சிலையாயுயர் இரண்டாந்திட்ட அம்மனே பராக்கு
சிவசக்திக் காட்டம்மனெனும் ஸ்ரீ முத்தமாரியே பராக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லாலி சுப லாலி**

தெள்ளமுதாய்த் தேனிலவாயத் திகழ்வாய் லாலி
திங்கள் வளர்திருக் கொழுந்தே தேவி லாலி
வெள்ளை விடை யேரி யூர்ந்து விரைவாய் லாலி
வேப்பந்தளிர் மேனியளால் ஒளிர்வாய் லாலி

லாலி சுப லாலி லாலி சுப லாலி
லாலி சுப லாலி லாலி சுப லாலி

வெள்ளி செவ்வாய் விளக்கேற்ற வெளிப்பாய் லாலி
வீரமொடு கல்வி செல்வம் தருவாள் லாலி
தெள்ள தமிழ் திருமுறைகள் வளர்ப்பாய் லாலி
தக்கவரந் தந்தருளும் காட்டம்மனே லாலி

லாலி சுப லாலி லாலி சுப லாலி
லாலி சுப லாலி லாலி சுப லாலி

**மங்களம் திரு மங்களம்**

சீர் பொங்கு மெய்யம்மை சீர்மலியு மோங்காரத்
திகழீச திருமங்களம்!!
சிற் சபையில் நடனமிடு சிவகாமி மனமகிழ
சிவநாத திருமங்களம்!!


கார் பொங்கு கற்பகங் கண்வளரு மற்புதங்
காண் தேவி திருமங்களம்!!
ஈரேழுலகங்கள் கோயிற் பரிபாலகங்
கொள் சூழவே திருமங்களம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார் பொங்கு தக்கனைத் தடிவீர பத்திரத்
தனி வீர திருமங்களம்!!
தாய் தந்தை வலம் வந்து தருமாங்கனி பெற்ற
தனி வேழ திருமங்களம்!!

பேர் பொங்க ஸ்கந்தபுரம் பெரும் பதியில் மேவிடும்
முகமாரித் திருமங்களம்!!
போதாந்த மெய் காட்டும் காட்டம்மன் நாயகி
பெருமாட்டி திருமங்களம்!!
ஸ்ரீ முத்து மாரிக்கு திருமங்களம்
மங்களம்! மங்களம்!! மங்களம்!!!
மங்களம்! மங்களம்!! மங்களம்!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி, தனங்கிளப்பு, சுண்டிக்குளம் வியாளவளவு வீரகத்திப் பிள்ளையார் திருவூஞ்சல்

**காப்பு**

*சீர்மேவு தெய்வ நலஞ் சிறப்புற் றோங்கச்*
*சீர்பூத்த திருமுறைகள் நெறியு மோங்கத்*
*தெள்ளு தமிழ் புலவர்கள் சிறந்து வாழ்ந்த*
*தென்மராட்சித் தெற்கில் தனங்கிளப்பு வடக்கில்*
*வியாளவளவு சுண்டிக்குளம் அரும்பதி யிலுறையும்*
*வந்த வினை வேரறுக்கும் வீரகத்தி விநாயகரை*
*தெரு மகிழ வூஞ்சலிசைத் தேனாய்ப் பாயத்*
*திருவருளுங் கணபதிதான் காப்பு*

**நூல்**

*சீர்மேவு நான் மறைகள் தூண்களாகச்*
*சிவம் மேவு மாக மங்கள் விட்ட மாகப்*
*பார்மேவு நல் லறங்கள் கயிற தாக*
*பரங் கருணைத் தவிச முயர் பீட மாக*
*ஏர்மேவு தொழிலுழவர் ஏற்றம் மேவ*
*ஏசற்ற காட்சி யெங்கும் இசைந்து தோன்ற*
*வருமுறைகள் காக்குமுயர் சுண்டிக்குளப் பதியில்*
*வியாளவளவு வீரகத்தி விநாயகனே ஆடீரூஞ்சல்*

*செந்தாமரை வயல் செழித் தோங்கச்*
*சேர்ந் திருந் தயலவர் விருந்தோம்ப*
*வந்தா ரெவர்க்கும் வாழ் வளித்தே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமொடு வாழ வழி வகுத்தே
மூவுலகுக்கு மூத்த முதல்வனாய்
மூஷிக வாகன மூர்த்தி யுமாய்
வருமுறைகள் காக்குமுயர் சுண்டிக்குளப் பதியில்
வியாளவளவு வீரகத்தி விநாயகனே ஆடீரூஞ்சல்

அறுகம்புல் மலர்மாலை அணிந்து மகிழ்வோனே
ஆரார்க் களப்பரிய ஆனை முகத்தோனே
சங்கத் தமிழ் மூன்றுந் தந்த சற்குருவோனே
சராசங்கள் யாவுற் காத்து தண்ணளி தந்தவனே
ஓங்கார பாரதத்தை ஒற்றைக் கொம்பால் வரைந்தவனே
ஓங்கார ரூபனே சங்கரன் மைந்தனே
வருமுறைகள் காக்குமுயர் சுண்டிக்குளப் பதியில்
வியாளவளவு வீரகத்தி விநாயகனே ஆடீரூஞ்சல்

செம் பொன்னா நெல் விளையும் பூமி சூழ
சீராகத் தெங்கிள நீர் சிலிர்த்துத் தொங்க
மருதமரம் புடை சூழ்ந்து இளந் தென்றலாய் வீச
மகிமை பெறு மேழிசையும் மகிழ்வாய்ப் பாட
ஒளி திகழுங் கதிரவனின் ஒளிக்கீற்றைக் கண்டு
வெளித்திடும் தாமரைகள் பூத்துக் குலுங்க
வருமுறைகள் காக்குமுயர் சுண்டிக்குளப் பதியில்
வியாளவளவு வீரகத்தி விநாயகனே ஆடீரூஞ்சல்

முப்புரமும் கூடலன்னை ஏழிசையாய் தாலாட்ட
முத்தொளிர் மேனியன் சயனித் துறங்கிட
தென்புறக் கடலருகே பெரும்படை கண்ணகை வீற்றிருக்க
தென்மேற்குப் பதியினிலே காரைத்தூ விநாயக னமர்ந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமேற்குத் துருவத்தில் மதாற்குள பைரவர் காவலாக
கிழக்குப் பதியிலறுகு வெளிப் பிள்ளையார் சூழ்ந்திருக்க
வருமுறைகள் காக்குமுயர் சுண்டிக்குளப் பதியில்
வியாளவளவு வீரகத்தி விநாயகனே ஆடீரூஞ்சல்

பண்ணோடு பண்ணிசைக்கும் பாலாவித் தீரத்தக் கரையிலே
பன்னிரு திருமுறை களோதுங் கேதீஸ்வரத்தானை
நல்லூரடிச் சித்தர் யோகர் சுவாமி களோடு
நாதகீத மிசைந்து அடியவர்கள் புடைசூழ (சூழ்ந்து)
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சமதி லேற்றி
ஐங்கரத்தான் மண்டபத்தில் அமுதுண்டு இளைப்பாறி
வருமுறைகள் காக்குமுயர் சுண்டிக்குளப் பதியில்
வியாளவளவு வீரகத்தி விநாயகனே ஆடீரூஞ்சல்

வந்தவினை வேர றுத்து வாழ்வு தரு வேலனுடன்
விடி வெண்ணிப் பெயரா நின் சூழ பைரவனும்
ஆவினங்கள் பால் சொரிந்து பூமாரி பொழிந்திட
ஆர்வமுட னடியவர்கள் திருமுறைக ளோதிட
தெங்கிள நீர் தேனொடு பால் தீர்த்தமொரு திருநீறாய்
திங்கள் வளர் சிவமகனாய் திருவுருக் கொண்டாய்
வருமுறைகள் காக்குமுயர் சுண்டிக்குளப் பதியில்
வியாளவளவு வீரகத்தி விநாயகனே ஆடீரூஞ்சல்

திங்களுக்கு திங்கள் வரு சதுர்த்தி (நன்) நாளில்
தஞ் சரணஞ் சேரவெனத் தவ மிருப்பாரே
பொங்க லவல் கடலைவடை மோதகமும் வைத்தே
புனித சிவ நாமம் சொல்லி அறுகம்புல் சூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிகளொடு தோத்திரங்கள் தொன்மை பாடும்
தேர்ந்து குருபூசை தனைச் சிறப்பாய்ச் செய்தே
வருமுறைகள் காக்குமுயர் சுண்டிக்குளப் பதியில்
வியாளவளவு வீரகத்தி விநாயகனே ஆடீரூஞ்சல்

சித்தி முத்தி சேர்ந் திருக்குந் திகழானை முகத்தான்
சிவசிவா சொல்வார் சிந்தையி லிருப்பான்
தந்தையாய் தாயாகித் தாங்கி யெமைக் காப்பாய்
தத்துவா தீதனாகித் தண்ணளி தருவாய்
விந்தைகள் மிகுந்த வேழமுகமைத்துடையாய்
விக்கினங்கள் தீர்த்தருளி வேண்டுவரந் தந்தருள்வாய்
வருமுறைகள் காக்குமுயர் சுண்டிக்குளப் பதியில்
வியாளவளவு வீரகத்தி விநாயகனே ஆடீரூஞ்சல்

சதாசிவனாரின் மூத்தவரே ஆடீரூஞ்சல்
சந்ததமும் எமைக் காப்பவரே ஆடீரூஞ்சல்
கதிரொளியே கஜ முகனே ஆடீரூஞ்சல்
குழவி யுளங் கொள்பவரே ஆடீரூஞ்சல்
மருத மரக் கிளையினிலே ஆடீரூஞ்சல்
மந்திர மாப் பொருளானீர் ஆடீரூஞ்சல்
வேதாந்த விளக் கானீர் ஆடீரூஞ்சல்
வீரகத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்

**வாழி**

அந்தணரு மருமறையு மானினமும் வாழி
அரிய திரு முறையதோ டெந்தெழுத்தும் வாழி!!
செந்தமிழுஞ் சைவர்களுந் தேவர்களும் வாழி (அந்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தசிவ னடியாருஞ் செழும்புனலும் வாழி!! (செந்)
துந்துமி முழக்க மொழி தூமழையும் வாழி
தூய தாய் தந்தை சிறார்திகழ் கற்றும் வாழி!! (துந்)
சந்ததமும் எமக் கருளுங் கணபதியே வாழி!!
சுண்டிக்குள வியாளவளவு விநாயகனே வாழி!!
சுண்டிக்குள வீரகத்தி விநாயகனே வாழி!!

**எச்சரீக்கை**

தாயாகிய கருணை பொழி தாதா எச்சரீக்கை
தாவில்சீ ருலகுக்கொரு தனியே எச்சரீக்கை
விண்ணோர் தொழு வேதாகம விளைவே எச்சரீக்கை
வேண்டு வரந் தந்தருளும் வேழா எச்சரீக்கை
நீராரும் அறுகுவில்வ நிறைவானீ எச்சரீக்கை
நினையு மன்பர் தமக்கருளும் நெடுவாணீ எச்சரீக்கை
வீமொடு கல்வி செல்வம் விதைப்பாய் எச்சரீக்கை
வியாளவளவ வீரகத்தி விநாயகனே எச்சரீக்கை

**பராக்கு**

மாமேருவில் மாபரதம் வரைந்தான் பராக்கு
மாதா சிவன் வலந்தான் கனி மகிழ்ந்தான் பராக்கு
நீங்காத பேரின்பாய் நிறைவாய் பராக்கு
நீதியம்ப லத்திலாடும் நிமலனே பராக்கு
பண்ணோடெழு மிகுமா மறைப்பரமே பராக்கு
பாடும்பணி கொள்வா ரருட்பதமே பராக்கு
விந்தைமிகு வல்லபைதன் மணாளா பராக்கு
வியாள வளவு வீரகத்தி விநாயகனே பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லாலீ சுப லாலீ**

ஓங்கார மானவரே லாலீ சுப லாலீ
ஓதுமறை யானவரே லாலீ சுப லாலீ
லாலீ சுப லாலீ லாலீ சுப லாலீ
தூங்கானை முகத்தவரே லாலீ சுப லாலீ
திங்கள் வளர் மேனியனே லாலீ சுப லாலீ
லாலீ சுப லாலீ லாலீ சுப லாலீ
ஆங்காரம் தீர்ப்பவரே லாலீ சுப லாலீ
ஆதார மானவரே லாலீ சுப லாலீ
லாலீ சுப லாலீ லாலீ சுப லாலீ
வல்லபைக் கணபதியே லாலீ சுப லாலீ
வீரகத்தி விநாயகனே லாலீ சுப லாலீ
லாலீ சுப லாலீ லாலீ சுப லாலீ

**மங்களம் சுப மங்களம்**

அத்திமுகன் ஆதிசிவன் அம்பிகைக்கு மங்களம்
ஆனைமுகன் ஆறுமுகன் அடியவர்க்கும் மங்களம்
மங்களம் சுப மங்களம்!!
சுத்தவானச் சூரியர்க்கும் சந்திரர்க்கும் மங்களம்
சித்தி புத்தி சேர்ந்து வரு தீரனுக்கு மங்களம்
மங்களம் சுப மங்களம்!!
நித்தியமாய்ச் சத்தியமாய் நிலைப்பவர்க்கு மங்களம்
நெஞ்சமுயர் கல்விச்செல்வம் நிறைந்தவர்க்கு மங்களம்
மங்களம் சுப மங்களம்!!
வேலனுக்கும் வேதியர்க்கும் வைரவர்க்கும் மங்களம்
வியாளவளவு வீரகத்தி விநாயகர்க்கு மங்களம்
மங்களம் சுப மங்களம்!!

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி தனங்கிளப்பு, மணற்காடு கறையான் புற்று கந்தசுவாமி திருவூஞ்சல்

**காப்பு**

சீரோங்கு தர்மநெறி சிறப்புற் றோங்கச்
செம்பொன்னுஞ் செந்நெல்லுஞ் செழிப்பினோங்கப்
பாரோங்கு சைவமுயர் தமிழு மோங்கப்
பரந்த மறவன்புலோ தனங்கிளப் பூரில்
ஏரோங்கு மணங்காடு அரும்பதி யிலுறையும்
கறையான் புற்றுக் கந்தப் பெருமா னார்க்கு
ஊரோங்க வூஞ்சலிசை இனிதே பாடக்
உள்ளத்துள் வைத்தமய மெனக் காப்பதாமே.

**நூல்**

திருமறைக ளொருநான்குந் துலங்க ளாகத்
திகழுசிவா கமங்களவை விட்ட மாக
வருமரிய தவநெறிகள் வடங்க ளாக
வளரமுதச் சிவஞானம் பீட மாகப்
பெருகுபெருங் தடங்கருணைப் பேற தான
பரஞ்சுடராய் நெற்றிக் கண்ணில் உருவாய் வந்த
கருணையொளி மணற்காடு அரும்பதியி லுறையுந்
கறையான் புற்றுக் கந்த சுவாமியாரே ஆடீரூஞ்சல்

செந்தா மரைவயல்க ளெங்கும் செழித் தோங்க
சேர்ந்திருந் தயலவர்கள் விருந் தோம்ப
பந்தனைய ழித்தருள் பாசமுடன் வாழ
பரங்கருணை பொழியு மின்ப முருகப் பெருமானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனை செய்மலர் களெல்லாந் வாசல் தோறும்
வாகாண லாவண்யம் வளர்ந்து தோன்றும்
கந்தக்கரு ணையவன் மணங்காடு அரும் பதியிலுறையும்
கறையான் புற்றுக் கந்த சுவாமியாரே ஆடீரூஞ்சல்

மாவாழை பனை தென்னை பழுத்துத் தூங்க
மகிமைபெறு மேழிசையுந் மகிழ் வாய்ப்பாட
பூவாதி வர்க்கங் களெல்லாம் பூத்துக் குலுங்க
புகழ்புனித ஆகமங்கள் புகழ்ந்து போற்ற
தேவாதி தேவரெல்லாந் திரண்டு வாழ்த்த
தஞ்சரணஞ் சேரவெனத் தவ மிருப்பாரே
மூவாத பேரின்பா நீ மணங்காடு அரும் பதிலுறையுந்
கறையான் புற்றுக் கந்த சுவாமியாரே ஆடீரூஞ்சல்

கண்டங்க றுத்தசிவன் கதிர் நெற்றிப் பொறியாராய்
கங்கை சுமந் தேத்தி உயர் சரவணத்திற் சேர்த்திடவே
விண்ணோரும் மண்ணோரும் விரைந்தோடிக் கானவே
மேவியுமா தேவியவள் யாவையுமே ஒன்றாக்கி
விண்ணவர்க்குத் தலைவனாக வேலேந்துந் சண்முகனை
வணங்கமடி யார்க்கு வரங்கள வைநல்கும்
கிண்கிணி சதங்கை யொடுமணங்காடு அரும் பதியிலுறையும்
கறையான்புற்றுக் கந்தசுவாமியாரே ஆடீரூஞ்சல்

தென்புறக் கடலன்னை ஏழிசையாய் தாலாட்ட
தேவாதி தேனமுதன் சமயனித் துறங்கிட
தென்மேற்குப் பதியினிலே புங்கடி முருகன் வீற்றிருக்க
தருசூழ வுருவான ஒளிசுட்டான் வைரவர் காவலாக
வான்மழை தூவபூங் கொல்லை மணம் பரப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவரு மந்தணருந் பசுக்குலமும் சூழ்ந்திருக்க
மன்னவனே மலர்வன மணற்காடு அரும் பதிலுறைங்
கறையான்புற்றுக் கந்தசுவாமியாரே ஆடீரூஞ்சல்

கருணை கூர்ந்த முகங்களா றுங் கரங்கள் பன் னிரண்டுமாய்
காத்துத் தேவர் துயர்களைந்த கந்தசஷ்டிக் காரனாய்
அருணனிந் திரன் திக்கில் அணைந்த இன் பச்சோதியாய்
ஆறாங்கம் நால்வேதம் ஆனபொருள் யாவையுமாய்
இருளடர்ந்த ஆணவத்தின் இருட்பிணிப்பை நீக்கியே
ஈசனுமை பாலகனாய் எழிற்கழல்கள் காட்டியே
திருவாகித் தெளிவாகி மணற்காடு அரும் பதியிலுறையும்
கறையான் புற்றுக் கந்த சுவாமியாரே ஆடீரூஞ்சல்

தெங்கிளநீர் தேனொடுபால் தீர்த்தமொரு திருநீறாய்
திங்கள் வளர் சிவமகனாய் திருவுருக்கொண்டாய்
எங்கனுந்தன் விழிகளால் ஏதிலர்க்கு அமிர்தனாய்
ஏக்கந்துன்ப முடல் வியாதி தீர்க்குமரு மருந்தாய்
சங்கவெண்ணீ றணிந்து தோன்றுஞ் சர்வ சித்தியாளனாய்
சாமவேத கீதம்பாடுஞ் சதாசிவற்குத் குருவுமாய்
செங்கமலப் பொற்பாத மணற்காடு அரும்பதி யிலுறையும்
கறையான் புற்றுக் கந்த சுவாமியாரே ஆடீரூஞ்சல்

வந்துசேரும் வல்வினைகள் வலிய மெலியநலிந்து போக
வாரணத்தின் அன்பினொடு வள்ளியை மணஞ் செய்தவா
சந்து பொந்து எல்லாமும் தாவிச் சூரனை வதைத்தவா
சரவணத்துப் பொய்கையினில் தாமரையில் வளர்ந்தவா
அந்தமிலா ஆனந்த அற்புத வடிவழகா சண்முகா
ஆடுமயி லேறியமர் வாழ்வுதரும் வேலவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழர் போற்றிசைக்கும் மணற்காடு அரும்பதியிலுறையும்
கறையான்புற்றுக் கந்த சுவாமியரே ஆடீருஞ்சல்

விண்ணிலோங்கு சோதியாய் விளங்குவடி வேலவா
வீரசூரன் உடல்கிழித்த வெற்றிவேல் சண்முகா
மண்ணில் நல்ல வண்ணம் வாழ வரமளிக்கும் ஆறுமுகா
மாதுதெய்வ யானை வள்ளி மணந்த மணவாளா
வண்ணத்தமிழ்க் காவியங்கள் வளர்க்குந்தூய அழகனாய்
வாழும் வாழ்வில் எந்நாளும் வழித்துணையாய் நிற்பவா
எண்ணிலின்ப வெள்ளமாய் மணற்காடு அரும்பதியிலுறையும்
கறையான் புற்றக் கந்த சுவாமியாரே ஆடீருஞ்சல்

துங்கமுயர் தும்பிமுகன் தம்பியாகி ஆடீரூஞ்சல்
தூயமறை தாமளித்த துரைமணியே ஆடீரூஞ்சல்
குங்குமவர்ணக் கூர்வேற் கரத்தாய் ஆடீரூஞ்சல்
கருத்தரிய மெய்ஞானக் கழலோனே ஆடீருஞ்சல்
நங்குறைகள் தீர்த்தருளுந் ஞானபண்டிதா ஆடீரூஞ்சல்
நவநீத மாயனின் மருமகனே ஆடீரூஞ்சல்
சங்கத்தமிழ் மூன்றும் வளர்த்த சண்முகா ஆடீரூஞ்சல்
தனங்கிளப்பு மணற்காடு கறையான் புற்றுக் கந்தனே ஆடீரூஞ்சல்

**வாழி**

அந்தணரும் ஆனினமும் ஐந்தெழுத்தும் வாழி
அருமறையுந் திருமறையும் அருணீரும் வாழி
வந்துதினம் மலர் தூவி வழிபடுவோர் வாழி
வேதாந்த சித்தாந்த விதிமுறையும் வாழி
செந்தமிழும் மறவன்புலோ தனங்கிளப்பும் வாழி
சிறாரவருந் தந்தைதாய் திகழ்கற்பும் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையுயர் சீலமொடு செய்யறங்கள் வாழி
சிவசைவ மணற்காடு கறையான்புற்றுக் கந்தனே வாழி

**எச்சரீக்கை**

கோனேகுலக் கொழுந்தேகும ரேசா எச்சரீக்கை
கூவிடுவென் சேவலுயர் கொடியா எச்சரீக்கை
மானேமரகதமே மருக் கொழுந்தே எச்சரீக்கை
(மாமணி மன்றில்) மகிழ்நடம் புரியும் மலர் சிவன் மைந்தா எச்சரீக்கை
தேனேதிர வியமே சிவன் சேயே எச்சரீக்கை
தனங்கிளப்பு மணற்காடு கந்தனே எச்சரீக்கை
வானேவா னமுதேமிகு மாமழையே எச்சரீக்கை
வாழ்வாரவர் வணங்கும் கறையான்புற்றுக் கந்தனே எச்சரீக்கை

**பராக்கு**

பன்னிரு கண்ணுடைய பரம்பொருளே பராக்கு
பாகாய் கனிந்தருள் பாலகனே பராக்கு
முன்னிய கருணை முகழ்ந்தரு ளுபவனே பராக்கு
மூவிரு முகமுடைய மூர்த்தியே பராக்கு
பொன்னையும் பொருளையுந் தருபவனே பராக்கு
போற்றிசெய் வாரிடர் களைபவனே பராக்கு
கன்னேர் மனங் கசிந்துருக்கும் கனலே பராக்கு
கறையான் புற்றுக் கந்த சுவாமியரே பராக்கு

**லாலி**

பன்னிருகை கொண்டவுயர் பரமே லாலி
பங்கையத்தில் வந்துதித்த பதமே லாலி
மன்னியம்பல த்திலாடும் மருந்தே லாலி
மண்ணளந்த மாயவன் மருகா லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிவள்ளி தெய்வானை கலந்தா லாலி
கணங்களொடு சூர்களைந்த கதிரே லாலி
தின்னவருந் தெள்ளமுதலாய்த் திகழ்வாய் லாலி
தனங்கிளப்பு கறையான் புற்றுக் கந்தனே லாலி

**மங்களம்**

சங்கரற்கு மைங்கரற்குஞ் சண்முகற்கும் மங்களம்
சங்கரற்குஞ் சரிக்குஞ் சந்திரர்க்கும் மக்களம்
மங்களம் சுப மங்களம்//

மங்கையர்க்கும் வானவர்க்கும் மன்னவர்க்கும் மங்களம்
மராமரங்க மேழுமெய்த மாயவற்கு மங்களம்
மங்களம் சுப மங்களம்//

வெங்கதிர்க்கும் விண்மதிக்கும் மேழியர்க்கும் மங்களம்
தோன்றுக மீனாட்சி சுந்ததர்க்கும் மங்களம்
மங்களம் சுப மங்களம்//

தொங்குசடை சொர்க்கநாத சுவாமிக்கும் மங்களம்
தோன்றுசுக மீனாட்சி சுந்தரர்க்கும் மங்களம்
மங்களம் சுப மங்களம்//

தனங்கிளப்பு கறையான்புற்றுக் கந்தனுக்கு மங்களம்
தாங்குமயில் மேலமர்ந்த முருகனுக்கு மங்களம்
மணற்காடு கறையான் புற்றுக் கந்தனுக்கு மங்களம்
மங்களம் சுப மங்களம்//

சுபம்

# அகரம் II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் எனது சிகரம்

தேனாறாய் பாய்ந்தோடும்
ஆறு குளங்களிலே
அல்லியும் ஆம்பலும்
குவலையும் மலர்ந்திருக்கும்
கிளிநொச்சி யெனும் நகரிலே
வந்தாரை எல்லாம் வாழ வைக்கும்
வன்னி நிலப்பரப்பிலே
பசுமை நிறைந்த சோலைகள்
பச்சைப் பசேலென காட்சிதர
செந்நெல்வயல் வெளியில்
முத்து முத்தாய்
கொத்து கொத்தாய்
நெல்மணிகள் விளைந்திருக்க
மேட்டு நிலங்களிலே
மா பலா வாழையோடு
தென்னை, பனந்தோப்புக்களும்
செங்கரும்புத் தோட்டங்களும்
ஆவினங்கள் பால் சொரிய
வண்ண மலர்கள் பூத்திருக்க
குயிலினம் கூவ மயிலினம் ஆட
புள்ளி மான் கூட்டங்கள்
துள்ளிக் குதித் தோடிட
காலமெல்லாம் காத்தருளும்
தெய்வ ஆலயங்கள் சூழ்ந்திருக்கும்
கற்றோரும் மற்றோரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏர் பிடித்த தொழிலுழ வரும் வாழுகின்ற
அக்கராயன் மன்னன் ஆண்ட
அக்கராயன் ஸ்கந்தபுர பிரதேசத்தில்
அழகாய் காட்சி தரும்
அகரம் ஒரு சிகரம்
முத்தமிழுக்கோர்
மகத்தான ஓர் சிகரம்
அகரம் எனது சிகரம் //

அகரம் எனது சிகரம்//
அதை ஊட்டி வளர்த்தது
கிளிநொச்சி ஸ்கந்தபுரம்
அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை//
இலக்கம் ஒன்று கிளிநொச்சி ஸ்கந்தபுரம்
அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை//

ஆயிரத்து தொள்ளாயிரத்து
அறுபத்து ஆறு ஒன்று மூன்றில்//
உருவான அழகான கூடம்
அது எங்களின் ஆரம்பக் கல்விக்கூடம்//
கிளிநொச்சி ஸ்கந்தபுரம்
அக்கராயன் பிரதேசத்தில்
முதன் முதலில் உருவாகி ஆரம்பமான
புனிதமான ஆரம்பக் கல்விக் கூடம்//

"அ" என்னும் உயிரெழுத்தோடு
மெய்யெழுத்தும் இணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் மெய் என்ற எழுத்துக்களை
பச்சை அரிசியிலே
பக்குவமாய் என் கை பிடித்து
"ஆனா" எழுதிய முதல் ஆசான்//
ஆனால்................................
அவர் வாத்தியார் அல்ல//
மூளாயைச் சேர்ந்த தலைவர் கந்தசாமி
முன்னாள் தமிழ் காங்கிரஸ் கட்சியின்
அக்கராயன் பிரதேசத்தின் தலைவர் ஆவார்//
அவரே எனது முதல் குருவும் ஆவார்//

முதன்மை பாடசாலையின் முதல் அதிபர்
மதிப்பிற்குரிய திரு அரியரத்தினம் வாத்தியார்//
பெயருக்கு ஏற்றால் போல்
அருமையான குணங் கொண்ட
அம்சமான வாத்தியார் அவர்//
வெள்ளை வேட்டியுடன்
கொட்டன் சேட்டும் போட்டு//
கையில் நீண்ட பிரம்புடனும்
தமிழ் சமய பாடம் படிப்பிற்கும்
எங்கள் அரியரத்தினம் வாத்தியார்//
நினைவு இருக்கிறது
நெஞ்சிலே ஞாபகம் நிறைந்து நிற்கின்றது//
முதல் தலைமை ஆசிரியர்
திரு அரியரத்தினம் அவர்களை
மண்டியிட்டு தலை வணங்கி
அவர் பாதம் தொட்டு வணங்குகின்றேன்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரோடு மட்டுமா?
"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்"
என்ற பொன் மொழிக்கு இணையாக
அன்பான கண்ணியமான மனிதர்
திரு "கண்ணையா" தலைமை ஆசிரியர்
அவர் எங்களின்
இரண்டாவது PRINCIPAL
கண்ணிமைக்கும் நேரத்தில்
கண் முன்னே வந்து நிற்கும்
கண்ணியமான குணங் கொண்ட
கண்ணையா வாத்தியார்//
ஆனால் அவருக்கு
முன்பக்கப் பல்லில்லை நல்ல கறுப்பு நிறம்
பொக்க வாத்தி! பொக்க வாத்தி! என்று
அன்போடு கிண்டலடிப்போம்//
அரியரத்தினம் அதிபர் போல்
வெள்ளை வேட்டியும்
நெசினல் கொட்டன் சேட்டும்
இடது கையில் தலைப்பு வேட்டியும்
வலது கையில் பிரம்புடனும்
வகுப்பறையைச் சுற்றி! சுற்றி!
தமிழ் கணக்கு படிப்பிற்கும்
தமிழ் இலக்கண இலக்கிய வாத்தியார்//
மரியாதைக்குரிய கண்ணையா வாத்தியார் அவர்களை
இருகரம் கூப்பி தொழுகின்றேன்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டும் அல்ல
இன்னும் இருக்கிறது
சொல்கிறேன் கேளுங்கள்//
எங்கள் கல்விக் கூடத்தின்
முதல் பெண் தலைமை ஆசிரியர்//
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் அ.த.க பாடசாலையின்
மூன்றாவது PRINCIPAL//
செக்கச் செவேரென சிவந்த மேனியழகு//
ஆறடி உயரம் இருக்கும்//
உயரத்திற்கு ஏற்ற உடலழகு உடையழகு//
காஞ்சிபுரப் பட்டுடுத்தி
கருகுமணி மாலையிட்டு
பக்குவமாய் நடை நடந்து
கணக்குப் பாடம் படிப்பிக்க
வருவார் பாருங்கள்....
அழகோ கொள்ளை அழகு//
பார்த்தாலே பரவசமாகும்
அதை..... நினைத்தாலே ஆனந்தமாகும்//
யாழ்ப்பாணம் பலாலி ஊர் பெற்றுத் தந்த
திருமதி "கந்தையா அன்னபூரணம்" டீச்சர்//
என் கண் முன்னே நிற்கின்றது.
கண்ணியமாய் "அன்னபூரணம்" நாமம்
அன்னபூரணம் என்னும் தவம் டீச்சர்
என் நெஞ்சிலே நிறைந்து நிற்கின்றார்//
அவரையும் தலை தாழ்த்தித் தொழுகின்றேன்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கல்விக் கூடத்திற்கு
ஒரு குட்டி தேவதை வந்தாள்
ஆமாம்....ஆமாம்....
ஒரு குட்டி தேவதை வந்தாள்
அன்ன நடை அழகும்
அழகிய புன் சிரிப்பும்
விளையாட்டுப் பிள்ளைக்கு
இல்லை....இல்லை.....
விளையாட்டுப் பொம்மைக்கு
சேலை கட்டினால் எப்படி இருக்கும்//
அப்படி இருந்தாள் அந்தத் தேவதை
ஆமாம்....
அப்படி இருந்தாள் அந்த தேவதை
அவர் வேறு யாருமல்ல//
நயினாதீவு நாகபூசணி அன்னையின்
பக்திப்பரவசமும், மண் வாசனையும்
கடலலையின் ஓசையுங் கொண்ட
எங்களது அன்பான குட்டி டீச்சர்
திருமதி "யோகா சிவானந்தராஜா"
பஞ்சபுராணம் ஓதுவது எப்படி?
திருப்புகழ் பாராயணம் செய்வது எப்படி?
"கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுகன் - அடி பேணி"
ராகம் தாளம் சுருதிலயம் நிறைந்த
குட்டி தேவதையின் குரல்
கணீரென்று ஒலிக்கும் குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கக் கேட்கத் தேன் சுரக்கும்//
இன்றும் எனது நெஞ்சில்
அழியா நினைவலையாக......
நிறைந்து நிற்கின்றார்
குட்டி தேவதை குட்டி டீச்சர்
அவர் பாதம் பணிந்தெழுந்து
இரு கரங் கூப்பி வணங்குகின்றேன்.

அதுமட்டுமா
சொல்ல இருக்கிறது
பொறுமையாகக் கேளுங்கள்//
வெள்ளை வேட்டியுங் கட்டுவார்
நீண்ட காற்சட்டையும் மாட்டுவார்
அதற்கேற்ற கலர் கலரா சேட்டும் போடுவார்//
Style ஆன நடையுடை பாவனை//
நெற்றியிலே மூன்று குறி போட்ட
திருநீற்றுப் பட்டை...//
பார்த்தாலே கை கூப்பி வணங்கத் தோன்றும்
ஆமாம்...
அவரைப் பார்த்தாலே
இரு கை கூப்பி வணங்கத் தோன்றும்
ஆனால்...
கண்டிப்பு மெத்தனம்
ஆமாம்...ஆமாம்...
கண்டிப்பு மெத்தனம்
நான்காம் வகுப்பு
சமய சுகாதார பாட வாத்தியாராம்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலில் தேவாரத்தை
பண்ணோடு படியுங்கள் என்றார்//
"மற்றுப் பற்றெனக் கின்று நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்"
சொல்லி வாய் மூடவில்லை
தெரியும்! தெரியும்!! தெரியும்!!!
ஆஹா... நல்லாப் பாடுறியள்
எழுதுங்கோ! தேவாரத்தை எழுதுங்கோ//
முழி... வெளியில வந்திட்டுது//
எப்படி எழுதுறது! எப்படி எழுதுறது!!
அன்று தான் தேவாரம் எழுதும் முறையும்
அதன் பொருளுங் கற்றுக் கொண்டேன்//
இன்று வரை உயிருள்ள வரை
கற்றுக் கொண்டிருப்பேன்
எழுதிக் கொண்டு இருக்கின்றேன்//
அவர் வேறு யாருமல்ல
தீவுகளிலே பெருந் தீவான
நெடுந்தீவைச் சேர்ந்த
சைவ மகான்...
திரு விசுவலிங்கம் வாத்தியார்//
மறக்க முடியுமா?
இல்லை....
மறந்து விடத்தான் முடியுமா//
எங்கள் ஆசான்
திரு விசுவலிங்கம் வாத்தியார் அவர்களை
வணங்குகிறேன்
உங்கள் பாதம் பணிந்து வணங்குகின்றேன்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் வகுப்பு
ஆமாம் ஆறாம் வகுப்பிருக்கும்
புதியதோர் தலைமை ஆசிரியர்
யாழ்ப்பாணத்து வாத்தியாராம்
ஆமாம்... யாழ்ப்பாணத்து வாத்தியார்
தமிழ் சமயம் கணிதம் படிப்பிற்கும்
தலைமை வாத்தியார்//
நெற்றியிலே மூன்று வெள்ளைக்குறி
சைவ சமயத்தின் மீது அளவில்லாத பற்று
பிற சமயங்களை....
மனிதர்களை
மதிக்கின்ற பண்பு அவர் முகத்திலே தெரிந்தது//
தமிழ் புலவரோ? பண்டித மணியோ தெரியாது?
நான்காவது தலைமை ஆசிரியர்
மதிப்பிற்குரிய திரு. பொ. கந்தசாமி அவர்கள்//
தமிழ் இலக்கண இலக்கிய மொழி நடையினை
அக்கு வேறு ஆணிவேறாக
பிரித்தெடுத்து விளக்குவார் பாருங்கள்//
கண்ணியமான நல்ல தலைமை ஆசிரியர்
மறந்து விட முடியாது
எங்கள் தமிழ் புலமையை
சிரந்தாழ்த்தி வணங்குகின்றோம்//

அது மட்டுமா?
அன்பு இருக்கும் இடத்தில்
கண்டிப்பும் இருக்கும் அல்லவா?//
மறக்க முடியாத சம்பவங்களில் ஒன்று
மறந்து விட முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனையைப் பெற்றாள்
ஏழாம் வகுப்பு....
ஆமாம்....ஏழாம் வகுப்பு
துரு! துரு!! என ஏதாவது செய்வாள்//
குழப்படி ஏதோ செய்து விட்டாள்
ஆமாம்....
குழப்படி ஏதோ செய்து விட்டாள்
இரண்டாம் பாடம் முதல் பள்ளிவிடும் வரை
பெரிய மேசையின் மேல்
முட்டுக்காலிலிருந்து
தண்டனையைப் பெற்றாள்//
ஆனால்.... அவள் வகுப்பில்
முதலாம் இரண்டாம் மாணவியாக
வலம் வந்தவளாவாள்//
சந்தோசமான பள்ளி வாழ்க்கை
எங்கு தேடினாலும் கிடைக்காத திரவியம்
எங்களது கல்விப் பயணம்//

ஏழாம் வகுப்போடு
கிளிநொச்சி ஸ்கந்தபுரம்
இலக்கம் ஒன்று அ.த.க பாடசாலையிலிருந்து
விடை பெற்றோம்//
சந்தோசம் ஒரு புறம்
துயரம் மறு புறம்//
விடை பெற்றோம்
வேறொரு பாடசாலையை நோக்கி//
புதியதோர் இலட்சியப் பாதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியதோர் பாடசாலை நோக்கி//
குதூகலமான கல்விப் பயணம் தொடர
புறப்பட்டோம் உயர் கல்விக்காக//
அளவில்லாத ஆனந்தம் மகிழ்ச்சி
ஆஹா... ஆஹா...
அது அக்கராயன் மகா வித்தியாலயம்//
அது எங்களின் பெரிய வித்தியாலயம்
கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம்//
எட்டாம் வகுப்பில்
எட்டிக் காலடி பதித்த
எங்களது இரண்டாவது கல்விக் கூடம்//

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தொன்பதில்
அழகாக உருவான கல்விக் கூடம்//
ஆயிரம் இரண்டாயிரம் மாணவர்கள்
அமர்ந்திருந்து கல்வி பயிலும் கூடம்
அழகான கல்விக் கூடம்//
ஆரம்பக் கல்வி முதல்
உயர் நிலைக்கல்வி வரை
உயர்ந்த கல்விக் கூடமது//
மாபெரும் மகான் பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கால் பதித்த கூடமது//
புகழ் பெற்ற கல்வி மகான்களையும்
நல்லாசான்களையும் வைத்தியர்களையும்
உருவாக்கிய கல்விக் கூடமது
புனிதமான மகா வித்தியாலயம்
எங்களின் அக்கராயன் மகா வித்தியாலயம்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் இல்லாத புதியதோர் அதிபர்//
யாழ்ப்பாணம் சொந்த இடம்
கிறிஸ்தவ சமயம்//
ஆனால்... அவர்
பிற சமயங்களை மதிக்கும் பண்பு//
தேவாரம் பஞ்சபுராணம் ஓதும் போது
தேடிப் பிழை கண்டு பிடிக்கும் பக்குவம் தெரியும்//
அங்கே.... அந்த மாமனிதர்
இமயமலைச் சிகரத்திலே
உயர்ந்து நிற்கின்றார்//
வேட்டிக் கட்டும் நீண்ட நெசினல் சேட்டும்
அவருக்கு கொள்ளை அழகு//
வெள்ளை நிறத்திற்கு ஏற்றால் போல்
உள்ளமும் வெள்ளையானது
அவரது உள்ளமும் வெள்ளையானது
முத்து முத்தான சிரிப்பழகு
முத்துக்கள் சிந்திச் சிதறிய சிரிப்பழகு//
அவர் நடந்து வந்தாலே
அந்த பூமாதேவியே தொழுதெழுவாள்//
இலக்கண இலக்கியத்தின் பண்டிதமணி
அக்கராயன் மகா வித்தியாலயத்தின் முதல் அதிபர்
மதிப்பிற்குரிய எங்கள் PRINCIPAL
திரு “அருட்பிரகாசம்” அவர்கள்//
இல்லை.... இல்லை....
அவர் எங்களது தந்தை/தந்தையாவார்//
உயிர் உள்ள வரை மறந்து விட முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை "அருட்பிரகாசம்" அவர்களை//
உயிர் உள்ள வரை மறந்து விட முடியாது
தந்தை "அருட்பிரகாசம்" அவர்கள்
தலைமை ஆசிரியர் பதவியேற்று
கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன்
நீதியை நிலை நாட்டி
நேர் வழி நின்று
கல்வி வளம் பெற
அயராது உழைத்த மாமனிதர்//
எங்களின் மாபெரும் தந்தையான
திரு "அருட்பிரகசம்" அவர்களை
நெஞ்சிலே நிலை நிறுத்தி
சிரம் தாழ்த்தி
இருகரம் கூப்பி
தலை வணங்குகின்றேன்//

சொல்ல இருக்கிறது
பொறுமையா இருங்கள்
இன்னும் சொல்ல இருக்கிறது
கணக்கு என்றால் பூச்சியந்தான்
எமக்கு கணக்கு என்றாலே பூச்சியந்தான்
கணக்கு என்னும் கணிதத்தின் மேல்
காதல் கொள்ளும் அளவிற்கு
விளக்கவுரை அளித்து
விபரித்து.... கரும்பலகையிலே
விளக்கம் அளிப்பார் பாருங்கள்//
ஆஹா.... ஆஹா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமை! அருமை!! அருமை!!!
விளங்குதோ என்ற பதம்//
எமக்கு....
பிளங்குதோ என்று கேட்பது போலிருக்கும்//
அவ்வளவும்..... மனதில்
ஆணி அடித்தால் போலிருக்கும்
மனதில் ஆளமாக பதியும் பாருங்கள்//
அவர் வேறு யாருமல்ல//
வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த
திருமதி புஸ்பலிங்கம் கமலா
என்னும் நாமங் கொண்ட
கணித சமயபாட ஆசானாவார்//
கமலா டீச்சர்! கமலா டீச்சரென//
எல்லோரும் அன்போடு அழைப்போம்
செல்லமாக அன்போடு அழைப்போம்
மறக்க முடியாது.
மறந்து விடவும் முடியாது//
தலை சாய்ந்து வணங்குகின்றேன்.
மதிப்பிற்குரிய....
கமலா டீச்சர் அவர்களை
தலை சாய்ந்து வணங்குகின்றேன்.

இன்னும் சொல்கிறேன் கேளுங்கள்
அமைதியாக இருந்து கேளுங்கள்
யாழ்ப்பாணம் பாசையூர் சொந்தவூர்//
புதியதோர் அதிபர்
ஆறடி இரண்டங்குல மாமனிதர்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான தோற்றம்
அமைதியான புன் சிரிப்பு
கம்பீரமான வீறு நடையுடை//
அக்கராயன் மகா வித்தியாலயத்தின்
இரண்டாவது PRINCIPAL//
அன்பான கண்டிப்பு
அளவான.... தெளிவான.... விளக்கவுரை//
ஆணி அடித்தால் போலிருக்கும்
தமிழ் இலக்கணத்தின் அடி ஆழம்//
எங்களின் நகைச் சுவை மன்னன்
மதிப்பிற்குரிய திரு "அலோசியஸ்" அதிபர் அவர்கள்//
அவரது கண்கள் அழகானது
மிகவும் அழகானது
பொன்னாங்காணி கீரை இருக்குது
பூனைக் கண்ணுக்கு என்று
அன்போடு அவரை கிண்டலடிப்போம்
நாம் அன்போடு கிண்டலடிப்போம்
மறக்க முடியவில்லை
நெஞ்சின் அடி ஆழத்தில்
நிலை நிறுத்தி உள்ளேன்//
எங்கள் தமிழ் ஆசான்
திரு "அலோசியஸ்" அவர்களை//
இரு கரம் கூப்பி
தலை வணங்குகின்றேன்//
நகைச் சுவை மன்னன்
திரு. அலோசியஸ் அதிபர் அவர்களை
சிரந் தாழ்த்தி தலை வணங்குகின்றேன்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோடு விட்டு விடலாமா?
இல்லை.... இல்லை.....
விட்டு விடத்தான் முடியுமா?
பாசத்தோடும் நேசத்தோடும்
பாசப் பறவைகளாய் சிறகடித்து
பறந்து திரிந்து கூடி வந்த
எங்களின் பள்ளித் தோழர் தோழிகளை
விட்டு விடலாமா?
இல்லை....
விட்டு விடத்தான் முடியுமா?//

படிப்பிற்கு உற்ற நண்பன் சிவனேசராசா
குழப்படிக்குத் தம்பி கனகராசா
அமைதிக்கு நண்பர் கிருஸ்ணபிள்ளை
விளையாட்டிற்கு அண்ணன் நவரத்தினராசா//

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இலக்கம் ஒன்று
அ.த.க. பாடசாலையின் மூத்த மைந்தன்//
விளையாட்டிலும் படிப்பிலும் முதற்தர மாணவன்
எங்கள் அன்பு அண்ணன் "நவரத்தினராசா"//
அவன் தம்பிமார் நால்வர் ஆவார்//
சண்முகராசா, சௌந்தரராசா
சிவநேசராசா, தருமராசா//
அக்கராயன் மகா வித்தியாலயம் வரை
தொடர்ந்து வந்த சகோதரர்கள்
இவர்கள் எல்லோரும் சகோதர மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மட்டுமல்ல
எம்மோடு கூடி வந்த தோழர்கள்
லலிராசா கனகராசா
இணைபிரியா சகோதரர்கள்
புவனராசா, புவனேந்திரன்
இரட்டைப் பிறவிச் சகோதரர்கள்
சபா என்னும் சபாரத்தினம்
புவனேஸ்வரியின் தம்பி இவன்
கேதீஸ் என்னும் கேதீஸ்வரன்
பாலன் என்னும் பாலசுப்பிரமணியம்
ஈசன் என்னும் தெய்வேந்திரன்
நகுலன் என்னும் நகுலேஸ்வரன்
ஆச்சா என்னும் அருச்சுனன்
நகுலன் ஆச்சா சகாதேவன் மூவரும்
உடன்பிறந்த சகோதரர்கள்
புண்ணியம் என்னும் புண்ணியமூர்த்தி
கமலாதேவியின் அன்பு அண்ணன் இவன்
தவேந்திரராசா மாணிக்கராசா
சிவனேசமலரின் அன்பு அண்ணன் இவர்கள்
இவர்களோடு கூடி வந்த தோழர்கள்
சிவகுமார், சிவசுந்தரம் பதஞ்சலி,
மைக்கல் அன்புக் குலோறியதாஸ்
நாதன் என்னும் யோகநாதன்

பள்ளி என்னும் கல்வியிலே
பழகி தொடர்ந்து வந்த தோழிகள்!!
உயர்தரம் வரை தொடர்ந்து வந்த தோழியர்
பரமேஸ்வரி (அமரர்) முருகானந்ததேவி வதனமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி வரை தொடர்ந்து வந்த தோழிகள்
பக்கத்தில் இருந்தே
பகிடிக் கதைகள் சொல்லிச் சொல்லியே!!
பரவசப் படுத்திடுவாள்
பரமேஸ்வரி என்னும் என் ஆருயிர்த் தோழியவள்//
சறோஜினி தேவியின் தங்கையவள்//

முத்துக்களை எல்லாம் ஒவ்வொன்றாய்ச் சேர்ந்து
முத்தான முத்துமாலை தொடுப்பது போல//
முத்து முத்தான கையெழுத்து
முத்துப் பல் சிரிப்பழகி
முருகானந்த தேவியவள்
அவள் முருகானந்த தேவியவள்//

வண்ணத்துப் பூச்சியைப் போல்
வண்ண! வண்ணப் !! பட்டுச் சட்டை போட்டு//
வகுப்பறையைச் சுற்றி வலம் வருவாள்
வதனா என்னும் வதனமலர்
அவள் வதனா என்னும் வதனமலர்//

நெடுந்தூரம் தொடரவில்லை
நெஞ்சிலே நிறைந்திருக்கும்
நெருக்கமான தோழிகள்
நேசமலர், லிங்கேஸ்வரி, கமலாதேவி
சரஸ்வதி, சந்திராதேவி, பார்வதி
லோகா எனும் லோகேஸ்வரி (த)
நாகேஸ்வரியின் அன்புத்தங்கையிவள்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் வகுப்பினிலே
நடந்து வந்த தோழி இவள்
நளின சிங்காரி தமயந்தி தானவள்
சிவகாமசுந்தரியின் தங்கையவள்//

நகைச் சுவை நாயகி
நங்கையவள் கறுப்புக் கட்டழகி
நாதமென்னும் சிரிப்பழகி
நாகேஸ் என்னும் நாகேஸ்வரி//
இரண்டாம் வகுப்பினிலே
இணைந்து கொண்ட தோழி இவள்
புஸ்பம் என்னும் ராணியவள்
புஸ்பராணி தான் அவள்
மகேஸ்வரியின் அன்புத் தங்கையவள்//

செல்லச் சிரிப்பழகி
சிங்கார நடையழகி
செந்தமிழ்ச் சொல்லழகி
செல்வராணி தங்கராணி
இணைபிரியா சகோதரிகள்
கிருபாலட்சுமி (சி) லோகேஸ்வரி (சி)
உடன் பிறந்த சகோதரிகள்//

அதுமட்டுமா?
அன்புக் கிணையான
அண்ணா அக்காக்கள் //
கம்பீரமான நடையழகு
கருத்தாளமிக்க சொல்லழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணியமான மாண்புள்ள மாணவனவன்
உயர்தர மாணவத் தலைவனவன்
அண்ணன் றொபேட் கலாசியஸ்"
அவன் எங்கள்அன்பு அண்ணன்
"றொபேட் கலாசியஸ்" //

பாசமும் நேசமுங் கருணையுங் கொண்ட
பாசப் பறவை அவள்
சறோஜினி தேவி என்னும் சறோக்கா
யோகேஸ்வரி அக்கா கிளாறம்மா//

சிந்தித்துச் செயலாற்றும்
சிங்காரச் சிரிப்பழகி
சிவமாக சுந்தரி என்னும் சுந்தரியக்கா
சுந்தரியின் ஆருயிர் தோழி இவள்
ஆயிரம் நிலவே வா என்று ஆனந்த நடனம் ஆடிய
பரதத்தின் ஒரு பாகம் இவள்
பத்மினி என்னும் கிளியக்கா
இவர்கள் இணை பிரியா தோழியிவள்
கமலாம்பிகை என்னும் கமலாக்கா//

குட்டிப் பல்லழகியவள்
குள்ளமான பேரழகியவள்
புன்னகை அரசியவள்
புவனேஸ்வரி அக்கா தானவள்
சபாரத்தினம் குணநாயகியின்
அன்பான அக்கா இவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தியடி அம்மனடி இருப்பிடம்
அது நாகேஸ்வரி அக்காவின் வசிப்பிடம்
அவர் தங்கையவள் என் தோழி
லோகா என்னும் லோகேஸ்வரி
இவள் பக்கத்து வீட்டுப் பொன்னிறத்தழகி
மகேஸ்வரி அக்காவின் பூர்வீகம்//
புஸ்பராணியின் அக்கா இவள்

பாசமும் நேசமும் கொண்ட
அன்புத் தங்கைமார் தம்பிமார்கள்
ராகத்திலே ராகமாளிகை பூபாளம்
தாளத்திலே ஆதிதாளம்
ரி.எம்.எஸ் என்றாலே
புல்லாங்குழல் இசையரசி
செல்லம் என்னும் மனோன்மணி
இவள் பத்மினியின் அன்புத்தங்கையவள்//

பவளம் போல் சிரிப்பழகி
படிப்பதிலே முதல் மாணவி
பவா என்னும் பேரின்பநாயகி
யோகேஸ்வரி அக்காவின் தங்கையவள் //

சுருட்டை முடியழகி
சுறு சுறுப்பான நடையழகி
சுந்தா என்னும் சுந்தரலட்சுமி
லலிராசா, கனகராசாவின்
மூத்த தங்கையவள்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணத்திலே முதல் மாணவி
குறு குறுப்பான விழியழகி
குணா என்னும் குணநாயகி
புவனேஸ்வரி, சபாரத்தினத்தின் தங்கையவள்//

மௌன மென்னும் மொழியழகி
வெள்ளை நிறத்தழகி
முத்தான சிரிப்பழகி
கௌரி என்னும் கௌரிசங்கரி
ராஜேஸ் என்னும் இராஜேஸ்வரி
மலர் என்னும் மலர்விழி
தங்கமென்னும் சிவநேசமலர்//

அழகானவன், அன்பானவன், பண்பாளன்
அவன் சிறந்த படிப்பாளன்
அன்புத் தம்பி அவன்
அன்ரன் பிறேமதாஸ்//

அன்புத் தம்பி அன்ரனோடு
அருகிருந்த தம்பிமார்கள்
ராசன் என்னும் சின்னத்தம்பி பரமலிங்கம்
பண்டித ரென்னும் நித்தியானந்தம்
ஜெயக்குமார், விநாயகமூர்த்தி
வரதன் என்னும் வரதராஜன்
வதனமலரின் அன்புத்தம்பி இவன்
இல1 அ.த.க.த பாடசாலையின் அதிபர்
பேரம்பலம் அவர்களின் புத்திரர்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரன் என்னும் தேவமனோகரன்
காந்தன் என்னும் தேவகாந்தன்

எங்கோ பிறந்தோம் வளர்ந்தோம்
எல்லோரும் ஒன்று கூடினோம்
ஒரு தாய் தந்தையின் பிள்ளைகளானோம்//
ஆரம்பக் கல்வி முதல்
இடை நிலைக் கல்வி
உயர் நிலைக் கல்வியென
அக்கராயன் மகா வித்தியாலயத்தில்
அழகான கல்விப் பயணத்தில்
பள்ளித் தோழர் தோழிகளாய்
சகோதர சகோதரிகளாய்
ஒன்று கூடினோம்
ஒன்று கூடி ஐக்கியமானோம்
இவர்கள்....
அக்கராயன் மகா வித்தியாலயத்தின் முத்துக்கள்
நாமெல்லோரும்....
அக்கராயன் மகா வித்தியாலயத்தின் சொத்துக்கள் //

எத்தனை விளையாட்டுப் போட்டிகள்
எத்தனை தமிழ்த்தினப் போட்டிகள்
எத்தனை பேச்சுப் போட்டிகள்
எத்தனை! எத்தனை! எத்தனை!
நடன சங்கீதப் போட்டிகள்
இன்னும் எத்தனை எத்தனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியவில்லை
மறந்து விடவும் முடியவில்லை
இங்கே! எங்கே!! எப்போ!!!
காண்போம்.... சந்திப்போம்....
பள்ளித் தோழர் தோழிகளை
நலமோடு வாழ வேண்டும்
என்றென்றும் சீரும் சிறப்போடும்
நலமோடு வாழ வேண்டும்//

எங்கள் ஆசான்கள்...
அகரம் சொல்லித் தந்த போதும்
சிகரம் ஏறி நின்ற போதும்
மாறாதவர்கள் எங்கள் ஆசான்கள்//
இதிகாசம் புராணம் இலக்கியத்தை
நகைச் சுவையோடு கற்றுத் தந்தவர்கள்//
இருளிலும் இயல்பாக இருக்கவும்
துன்பமேகம் சூழும் போதும் விழாது இருக்கவும்
இன்ப வெள்ளம் பெருகும் போது
அதிலே...
சாயாது இருக்கக் கற்றுத் தந்து
வாழும் முறையை நிறைவாகவும்
நாள் தோறும் கற்றுத் தந்தவர்கள்
உங்களிடம் நாங்கள் கற்றது
ஏராளம்! ஏராளம்!! ஏராளம்!!!
எங்கள் மூச்சு உள்ளவரை
உங்கள் நினைவுகள்
என்றென்றும் நிறைந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகரம் என்னும் சிகரத்தில்"
இன்று உங்கள் முன்னே
நானுமோர் மாணவியாக
பள்ளித் தோழியாக, சகோதரியாக
ஓர் கவிஞனாக....
சிறுவர் இலக்கியப் படைப்பாளியாக
அகரம் என்னும் சிகரத்தில் நின்று
என் தாய் தந்தையரை
நெஞ்சிலே சுமந்து
கல்வி என்னும் கதவைத் திறந்து
புடம் போட்டு வார்த்தெடுத்து
என்னை/எம்மை ஆளாக்கி வளர்த்தெடுத்த
ஆசான்களையும், வளவாளர்களையும்
நினைவிலே சுமந்து
அன்போடும் பண்போடும் கைகோர்த்து
கூடிக் குலாவித் திரிந்த
தோழர் தோழிகளை நெஞ்சிலே சுமந்து
உங்கள் முன்னே...
சிரந் தாழ்த்தி...
தலை வணங்கி
இருகரங்கூப்பி நிற்கின்றேன்
உங்கள் முன்னே
இருகரங்கூப்பி நிற்கின்றேன்
நன்றியோடு
இருகரங்கூப்பி நிற்கின்றேன்.

1966 - 1976 வரையான பதிவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரிடம் போய்ச் சொல்லி அழுவேன்

ஆராரிராரிராரோ கண்ணே ஆராரிராரிராரோ
ஆராரிராரிராரோ கண்மணியே ஆராரிராரிராரோ

கண்ணே நீ கண்ணுறங்கு- எந்தன்
கண்மணியே நீ உறங்கு
பொன்னே நீ உறங்கு- எந்தன்
பொன்மணியே கண்ணுறங்கு

உன்னப்பன் கதை கேட்டு - நீ
அமைதியாய் கண்ணுறங்கு- எந்தன்
சொந்தக் கதை கேட்டு
என் செல்லமே நீ உறங்கு
சொர்க்கத் தங்கமே நீ கண்ணுறங்கு

முள்ளிவாய்க்கால் வேதனையை - உன்னப்பன்
சொல்லியழ வார்த்தை இல்லை
அள்ளி அள்ளிக் கொடுத்து விட்டோம் - எமக்குச்
சொல்லியழ முடியவில்லை - எனக்குச்
சொல்லியழ நாதியில்லை
யாரிடம் போய் சொல்லி அழுவேன் - எனக்கு
நீயன்றி யாரும் இல்லை//
முள்ளி...

அரிசி சாமான் வாங்கவென்று - உன்
அன்னையவள் தாலி/யை தந்தாளடா
அரிசி வாங்கி வரும் முன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் மாண்டு மடிந்தாரடா...
அன்பே... என் செல்வமே
அனைவரும் மாண்டு மடிந்தாரடா
செத்துக் கிடந்த தாய் முலையில் - தங்கமே
சாய்ந்திருந்து பால் குடித்த
பச்சைப் பாலன் குழந்தை உன்னை - மகனே
பறித்து வந்த பாவியடா - உன்னப்பன்
பறித்து வந்த பாவியடா
யாரிடம் போய் சொல்லி அழுவேன் - எனக்கு
நீயன்றி யாரும் இல்லை
முள்ளி.....

நந்திக் கடல் அலையினிலே
நாறல் மீன்கள் மிதப்பது போல்
நீந்திக் கிடந்தாறடா - நம்
உறவுகள் செத்து மிதந்தாறடா - எங்கள்
சொந்த மெல்லாம் நீந்தி மிதந்தாறடா/கிடந்தாரடா
நல்லடக்கம் செய்யவில்லை - எமக்கு
கொள்ளி வைக்க நேரமில்லை
நாற் புறமும் சிதறிக் கிடந்த - ஐயகோ
நாற்புறமும் செத்துக் கிடந்த
பிணத்தின் மேலே
நடந்து வந்த பாவியடா- நாமெல்லாம்
நடந்து வந்த பாவிகளடா
யாரிடம் போய்ச் சொல்லி அழுவேன் - எனக்கு
நீயன்றி யாரும் இல்லை
முள்ளி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுவாகல் பாலத்திலே - நம்/எங்கள்
பாதங்கள் பட்டவுடன்
பாதி உயிர் போனதடா - இருந்த
மீதி உயிரும் போனதடா
மன்னாதி மன்னருக்கும் -பரம்பரையில்
தலை வணங்கா தமிழறடா/ தமிழனடா
இன்று மண்டியிட்டுக் கிடந்தோமடா
உலகம் வேடிக்கை பார்த்ததடா
நீதி கிடைக்கல்லடா - எமக்குத்
தீர்வும் கிடைக்காதடா
யாரிடம் போய் சொல்லி அழுவேன் - எனக்கு
நீயின்றி யாரும் இல்லை
முள்ளி....

ஆராரிராரிராரோ தங்கமே ஆராரிராரிராரோ
நாடும் வீடும் வாழ்த்திடவே - என்
செல்லமே நீ கண்ணுறங்கு
உன்னப்பன் துணை இருப்பான்
கண்மணியே நிம்மதியாய் கண்ணுறங்கு



முள்ளிவாய்க்கால் நினைவுநாள்
18.05.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிரோடு கலந்து விடு செந்தமிழே

தமிழே! தமிழே! செந்தமிழே - என்
உயிரோடு கலந்து விடு.
தமிழே! தமிழே இன்னிசைத் தமிழே - எந்தன்
உணர்வோடு கலந்து விடு

அம்மா என்னும் அழகிய தமிழை
செந்தமிழ் இசையில் நான் பாடவா
அம்மா பாடும் தாலாட்டுத் தமிழை
ஆராரோ இசையாய் நான் மீட்டவா
ஆராரிராரோ! ஆராரிராரோ
நீலாம்பரி ராகமாய் நான் மாறவா

தோள் மீது சுமந்த தந்தையின் கதையை
தேன் சுவைத் தமிழில் நான் கூறவா
தந்தையாய் நண்பனாய் நல்வழி காட்டிய
ஈன்றவர் சுமையினை நான் சொல்லவா
தந்தையின் நெஞ்சம் தூலியாக்கி
ஆடி மகிழ்ந்ததை நான் சொல்லவா
தந்தையின் பெருமையினை நான் பாடவா

தூவானம் தூவ இடியோசை மின்ன
சோவெனப் பெய்யும் மழையாகவா
மார்கழி குளிர் வாடை மேனியெங்கும் தழுவ
மௌன மென்னும் மொழியால் இசைத்திடவா
இளந் தென்றல் காற்று சில்லென்று வீச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் இசைத் தமிழில் நான் பாடவா
ஆர்ப்பரிக்கும் அலை கடலின் அலையாக வா?
அலைகளின் ஓசையாய் நான் மாறவா

நீல வானில் கருமுகிலோட
விண் மீன்களாக நான் மாறவா
பொன் மாலைப் பொழுதில் செவ்வானம் மறைய
வெண்ணிலாவாக நான் தோன்றவா
பூங்குயில் கூவ பொன் மயிலாட
பூந் தென்றல் காற்றாய் நான் வீசவா
செந்தமிழ் இசையில் யாழினை இசைத்து
சரிகம பதநிச நான் பாடவா
சங்கீத ராகமாய் நான் மாறவா
சந்தோச வானிலே பறந்திடவா - நான்
சந்தோச வானிலே பறந்திடவா

தேசிய கலை இலக்கிய போட்டி
2020.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நீயே எந்தன் இராகமம்மா"

அன்னை உந்தன் மடியினிலே
அமைதியைக் கண்டேனம்மா
அன்பெனும் பாலூட்டி சீராட்டி
அரவணைத்தக் கைகளம்மா
அம்மா உந்தன் கைகளம்மா

ஆராரோ! ஆரிராரோ///- தாயே
நீ பாடும் பாடலம்மா//
ஆண்டாண்டு சென்றாலும்
மாறாத கீதமம்மா - அம்மா
"நீயே எந்தன் இராகமம்மா"

இமயம் என்னும் சிகரத்தில் - என்னை
ஏற்றி வைத்த தாயவளே
இசைத் தமிழாய் புகழ் பெறவே
இப் புவியில் உயிர் கொடுத்தாய் - என்
இமைகள் மூடும் வரை
உன் நினைவு மாறாதம்மா//

ஈரைந்து மாதங்களாய் - எனைக்
கருவறையில் நீ சுமந்து//
ஈன்றெடுத்து இவ் வையகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வாழ வழி வகுத்தாய்
இமைப் பொழுதும் உனை மறவேன்
உன் நினைவே போதுமம்மா//

உன்னை எண்ணி உறங்கையிலே - என்
கனவில் (தினம்) வருவாயம்மா
உன்னருமை தெரிந்து கொண்டேன்
உன் உணர்வைத் தேடுகின்றேன்
உன் தோள் மீது சாய்ந்திடம்மா

ஊண் உறக்கம் இல்லாமல்
எனை வளர்த்த தாயவளே//
ஊருலகம் வாழ்த்துதம்மா/போற்றுதம்மா - இன்று
நீ என்னருகில் இல்லையம்மா
என்னை வாழ வைத்துச் சென்றாயம்மா

எப்போழ்தும் உன் நினைவு
என் மனதை வாட்டுதம்மா//
எங்கு சென்று நீ மறைந்தாய்
நான் அறிய வில்லையம்மா - இனி
எப் பிறப்பில் காண்பேன் அம்மா

ஏணிப்படி போல என்னை
அகரம் என்னும் சிகரத்தில்//
ஏற்றி வைத்து பார்க்கு முன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாண்டம் சென்றாயம்மா
ஏன் என் உயர்வைக் காணாமல்//

ஐங்கரத்தான் துணை இருக்க
ஐயன் எமை அரவணைக்க
ஐயமின்றி வாழ்ந்தோமம்மா - நீ
ஐபதி மூன் றகவையிலே
ஐயனடி சேர்ந்தாயம்மா
ஐக்கியமாய் ஆனாயம்மா//

ஒன்று கூடி வாழ்ந்திருந்தோம் - இன்று
தனி மரமாகி விட்டேன்/விட்டோம்
ஒரு நொடியில் பறந்து விட்டாய்
ஒவ்வோரிடமும் தேடுகின்றேன்/றோம்
ஒருமுறை ஒரு பொழுது
எம்மருகில்/என்னருகில் இருந்திடம்மா
ஒற்றியூரான் துணை யிருப்பான்
கவலை உனக்/எனக் கில்லையம்மா//

ஓதிம முயர்ந்தோன் உன்னை
இப்புவியில் படைத்தா னம்மா//
ஓராட்டுப் பாடிடுவேன்
அமைதியாய் உறங்கிடம்மா - என்றோ
ஓர் நாள் மரணமம்மா
இப்புவியில் வாழும் வரை - மீண்டும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் பிறப்பெடுத்தால்
என் மடியில் தவழ்ந்திடம்மா//

ஔவைக் கிணை யானவளே
என் அம்மா முத்தம்மா//
ஔடதமாய் எனை வளர்த்து - இப்
பாரினிலே உயர வைத்தாய்
அகரம் என்னும் சிகரத்தில்/லே
உன் உருவம் தெரியுதம்மா
இவ்வுலகில் வாழும் வரை
உன் நினைவு மாறாதம்மா//

தாயாருக்காக வரையப்பட்ட கவிதை
*1989.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரெழுத்துக்கள்

அம்மா அப்பா வாருங்கள் - நாம்
ஆண்டவனைத் தினம் தொழுதிடுவோம்
இன்பம் துன்பம் எது வந்தாலும்
ஈசனின் பாதமே சரணடைவோம்

உண்மைக்காக உழைத்திடுவோம் - தினமும்
ஊக்கத்துடன் நாம் படிப்போம்
எங்கள் கல்வி வளம் பெறவே
ஏக்கம் இன்றிக் கற்றிடுவோம்

ஐயம் இன்றிச் செயற்படுவோம் - நாம்
ஒற்றுமையாக வாழ்ந் திருப்போம்
ஓடியாடி விளை யாடிடுவோம்
ஔவையின் தமிழ் மொழி காத்திடுவோம்

விரியும் மொட்டுக்கள்
*2004.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சேவகி

அழகான வசீகர முகத் தோற்றம்
அதிலும்...
அழகிய கார் மேக வண்ணனின் நிறத் தோற்றம்

ஆஹா... ஆஹா...
ஆடம்பரம் இல்லாத உருவமுடையாள்
ஆறுதலாகப் பேசும் கிளி மொழியால்
நுணாவில் கிழக்கு மக்களின் பொக்கிஷம்
ஆமாம்... அவள்
நுணாவில் கிழக்கு மக்களின் பொக்கிஷம்
இனிய செவ்விதழால்
இன் முகத்தோடு வாவென்றழைத்து
இருக்கையில் அமர்த்திடும்
இல்லத்து அரசியவள்//

ஈன்றெடுத்த அன்னையினை யானறியேன்
அந்த எம்பெருமான்
ஈசன் துணை புரிய வேண்டுகின்றேன்//

உத்தமியே கிராம சேவகியே
உன்னுடைய பெருமையினை கூற
உந்தன் நுணாவில்
கிராமமே திரண்டிடுமே//

ஊருராய் இரு சில்லு வண்டியிலே
ஊர்ந்தூர்ந்து நீ செய்த சேவையினை
ஊர்தான் அறியாதோ
ஊர் மக்கள் தான் அறியாரோ//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னென்ன செய்தாய் ஊர் மக்களுக்கு
என்றுமே யானறியேன்
எல்லாமே ஊரறியும்//

ஏந்திழையே கிராம சேவகியே
ஏழைகளின் துயர் துடைத்த நாயகியே
ஏகாம்பரன் துணை புரிய வேண்டுகின்றேன்
ஐக்கியமாகி ஓரிரு ஆண்டுகளாய்
உன்னோடு
ஐயமின்றி பேசி உறவாடி மகிழ்ந்தேன்
ஒரு நிமிடம் அல்ல
ஒரே ஒரு நிமிடம் சிந்தித்தேன்
ஓய்வு பெறும் வயது வந்ததுவோ என்று

கிராம சேவகியே
நீ...
ஓய்வு பெற்றுச் சென்றாலும்
ஓங்குக உந்தன் சமூக சேவைகள்
அதுவே...
ஔவையின் திருவாக்காகும்
அஃதே எமக்கும் மருந்தாகும்
கிராம சேவகியே
"Mrs பாலசுப்பிரமணியமே"
வாழ்க வளமுடன்
வளர்க உந்தன் சேவைகள்.

J/306 நுணாவில் கிழக்கு சாவகச்சேரி பகுதியில் கிராம சேவகியாக சேவையாற்றி ஓய்வு பெற்ற திருமதி பாலசுப்பிரமணியம் அவர்களின் பிரியவிடை நிகழ்வுக் கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறடி மாமனிதர்

அழகிய வதனங் கொண்ட
அன்புச் சோதரா தம்பி இரவிராஜ்//
அழகான புன் சிரிப்போடு
நீ.....
அசைந்து நடந்து வரும் போதினிலே
அகிலம் எங்கும் புகழ் பரவுமே//

"ஆறடி மாமனிதா"
நீ என்றும்
ஆளுமை நிறைந்த மாமனிதனடா//
ஆனாலும்.... நீ...
மும்மொழிச் சட்டத் தரணியடா
எமக் கெல்லோருக்கும்
ஆறுதல் என்றிருந்தோம்
ஆறும் அறியாமல் பறந்து சென்றாயடா//

"இராஜ் அகம்" என்றால் - எமக்கெல்லாம்
இரவிராஜ் இல்ல மன்றோ//
இப்போது உந்தன்
இருக்கையும் காலியானதே
இருந்த இடமும் வெறிச் சோடி கிடக்குதே
இனி காண்பதெப்போ சொல்லப்பா//

ஈரைந்து மாதங்கள்
ஈன்றெடுத்த அன்னையிவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர விழியில் நீரூற்றிப் பாயுதே
ஈன்றவள் பெருமையினை - இந்த
ஈரேழு உலகமும் போற்றிடுமே/போற்றுதடா//

உனது பணி தொடர்ந்தென்றும்
உறுதியாய் நிற்பாய் என்றிருந்தோம்
உத்தமனேசெந்தமிழ்ச் செல்வனே
உன் தரத்தைக் குறைத்தனரோ?
உந்தன் பலத்தை அழித்தனரோ?

ஊருக்கெல்லாம் சட்டம் வகுத்து
ஊரறிய உரிமைக்காக குரல் கொடுத்தாய்
ஊரெல்லாம் உன் நாமம் சொல்ல
ஊருலகம் போற்ற வாழ்ந்தாயடா//

எதிரே நிற்கத் திராணியற்ற
எட்டப்பன் கூட்டமடா
எட்ட நின்று எய்தானோ
எங்கள் மைந்தன் இரவிராஜ்சை//

ஏந்திழையாள் தவித்திருக்க
பிள்ளைகள் எல்லாம்
ஏங்கிக் கதறியழ//
ஏன் எடுத்தாய் உதிரத்தை
ஏன் உனக்கு உயிர்ப் பசியோ?//

ஐயமின்றிச் சட்டச் சபையில்
ஐயானனன் போல் குரல் கொடுத்தாய்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐ" பத்தாவது அகவை ஆகுமுன்பே
ஐக்கியமானாயோ?
ஐங்கரத்தானடியில்//

ஒவ்வொரு சந்திப்பின் போதும்
ஒரு புன் சிரிப்போடு பதிலளிப்பாயே//
ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்காக
பாராளுமன்றில் சட்டச்சபையில்
ஓயாமல் குரல் கொடுப்பாயே
இனி நாம்
ஓலமிட்டு கதறி அழுதாலும்
ஓயாது உந்தன் சோகம்
எந்நாளும் தீராது உந்தன் நாமம்

ஔவைக்கு இணையான தமிழ் மொழியின் தங்கமகன்
ஔடதமாய் இருப்பாய் என்றிருந்தோம்
இன்று வேரிழந்த ஆலமரமாய்
தவிக்குதய்யா ஊருலகம்
தவிக்குதய்யா உன் குடும்பம்//

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ இன் மானிலத்தே
அஃதே உந்தன் ஆத்மா சாந்தியடையட்டும்//

தென்மராட்சி மண்ணின் மைந்தன் மதிப்பிற்குரிய சட்டத் தரணியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான தம்பி திரு. இரவிராஜ் அவர்களுக்கான கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது உறவு

அழகிய முகத்தோடும்
அழகான புன் சிரிப்போடும்
அஞ்சலி வந்தனம் செய்து
அன்பாக வரவேற்று//

ஆர அமர இருக்கையில் இருத்தி
ஆவி பறக்கும் காப்பி கொடுத்து//

இனிமையான செவ்விதழால்
இனிய மொழி பேசியவளே//

ஈரவிழி கரைந்தோட
ஈசனடி சென்றனையோ?

உன்னதமான வாழ்க்கைப் பயணத்தில்
உறுதியான மனத்துடனும்
உற்சாகத்துடனும்//

ஊருக்கு நற்பணி சேவை செய்த நீ
ஊருலகை விட்டுச் சென்ற தேனோ?

எல்லோர் மனங்களிலும்
எளிமையாக நேர்மையாக வாழ்ந்து//

ஏங்கித் தவிக்குமுன் செல்வங்களை
ஏங்க விட்டுச் சென்றனையோ?//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐ"இரண்டு மாதந்தான் ஒன்றாகினோம்
ஐக்கியமாகி விட்டோம் ஓர் புது உறவில்//


ஒரு உன்னத உறவை வளர்க்க முன்னே
ஒரு நொடியில் பறந்து விட்டாயே//

ஓடியாடி நீ வந்த பாதையினை
ஓடி ஓடித் தேடுகின்றோம்//

ஔவையின் சாயலிலே இருந்த நீ
ஔடதமாய் இருப்பாய் என்றிருந்தோம்//

அஃதே பொல்ல நோய் வந்து
அஃதே உன்னாத்மா பறந்ததுவோ?
இன்னொரு பிறவி நீ எடுத்தால்
மீண்டும் உயிர்த்திட
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்//

2012.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப ஒளி ஏற்றிடுவோம்

அன்னைக்கு ஒளி யேற்றி
அகிலத்தை காத்திட
அன்பாய் வாழ்ந்திருப்போம்
ஆண்டவனை தினம் தொழுது
ஆராதனை செய்திடுவோம்.

இன்னல் இடர்களைப் போக்கியே
இன்பமாய் வாழ்ந்திருந்து
ஈரேழுலகமும் போற்றி வாழ்ந்திடவே
ஈகையாளராய் நாம் நடந்து

உக்கி உலர்ந்து சிதைந்திருக்கும்
ஊமை எங்கள் நெஞ்சினிலே.
எத்தனை வேதனைகள் சோதனைகள் வந்தாலும்
எது வரினும் வீறு நடை போட்டு

ஏக்கங்கள் நிறைந்திருக்கும் இவ் வாழ்க்கையை
ஏணிப்படிக்கற்களாய் ஏற்றம் பெறச் செய்து
ஐயத்தைப் போக்கி இந்நானிலம் சீர்பெற்றெழ
ஐயமின்றி இப் பூவுலகில் நிம்மதியாய் வாழ்ந்திட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நொடியினில் வந்திடுவாய்
ஓராயிரம் தீபவொளி ஏற்றிடவே
ஔடதப் பொருளாய் நீ வருக
ஔவையின் முதுமொழியைக் காத்திடவே//

ஔவையின் தமிழ் மொழியை போற்றி வணங்கிடவே//
அஃதே எந்நாளும் தீபவொளி ஏற்றிடுவோம்//

வலம்புரி பத்திரிகை
2009.



# "தேசமெல்லாம் சீரழியுதே"

அகதி என்ற பெயர் வேண்டாம்
அமைதியான வாழ்வொன்றே போதும்
அகந்தை கொண்ட மனம் வேண்டாம்
அகிம்சையான பாதை ஒன்றே போதும்

ஆள்க் கொல்லும் மனித இனம் வேண்டாம்
ஆஹாரம் ஒன்றிருந்தாலே போதும்
ஆடம்பர வாழ்க்கை வேண்டாம்
ஆரத் தழுவி கைதூக்கி விட்டாலே போதும்

இயலாமை என்ற எண்ணம் வேண்டாம்
இல்லம் எங்கும் புதுவசந்தம் வீசினால் போதும்
இனமதங் கொண்ட தேசம் வேண்டாம்
இணைந்த இசைத் தமிழாய் வாழ்ந்தாலே போதும்

ஈரேழுலகமும் எமக்கு வேண்டாம்
ஈகையாளனாய் வாழ்ந்தாலே போதும்
ஈனப் பிறப்பு எமக்கு வேண்டாம்
ஈன்றார் பெருமையை உரைத்தாலே போதும்

உலகத்தை நாம் அறியும் முன்னே
உறவுகளை இழந்து விட்டோம்
ஊட்டி வளர்த்த தாய் தந்தை முகம் காணோம்
ஊர் பேர் தெரியாத தேசத்திலே
எடுப்பார்க் கைப் பிள்ளையானோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கித் தவிர்க்கும் அனாதையானோம்
ஐயகோ என்று கட்டித்தழுவி கதறியழ
ஒரு உறவு இல்லையே எந்தனுக்கு/எங்களுக்கு

ஓடியாடித் திரிந்த இவ் வையகத்திலே/மண்ணிலே
ஔடதத்திற்குக் கூட இடம் இல்லையே
ஔவையின் தமிழ்மொழி அழியுதே
அஃதே எங்கள் "தேசமெல்லாம் சீரழியுதே//

2009, 2010 ஆம் ஆண்டுகளின் சிறுவர்கள் பட்ட துயரங்கள் பற்றிய 2010.05.15 இல் வரைந்த கவிதை.



## "அன்புத் தோழிக்கு அகவை அறுபது"

அன்போடு பேசி
அளவோடு உறவாடி மகிழ்ந்து
அறிய பல கதைகள் சொல்லி/பேசி
அக்கராயன், ஸ்கந்தபுரம்
பிரதேசம் எங்கும்
ஆடிப்பாடி கூடி விளையாடி
ஆனந்தமாய் கல்வி பயின்ற
இன்பமான நாட்கள் தோழி அன்று

ஈடிணை இல்லாத இவ்வுலகில்
உற்றார் உறவினர்களோடு
ஊர்க் கதைகள் பேசி உறவாடிட
நேரம் இல்லையே தோழி இன்று

எங்கோ பிறந்தோம் வளர்ந்தோம்
என்றும் இணை பிரியாத சொந்தமானோம்
ஏற்றத் தாழ்வு நிறைந்த இவ்வுலகில்
ஏக்கங்களோடு வாழும் நிலையடி தோழி

"ஐ" புன்னிரண்டாவது அகவையில்
ஐக்கியமாகி விட்டோமடி தோழி
ஐங்கரத்தான் துணையிருப்பான்
ஐயமில்லை இனி உன் வாழ்வில்
ஒரு தாய் வயிற்றில் பிறந்தோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக உணவுண்டு விளையாடி மகிழ்ந்து
ஒரு தாய் தந்தை மடியில் உறங்கி
ஒற்றுமையாய் வாழ்ந்திருந்தோமே அன்று
ஓராயிரம் இன்பமான கனவுகளோடு
கவலையும் சேர்ந்து
ஓராயிரம் வார்த்தைகள் கேட்டு
அன்பாக சிரித்துப் பேசிட
ஓடி ஓடி உறவுகளைத் தேடுகின்றோம் இன்று.

ஔவையின் இலக்கணத்திற்கு இணையாக
ஔவையின் முது மொழியை நாடி
அஃதே வாழ்க்கை என எண்ணி
நீ நோய் நொடி இன்றி
நீடூழி காலங்கள் வாழ்ந்திட
வாழ்த்துகின்றேனடி தோழி.

பள்ளித் தோழிக்காக வரையப்பட்ட கவிதை.
03.03.2018.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உயிரெழுத்தாய் வாழ்ந்த நமசிவாயம் ஐயா"

அழகிய புன்னகை மலர்ந்த முகத்தோடு
நமசிவாய மெனும் நாமத்தோடு

ஆடி அசைந்து தனங்கிளப்புக் கிராமத்தில்
கிராமசேவையாளராய் கடமையாற்றி

இனிமையான குரலினாலும் தமிழ் பேச்சினாலும்
மடித்துக் கட்டிய வேட்டியோடு

ஈகையாளனாய் மக்கள் மனதில் இடம்பிடித்து
சேவைகளை கடமை கண்ணியத்தோடு ஆற்றி

உண்மையுடன் நேர்மையான நல்ல பண்பாளனாகவும் வாழ்ந்து
கிராம மக்களை வழி நடாத்தி

ஊருக்கு உபதேசம் உனக்கல்ல என்ற
பழமொழியை பொய்யாக்கி வாழ்ந்து

எடுத்த காரியங்கள் அனைத்தும் சோர்ந்து போகாது
நீதி நேர்மையுடன் கடமை புரிந்து

ஏர் பிடித்த மண்ணில் ஆவினங்கள் பால் சொரிந்து
நெல் மணிகள் பூத்துக் குலுங்கும் கிராமத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமின்றி அயராது உழைத்து கமக்காரனாகவும் வாழ்ந்து
நூற்றியொரு வயதில் இறையடி சேர்ந்தாயே


ஒரு உன்னத மனிதனை/உறவை இழந்து தவிக்கும்
கிராம மக்களோடு குடும்பத்தாரும்
ஓடி ஓடி நீங்கள் நடந்து திரிந்து வந்த பாதையை
ஓராயிரம் முறை தேடித்தேடி தவிக்கின்றோம்.

ஔவையின் முதுமொழிக் கிணையான மனிதனாக
ஊர் போற்ற வாழ்ந்து ஓய்ந்து போனீரே

அஃதே உங்கள் ஆத்மா சாந்தி பெற
குலதெய்வம் காரைத்தூவிநாயகனை இரஞ்சுகின்றோம்//

சாவகச்சேரி தனங்கிளப்பு கிராம சேவையாளர் திரு.பொன்னையா நமசிவாயம் ஐயா அவர்களின் "ஓம் நமசிவாயம்" என்னும் நினைவு மலர் கவிதை.

04.02.2018.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவனின் தைத் திருநாள்

அமைதி எங்கும் பொங்கிட
ஆதவன் கதிரொளிப் பரப்பிட
இன்னல்கள் துன்பங்கள் பறந்தோடிட
ஈறாறு மாதங்கள் கடந்து வந்தாய்//

மீண்டும்! மீண்டும்!!

உழவர் பெருமையை உணர்த்திட
ஊர் உலகம் எல்லாம் ஒன்று கூடி வாழ்த்திட
எங்கும் எதிலும் எப்போதும் உயர்ந்தது
ஏர் பிடித்த உழவனைப் புகழ்ந்து பாடிட//

சேற்றிலே கால்பதித்த உழவன்//

ஐயமின்றி வீறு நடையோடு தலை நிமிர்ந்து வாழ்ந்திட//
ஒன்று கூடி வாழ்த்துவோம் வாழுவோம்.
ஓடி ஓடி உழைத்த உழவனின் திருநாளினை //
ஔவையின் தமிழ் மொழியாய் பொங்கட்டும்

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல்லுயரும்
நெல்லுயரக் கோன் உயர்வான்
கோன் உயரக் குடியுயரும்"
அஃதே உழவனின் தைத் திருநாளாகட்டும்.

உதயன் பத்திரிகை
2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனங்களப்பூரின் கூடம்

அன்போடு பண்பையும் உணர்திடும் கூடம் - நல்
அறிவைப் புகட்டிடும் கூடம்

கூடம் எங்கள் கூடம்
தனங் களப்பூரின் கூடம்
கூடம் பள்ளிக் கூடம்
அரசினர் தமிழ்க் கலவன் பள்ளிக் கூடம்//

ஆயிரத் தென்னூற்றிப் பதினெட்டாம் ஆண்டிலே
ஆரம்பமானது அழகான கூடம்
ஆசார சீலராய் நாம் வாழ்ந்திடவே - நல்
ஆசானைத் தந்து வழிகாட்டும் கூடம்

கூடம் எங்கள் கூடம்
தனங் களப்பூரின் கூடம்
கூடம் பள்ளிக் கூடம்
அரசினர் தமிழ்க் கலவன் பள்ளிக் கூடம்//

இயல் இசை நாடகம் முத்தமிழும் தந்திடும்
இயற்கை எழில்/வளங் கொண்ட கூடம்

ஈர் மூன்று ஆ(ர்) ரேழு தலைமுறைகள் பயின்று -நல்
ஈகையாளரை வளர்த்த நல்ல கூடம்



கூடம் எங்கள் கூடம்
தனங் களப்பூரின் கூடம்
கூடம் பள்ளிக் கூடம்
அரசினர் தமிழ்க் கலவன் பள்ளிக் கூடம்//

உண்மையுடன் நேர்மையும் அறிவூட்டும் கூடம்
ஊரெல்லாம் போற்றி வாழ்த்திட வழிகாட்டும் கூடம்

எண்ணக் கருவோடு சுத்தம்/சுகாதாரம் சமயமெனப்புகட்டி
ஏணிப்படி போல உயர்த்திடும் கூடம்

கூடம் எங்கள் கூடம்
தனங் களப்பூரின் கூடம்
கூடம் பள்ளிக் கூடம்
அரசினர் தமிழ்க் கலவன் பள்ளிக் கூடம்//

ஐயமின்றி உடற்கல்வி விளையாட்டும் பயின்றிட - இனி
ஐயமே இல்லை கற்றிடுவோம் எந்நாளும்

ஒன்று பட்டு ஒற்றுமையாய் வாழ்ந்திருக்கும் கூடம்
ஓடியாடி விளையாடி மகிழ்வூட்டும் கூடம்

கூடம் எங்கள் கூடம்
தனங் களப்பூரின் கூடம்
கூடம் பள்ளிக் கூடம்
அரசினர் தமிழ்க் கலவன் பள்ளிக் கூடம்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையின் முது மொழியும்
வள்ளுவன் திருக் குறலும்/குறலென - நல்
நூல்களைக் கற்றுத் தந்திடும் கூடம்

அஃதே எங்கள் கூடம்
தனங் களப்பூரின் கூடம்
கூடம் பள்ளிக் கூடம்
அரசினர் தமிழ்க் கலவன் பள்ளிக் கூடம்//

சாவகச்சேரி யா/தனங்களப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இரண்டு மாடிக் கட்டிடத் திறப்பு விழாவுக்காக வரையப்பட்ட கவிதை.
21.01.2019.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "எங்களின் பேச்சு உதயனின் மூச்சு"

அதிகாலை வேளையிலே
அவசரமாய்த் துயிலெழுந்து
ஆதவன் உதிக்கும் முன்னே
ஆர்வமுடன் புறப்பட்டு
இனிய காலைப் பொழுதினிலே
இன்பத் தமிழ் மணம் வீசிட

ஈடினை இல்லாத
நல்லதோர் சேதி சொல்ல
ஈகையாளனாய் எம் தேசத்தில்
உறவுகளைத் தேடித் தேடி
உண்மையை உணர்த்திட

நேர்வழியை நாடி
உலகறிந்த செய்திகளை
பல் சுவை விருந்தாக்கி
உடனுக்குடன் சுடச்சடத் தருபனே//

ஊடகத்தின் தலைமகனே
உதயத்தின் உதயமே/னே
ஊரறிய உலகறிய
செந் தழிழைப் புகழ்பரப்பி//

என்றும் உதயன் எதிலும் உதயன்
எங்கும் உதயன் எப்போதும் உதயன்
எத் திசை நோக்கினாலும் பார்த்தாலும்
"எங்களின் பேச்சு உதயனின் மூச்சு"//
ஏட்டறிவு அதிகமில்லை உதயன்
எம்மவர்க்கு அருளிய கொடையிது//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடெடுத்துப் படிக்கவில்லை
உதயத்தில் உதயனின்
ஏடுகள் இளையோர், முதியோர், சிறுவரென
தினமும் கையில் தவழும்
ஏராளம்! ஏராளம்! ஏராளம்!!

"ஐ" யேழாம் அகவையிலே
நீ கால் பதித்து
ஐயம் இன்றி வீறு நடையோடு
வெற்றி நடை போட்டு
ஒவ்வொரு காலைப் பொழுதிலும்
ஒவ்வொரு வாசகர் கைகளிலும்
ஒய்யாரமாம் தவழ் திடுவாயே//
ஓவென்று இரைகின்ற காற்று மழையுடன்
வெயிலையுந் தாண்டி
ஓயாத கடல் அலை போல
ஓயாது உந்தன் பயணம்

ஔவையின் இலக்கண இலக்கிய
மொழி நடையுடன்
ஔடதமான மனதிற்கு புத்துணர் வூட்டி
மீண்டும்! மீண்டும்!!
அஃதே உனது நோக்குடன்
அஃதே இலட்சியப் பயணத்தை நோக்கி
நூற்றாண்டு காலம்
என்றென்றும் உதயமாக
உதயனை வாழ்த்துகின்றேன்.

உதயனின் 35 ஆவது அகவை, உதயன் பத்திரிகை
27.11.2019.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருகிலிருந்த உடன் பிறப்பே

அன்பால் அரவணைத்து
அம்மாவாய் நீ இருந்து
அறுபத்தோர் ஆண்டுகளாய்
அருகிருந்த உடன் பிறப்பே
அக்கா என்று ஒரு சொல் கேட்டாலே

ஆழமான உந்தன் பார்வையால்
ஆழும் உந்தன் கண்களால்
ஆரத் தழுவி என்னை
ஆலிங்கணம் செய்திடுவாய்
ஆலம் விழுதுகள் போல
ஆயிரமாயிரம் உறவு கொண்டாய்
ஆடிப் பாடி நித்தமும்
ஆனந்தமாய் நீ இருந்தாய்

இல் வாழ்வின் குலவிளக்காய்
இன்பம் பெருகும் திருவுருவாய்
இன் முகங்காட்டி வரவேற்று
இயன்றன பலவும் செய் துவிட்டு
இலையுதிர்ந்த செடியாக நீரற்ற நிலமாக
இங்கு எம்மை தவிக்க விட்டுச் சென்றாயே
இன்று அவை மெய்யாகிப் போனதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்றெடுத்த எம் தாய் தந்தை
எம்மருகில் இருந்ததில்லை
ஈசன் உமையால் போல
என்னருகே நீ இருந்தாய்
ஈருடலும் ஒருயிராய் தாயின் கருவறையில்
ஒன்றாய் இணைந்து பிறந்தோம்
ஈகையின்றி மகிழ்வுடன் நீ
ஈடில்லாப் பணிகள் ஆற்றி நின்றாய்
ஈடு செய்ய முடியாமல்
ஈசனடி சேர்ந்தாயே ஒரு நொடியில்

உற்ற துணை கோடி பேர்
என்னருகில் இருந்தாலும்
உறவு என்று சொல்ல
நீ ஒருத்தி தானே
உன் சிரிப்பில் நாம் மகிழ்ந்த காலம்
மீண்டும் இனித் தோன்றுமா?
உன்னைத் தேடும் விழிகள்
இனி விண்ணோக்கி செல்லுமா?
உன் சுந்தரச் சிரிப்பைக் காண
வானுலகம் வர வேண்டுமா?
உன்பர் உலகில் உன் ஆத்மா சென்றிருந்தால்
உன் தங்கைக்கும் ஓர் இடம் தேர்ந்தெடுத்துவிடு

ஊரும் உறவும் இல்லை
உற்றமும் சுற்றமும் என்னருகிலில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் அளந்து நாடளந்து
உந்தன் பிள்ளைகளால் உயர்வு பெற்றாய்
ஊர் கூடி வந்திங்கே
உந்தனுக்கு உற்ற கடன் செய்வதற்கு
ஊசாடி நீநடந்த பாதையெல்லாம்
உவர் நிலமாய் காணுதிங்கே
ஊஞ்சலிலே நீ ஆடி மகிழ்ந்த இடம்
ஊற்று நீராய் ஓடுதிங்கே

எனக்கான தேவை எதுவென்று
எப்போதும் நானறியேன்
எல்லாமுமாய் நீ இருந்தாய்
இறுதிவரை உறுதி கொண்டேன்
என் உடல் நலத்தைத் தவிர
நீ வேறெதுவும் கேட்டதில்லை
எங்கு சென்று நீ மறைந்தாய்
தேடித் திரிகின்றேன் நித்தமும்

ஏணிப்படியாய் நீ இருந்து
உன் பிள்ளைகளை வளர்த்து
ஏற்றப் பெறச் செய்து
ஏற்றி விட்டாய் சிகரத்தில்
ஏங்கித் தவிக்கின்றோம்
உந்தன் அழகு முகங்காண
ஏக்கங்களைத் தீர்த்திட நீ
ஓடோடி வாறாயோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமின்றி நாமிருவர் மட்டும்
உறவாடி மகிழ்ந்திருந்தோம்
ஐபதினாங்கு ஒன்று அகவையிலே
ஐங்கரத்தான் சேவடியில்
ஐக்கியமாகி விட்டாயே
ஐயமின்றி இப் பூவுலகில்
எப்படி நடமாடிடுவேன்
ஐயமின்றி இப் பூமியிலே
எப்படி நானிருப்பேன்


ஒன்பது இதழ்களை விரித்த
செந்தாமரைப் போல
ஒளி விளக்காய் நீயிருந்தாய்
ஒருவன் மட்டும்(தம்பி) இல்லையென்று
ஒவ்வொரு பொழுதும் நாம்
ஒரு யுகமாய் காத்திருந்தோம்.
ஒருவருக்கு ஒருவராய்
ஒற்றுமையாய் நாமிருந்தோம்
ஒளி இழந்த கண்களுடன் - இன்று
ஒளி இல்லா விளக்கானோம்.

ஓடியோடி நீ வளர்ந்த
மரஞ் செடி கொடிகளெல்லாம்
ஓசையின்றி வாடிக் கிடக்குதிங்கே
உந்தன் வீட்டுக் கதவு யன்னல்கள் எல்லாம்
ஓடுவிப் புருதி வலைப் பின்னி வாழுதிங்கே

ஒந்தி ஒணான் ஒன்று உந்தன்
முற்றத்தில் நின்றுவா வாவென்று
ஓந்தி ஓணான்தலை ஆட்டுதிங்கே
ஓமப்பொடி கொண்டு வந்து
உன் வீட்டைக் காத்திட
ஓடோடி வாராயோ
நீ ஓடோடி வாராயோ

ஒளவையின் செந்தமிழை
உன் செல்வங்களுக் கெல்லாம்
ஒளடதமாய் கொடுத்துவிட்டு
ஒளடதமான கல்லறையில்
சிவனருளோடு இணைந்துவிட்டாய்
என்றென்றும் எமக்கு
ஒளடதமே உன் ஆசியாகும்
அஃதே எமக்கு மருந்தாகும்
உந்தன் ஆத்மா சாந்திவேண்டி
உயிரெழுத்துப் பாமாலையால்
உந்தனுக்குச் சமர்ப்பணம் செய்கிறேன்.

17.09.2020.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் IV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் முன்பள்ளி இல்லம்

மழலைகள் இல்லம் இது குழந்தைகள் இல்லம்
சிறுவர்கள் இல்லம் பாலர் முன்பள்ளி இல்லம்///

துள்ளித் திரிந்திடும் மழலைகள் இல்லம்
அள்ளி அணைத்திடும் குழந்தைகள் இல்லம்
ஆற்றல் வளர்த்திடும் சிறுவர்கள் இல்லம்
ஆறுதல் அளித்திடும் முன்பள்ளி இல்லம்

அன்னை மடியினில் தவழ்ந்திடும் பிள்ளையை
அன்புடன் துடிப்புடன் வந்திடும் பிள்ளையை
கனிவுடன் நடிப்புடன் அணைத்திடும் பிள்ளையை
அன்னையாய் தந்தையாய் வளர்த்திடும் பிள்ளையை

அதிகாலையிலே நீ துயிலெழ வேண்டும் -
காலைக் கடன்களை முடித்திட வேண்டும்
சுத்தமாய் தினமும் குளித்திட வேண்டும்
அன்னை தந்தை குரு வணங்கிட வேண்டும்

ஆடிப்பாடி நீ மகிழ்வுடன் இருக்கையில்
இசைந்து வந்து நீ கூறிடும் கதையினில்
ஆடி அசைந்து நடித்திடும் மேடையில்
மகிழ்ந்து நீ கைகளை தட்டிடு விரைவினில்



உடலை அசைத்திட வலமிடம் நடப்போம்
சுற்றுச் சூழலை அறிந்திட சுற்றுலாச் செல்வோம்
எண்ணிக்கைத் தெரிந்திடப் புல்லைப் பிடுங்குவோம்
மொழியைக் கற்றிட பலருடன் பேசுவோம்

கற்றல் நிலையம் சிறப்புடன் அமைத்திடும்
ஆற்றல் வெளிப்பட ஆர்வம்/ஆக்கம் கொடுத்திடும்//
பிள்ளை/கள் விரும்பிய பொருட்களை வைத்திடும்
பிள்ளை/கள் செயல்பட ஊக்கம் அளித்திடும்

குழந்தையின் உள்ளம் அறிந்திடும் ஆற்றலில்
பிள்ளையின் செயல்திறன் வெளிப்படும் விரைவினில்
தனிமையில் இருந்திடும் பிள்ளையின் அருகினில்
குழந்தையாய் இருந்து நீ செயல்படு அன்பினில்

எங்கும் எதிலும் புகழ் பெறும் பிள்ளையை
அகிம்சை வழியினில் வளர்த்திடு பிள்ளையை
இலங்கைத் திருநாட்டின் வருங்காலப் பிள்ளையை
சந்ததி காத்திட வளர்வான் உன் பிள்ளையே

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நாடத்தப்பட்ட போட்டியில் இண்டாம் இடம் பெற்ற கவிதை.

2002.10.05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோலையில் வாழும் பறவைகள்

மாமரச் சோலையிலே
பச்சைகிளி ரெண்டு
தெம்மாங்கு பாடுதடி!!
கிக்.....கிக்.....கீ.....யீ.....யீ
கிக்.....கிக்.....கீ.....யீ.....யீ என்று
செந்தமிழ் பாடுதடி - இரண்டும்
செந்தமிழ் பாடுதடி

மாஞ்சோலைக் குயில்களெல்லாம்
குக்.....குக்.....கூ.....ஊ
குக்.....குக்.....கூ.....ஊ வென்று
கீதம் இசைக்குதடி!!
கூவிடும் குயிலிசையில்- கல்ல
ராகங்கள் கேட்குதடி
சங்கீத ராகங்கள் கேட்குதடி
சரிகம பதநிச சநிதப மகரிச
சரிகமபதநிச சநிதபமகரிச
ராகம் இசைக்குதடி - சரிகம
ராகங்கள் பாடுதடிஃஇசைக்குதடி

ஆலமரச் சோலையிலே - அழகான
பறவைகள் வாழுமடி
பறவைகள் எல்லாம் கூடிக்குலாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுகள் கட்டுமடி - பலவித
கூடுகள் கட்டுதடி
குச்சித் தடியோடு இலை சருகுங் சேர்த்து
கூடுகள் கட்டுமடி - பறவைகள்
கூடுகள் கட்டுதடி
கூடுகள் கட்டி - முட்டைகளிட்டு
குஞ்சுகள் பொரிக்குமடி - பஞ்சு
போன்ற குஞ்சுகள் பொரித்தடி

குஞ்சுக்கு இரை தேடி - நீண்ட
தூரம் பறந்து செல்லுமடி
இரையைத் தேடி பறந்து செல்லுதடி
இரையைக் கொண்டு வந்து
குஞ்சுக்கு ஊட்டி
துள்ளிக் குதிக்குதடி - சிறகடித்து
துள்ளிக் குதிக்குதடி

தத்தித் தகதோம் தத்தித் தகதோம்
தகிட தத்தோம் தகிட தத்தோமென்று
துள்ளிக் குதிக்குமடி - குஞ்சைக்
கூட்டிப் பறந்து செல்லுமடி
வானிலே பறந்து செல்லுதடி

பறவைகள் போல சந்தோச வானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் பறந்திடுவோம்- ஒன்றாய்க்
கூடியேவாழ்ந்திடுவோம்

தத்தித் தகதோம் தத்தித் தகதோம்
தகிட தத்தோம் தகிட தத்தோமென்று
துள்ளி விளையாடுவோம் -
நடனமாடி துள்ளி விளையாடுவோம்
லால ல்லாலா...............!!!

ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கவிதை.
01.10.2020





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவிலே புதிய யுகம் படைப்போம்

நிலவே நிலவே ஓடி வா- நீ
நில்லாமல் ஓடி வா
மலை மேலே ஏறிவா- தினமொரு
மல்லிகைப் பூக் கொண்டு வா
நிலா.................நிலா.................
நிலா! நிலா!! நிலா!!!
நிலா.................நிலா................. நிலா.................

நிலாவிலே கால் பதித்த
ஆம்ஸ்ரோங்கை போல நிலவில்
விஞ்ஞான உலகை அமைப்போம் வா
நிலாவிலே குடியேறி
நீயும் நானும் சேர்ந்து வாழ
புதிய யுகம் படைத்திடுவோம்
நிலவே நீ ஓடி வா
நிலா.................நிலா.................
நிலா! நிலா!! நிலா!!!
நிலா.................நிலா................. நிலா.................

பசுமையான் ஓர் உலகம்
நிலாவிலே நாம் படைப்போம்
நிலவே நீ ஓடி வா
நிலாத் தோன்றும் வானத்திலே
நிலவோட விளையாட
நிலவே நீ ஓடி வா
நிலா.................நிலா.................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிலா! நிலா!! நிலா!!!*
*நிலா.................நிலா................. நிலா.................*

பௌர்ணமி நிலாவிலே
பள்ளாங்குழி ஆடிடலாம்
நிலவே நீ ஓடி வா
அழகான முற்றத்திலே
நிலாச்சோறு உண்ணலாம்
நிலவே நீ ஓடி வா
*நிலா.................நிலா.................*
*நிலா! நிலா!! நிலா!!!*
*நிலா.................நிலா................. நிலா.................*

ஔவையின் திரு வுருவம்
நிலாவிலே தெரிகின்றதே
ஔடதமாய் நீ ஓடி வா
ஔவையின் செந்தமிழால்
கீதம் இசைத்துப் பாடி ஆட
நிலவே நீ ஓடி வா-
புதிய கீதம் இசைத்திடுவோம் வா
நிலவே இனிய கீதம் பாடி ஆடவா
நிலவே நீ ஓடிவா
*நிலா.................நிலா.................*
*நிலா! நிலா!! நிலா!!!*
*நிலா.................நிலா................. நிலா.................*

01. 10. 2020 சர்வதேச சிறுவர் தினத்திற்கான கவிதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பனையில் ஓர் நிஜம்

காலை எழுந்து
கண் விழிக்கும் போது
பாலை வெளியாய்
பரந்து கிடக்கும் என் மனதில்//

சிறகை விரித்து
சிட்டாய் பறக்கும்
சிட்டுக் குருவி போல
கற்பனையிலும்
ஓர் நிஜத்தைத் தேடுகின்றேன்//

துள்ளிக் குதித்தோடும்
புள்ளி மானைப் போன்றவர்கள்
தோகை விரித்தாடும்
மயிலைப் போன்றவர்கள்
குக்குக் கூவெனக் கூவும்
குயிலைப் போன்றவர்கள்

அந்தக்.....
கள்ளங் கபடம் இல்லாத
வருங்காலச் சந்ததிக்கு/கோர்//
இன மத பேதம் இல்லாத
சுதந்திரமான.....
பாலர் கல்விக் கூடம் அமைத்து
அதில்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வாழ்வும்
என் சிந்தனையும்
அர்ப்பணித்திட//
ஒவ்வொரு காலை வேளையும்
கண் விழிக்கும் போது
என் நினைவுகள்
எங்கோ.....
பறந்து/பரந்து செல்கின்றது//

2004 ஆம் ஆண்டு வரைந்த கவிதை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தை மகளே மலர்ந்திடுவாய்...

ஆண்டாண்டு காலமாய்
அவனியிலே அவதரித்து
அற்புதமான படைப்புக்களை
அழகாய் படைத்திடும்
தைப் புத்தாண்டே//

கலியுகப் பூமியிலே
கமல மலர் ?பூத்திடவும்//
சூதாட்டம் நிறைந்த வாழ்க்கையில்
"சாந்தி சமாதானம்" நிலைத்திடவும்//

"நிக்ஷா" வெள்ளம் போல"
துன்ப துயரங்கள் பறந்தோடிடவும்//
"2009 இன் தைப் புத்தாண்டே
இன மத பேதம் இல்லாதோர்
இனியதோர் ஆண்டாக மலர்ந்திட"
"தை மகளே நீ மலர்ந்திடுவாய்"
"தை மகளே நீ மலர்ந்திடுவாய்"

தைப் பொங்கள் சிறப்பு மலர்
வலம்புரி பத்திரிகை
14.01.2009.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிறப்பெடுப்பாய் மேதினமே

அடிமை விலங்கை
அடியோடு சாய்த்து
அகிம்சைப் பாதைக்கு
அன்பு வழி காட்டி
உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற
பேதமையை நீங்கிட
"புதிய பிறப்பெடுப்பாய் மேதினமே"//

வியர்வைத் துளியால்
விளைச்சலைப் பெருக்கி
விவசாயத்தோடு
நவீன
விஞ்ஞானம் பௌதீகமென
விவசாயி தொழிலாளி முதலாளிகளை
மேன்மையுறச் செய்திட
"புதிய பிறப்பெடுப்பாய் மேதினமே"//

உறவுகளை இழந்தோருக்கு
உறுதுணையாய் நின்றிட
ஆதரவற்ற சிறுவர்களுக்கு
ஆறுதல் அமைதி வாழ்வு கிடைத்திட
அல்லலுறும் மக்களுக்கு
நல்ல நிதி கிடைத்திட
2009 இல்
மீண்டும் ஒரு முறை
"புதிய பிறப்பெடுப்பாய் மேதினமே"//



வலம்புரி பத்திரிகை
2009.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உயிரே"

இருக்க இடமின்றி
இருப்பிடங்கள் தேடி
சௌகரியமான....
உருப்படியான .....
உடல்களை விட்டுவிட்டு
உருக்குலைந்து சிதறிக் கிடக்கும்
உடல்களைத் தேடித் தேடி
இரவும் பகலும்
அலைந்து திரிகின்றாயே
ஏன்? "உயிரே"

"உயிரே"
அங்கே பார்
சுற்று முற்றும் பார்//
தலை இல்லாத பிண்டம் ஒரு புறம்
பிண்டம் இல்லாத தலை ஒருபுறம்
கை..கால். தலைப்பிண்டங்களென
துண்டு துண்டாய்
சிதறிக்கிடக்கும்
மனித எச்சங்களைப் பார்//
"உயிரே" நீ
எதற்குள் நுழைந்து
உயிர் கொடுப்பாய்//
"உயிரே"
"உயிரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ. . .
மீண்டும் ஓர் பிறப்பெடுத்தால்//
"உயிரே" நீ
மனிதப் பிறப்பெடுத்தால்
சுதந்திரக் காற்றை
நீ...
நான்...
நாம்...
சுவாசிக்க வேண்டும்//
சுதந்திரப் பறவையாய்
பறந்திட வேண்டும்
இல்லை யேல்
"உயிரே"

"உயிரே"
பசுப் பாலினை பொழிந்து தரும்
ஆவினமாய்...
பஞ்சணையில் படுத்துறங்கும்
பூனை இனமாய்...
என்றுமே நன்றி மறவாத
நாயினமாய்...
சிட்டாய் பறந்து வாழும்
சிட்டுக் குருவிகளாய்
பறவைகளாய்...
நீ...
மீண்டும்...
பிறப்பெடுத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவா உனக்கு
என் "உயிரே"
சமர்ப்பணம்
இல்லை! இல்லை!! இல்லை!!!
கலங்காதிரு
"உயிரே" கலங்காதிரு
மிக விரைவில்
மிக! மிக!! விரைவில்
ஒன்றாய் கூடுவோம்
ஒன்றாய் வாழுவோம்
ஒற்றுமையாய் வாழ்ந்திருப்போம்
"உயிரே" கலங்காதிரு
"உயிரே"

வன்னியில் நடந்த பேரிடர்களை நினைவு கூர்ந்து வரையப் பட்ட கவிதை.
*15.06.2009*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்னை அருளேஸ்வரிக்கு"

அகிலமே போற்றி வாழ்த்திடும்
ஆசிரியர் தின நன்நாளில்
முன்பள்ளிக் கல்விக்கோர்
தனித்துவமான ஓர் இடத்தையும்
ஆசிரியர்களையும்....
பெருமைப்படுத்திய
அன்னை "அருளேஸ்வரிக்கு"
இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்//

சிட்டுக்குருவி போல
சிறகடித்துப் பறந்து வரும்
சின்னஞ் சிறார்களுக்கு//
பாலர் கல்வி ஊட்டி வளர்த்து
ஆரம்பக் கல்வி முதல்
பல்கழகக் கல்வி வரை
வழிகாட்டி நெறிப்படுத்திட
உயிர் மெய். எழுத்தெனும்
அடி அத்திவாரக் கற்களையிட்ட
முன்பள்ளி ஆசிரியர்களை
பெருமை யெனும்
பட்டத்தை...
கௌரவமாய் அள்ளிக் கொடுத்த
அன்னை "அருளேஸ்வரிக்கு"
அன்பெனும் கவிநயத்தால்
வாழ்த்துக்கள்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வான ஒரு காலம்
எப்போ வரும் என்று
ஏங்கித் தவித்தவர்கள்//
முன்பள்ளிக் கல்விக்காக
அல்லும் பகலும்
அயராது உழைத்தவர்கள்//
ஊதியத்தைக் காணாது தினந்தோறும்
துவிச்சக்கர வண்டியிலே சென்றவர்கள்//
எண்ணிச் சொல்ல முடியாத
துயரத்தில் வாழ்ந்தவர்கள்
ஏணி வைத்தாலும்
எட்ட முடியாத
இமயமலைச் சிகரங்களை
கௌரவம் என்னும்
தங்கப் பதக்கம் சூட்டிய
யாழ்/வலயக் கல்விப் பணிப்பாளர்
அன்னை "அருளேஸ்வரிக்கு"
பல்லாண்டு கால வாழ்த்துக்கள்
வளர்க முன்பள்ளி ஆற்றல்
போற்றுக இவ்வையகம்.

துணுக்காய், தென்மராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் வலயக் கல்விப் பணிப்பாளராகவும், வடக்கு, கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்திப் பணிப்பாளராகவும், கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற கணித மேதை" திருமதி வேதநாயகம் அருளேஸ்வரி" அவர்களுக்காக கையளித்த கவிதை.
2008.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்விதழ் நாயகன் செல்வராசா

கிளிநொச்சி அக்கராயன்குளம்
ஸ்கந்தபுரம் என்னும் ஊரிலே
களனி வாழ் உழவர்களும்
மாபெரும் கல்வி மான்களும்
கல்விச் சாலையுடன் ஆலயங்களும்//
பச்சைப் பசேலென
பசுந்தரையில்....
ஆவினங்கள் பால் சொரிய//
பரந்து காணும் நெல் வயலில்
முத்து முத்தாய் நெல் மணிகள்
கொத்து கொத்தாய் தலை சாய்ந்திருக்க//
பனை தென்னை வாழை பலா
செங்கரும்புத் தோட்டமும்
வாசனை நிறைந்த
வண்ண மலர்கள்
வகை வகையாய் பூத்துக்குலுங்கும்
காட்டாறு பாய்ந்தோடும்
(ஸ்)கந்தபுரம் மண்ணிலே
செவ்விதழ் நாயகன்
செல்வராசா உதித்தானே//

தாய்க்குத் தலை மகனாய்
தரணியிலே தவழ்ந்தானே/பூத்தானே//
தம்பிமார் சூழ்ந்திருக்க
தங்கையவள் தலை சாய்ந்திருக்க//
தன் நெஞ்சமதைத் தொட்டிலாக்கி
தன் தோள் மீது சுமந்தானை/னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமே உன்னைக் காணமால்
திக்குத் திசை தெரியாமல்
தவியாய் தவிக்குதய்யா
நெஞ்சமெல்லாம்...
தவியாய் தவிக்குதய்யா//

நெஞ்சமதில் மஞ்சங்கட்டி
நெஞ்சிலே சுமந்தானே
நெஞ்சிலே/யே செல்பட்டு
அவனது...
நெஞ்சை அள்ளிச் சென்றதையோ
நெஞ்சமெல்லாம் வேகுதே
நெடு மூச்சு வாங்குதே//

தந்தையின் நெஞ்சிலே ஊஞ்சல் கட்டி
தலை சாய்ந்து உறங்கிய செல்வங்கள்//
தன் உடன் பிறந்த பிறப்புக்கள்
எங்கே! எங்கே!! என்று
தடுப்புக்குள்ளே கன்னியவள்
தவியாய் தவித்தாளே!!

தோளிலே ஏறி விளையாடித்
துள்ளித் திரிந்த சிட்டுக்கள்//
முத்து! முத்தாய்
ஈன்றெடுத்த...
முத்துக்களை சிதற விட்டு
உறவுகளைத் தொலைத்து விட்டு
அகதி என்ற பேரெடுத்து
ஆவியாய்ப் பறந்தாயே
மகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ என் மகளே!!
பெரிய விலை கொடுத்து விட்டோம்
நாமெல்லாம்.....
பெரிய விலைகொடுத்து விட்டோம்
இப்படியே.....
இந்தப் பூமி பிளந்து விழுங்காதோ?
இன்று.....
இல்லை! இல்லை!!
எப்போதும்
நீ இல்லை! இல்லை!!
தூக்கம் இன்றி! நிம்மதியின்றி
நாட்கள் ஓடுதய்யா//
திடுமென என் முன்னே வாராயோ
திடுமென எம் முன் வாராயோ

நாதியற்ற பிணம் போல
நடுத் தெருவில் அலைகின்றாள்
துடுப்பில்லாப் படகு போல
துணையில்லாத் துரும்பானாள்//
தேடித் தேடி அலைகின்றோம்//
செல்வமே....
எங்கள் செல்வராசாவே"
ஓடோடி வாராயோ நீ.....
காட்டாறு வெள்ளம் போல
ஓடோடி வாராயோ//
ராசாவே "செல்வராசாவே"
நீ ஓடோடி வாராயோ//

15.05.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மவர்கள் வாழ்ந்த காலங்கள்
# அன்றும் இன்றும்

மண் வீட்டுக் குடிசையிலே
முற்றத்து மணற் தரையில்
ஓலைப் பாய் விரித்தமர்ந்து
பனையோலைப் பிளாக் கோலி//
மனைவி மக்களோடும்
மாமன் மாமி மச்சான் மச்சாளோடும்
பாட்டன் பாட்டி குந்தியிருக்க
ஐயா! அம்மாவோடு/மடியினிலே
பேரன் பேத்தி பூட்டிமார் சுற்றியிருக்க//
மனங் குளிரக் கூல் குடித்து
மனம் விட்டுப் பேசி
சிரித்துக் கும்மாளமிட்டு//
ஒட்டுத்திண்ணை அருகில்
ஒய்யாரமாய்ச் சாய்ந்திருந்து//
வீரமிக்கக் காவியங்கள்
நகைச் சுவைக் கதம்பங்கள்
நல்வழி காட்டிடும்
நீதிக் கதைகள் பல பேசி//
நிலா வெளிச்சத்திலே
குப்பி விளக்கேற்றி
மகிழ்ந்திருந்து களித்திருந்த
காலங்கள் !! அன்று!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்ட வெளித் தேசத்தில்
வெயில் கொழுத்தும் நேரத்தில்
வெப்பம் உடலை வாட்டி வதைத்திட
வியர்வை மேனியெங்கும் வழிந்தோடிட//
கொட்டும் பனி மழை யானலும்
போர்த்து மூடத் துணியில்லாமல்
இரு கைகளாலும்
நெஞ்சமதை இறுக்கி
ஒருவர்மீது ஒருவர் சாய்ந்து//
ஓலைக் குடிசை இல்லை
ஒருபிடி மண் சொந்தமில்லை//
மாமரச் சோலை இல்லை
பூச்சூட மலர்/கள் இல்லை//
தென்னை பனை மா வாழையில்லை
வீசுகின்ற தென்றல் காற்றும் படவில்லை//
தடித்த தரப்பாளுக்குள்ளே
தலை நிமிர முடியவில்லை
கை கால் நீட்டி இருக்கஇடமில்லை
படுக்கவும் இடம் இல்லை
குடும்பம் வாழ வழியில்லை
குந்தியிருக்கத் திண்ணை இல்லை//
ஆசா பாசங்களை
நெஞ்சுக்குள்ளே புதைத்து விட்டு
ஒரு நேர உணவுக்காய்
வாடி வதங்கி காத்திருக்கும்
காலம் "இன்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட் சதுர வீடு கட்டி
நாலு பக்கம் பூவரசம் வேலியிட்டு
நன் மக்கள் பேறு பெற்று
நலமோடு வாழ்ந்தவர்கள்
நம்மவர்கள் "அன்று"//

நாலு மூலைக்கும் நூலெடுத்து
நாற் சதுர கூடாரங்கள் கட்டி
நம்மவர்களத் தொலைத்து புதைத்துவிட்டு
நலிவுற்று சோர்வுற்று
நடை பிணங்களாய்
வாழ்பவர்கள் "இன்று"//

சித்திரைப் பௌர்ணமியில்
சித்திரப் புத்திரனார் கதை படித்து
சிட்டுக்குருவிகளாய்
சிறகடித்துப் பறந்து
சிரித்து விளையாடி
முத்துமாரி அம்மன் கோவிலிலும்
முருகன், பிள்ளையார் கோவில்களிலும்
கஞ்சிக்குக் கையேந்தி
நண்பர்களுடன் காத்திருந்து மகிழ்ந்திருந்த
பசுமையான காலங்கள்
"அன்று"//

சித்திரைப் புத்தாண்டில்
சிதைந்து சீரழிந்து உருக்குலைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ந்திருந்த வயிற்றுக்கு
கால் வயிற்றுக் கஞ்சிக்காக
முட்கம்பி வேலியிலே
முட்டி மோதி நீண்ட வரிசையிலே
கால்கடுக்கக் காத்திருந்து
கையேந்தும் காலம்
“இன்று”//

பச்சைப் பசேலென
பரந்த வயல் வெளியில்
பக்கத்து வீட்டுப் பொடியன்
பரந்தாமன் பாலனுடன்
பச்சை சிவப்பு நிறங்களென
பட்டங்கள் பல கட்டி
பட்டம் விடுவோம்! பட்டம் விடுவோம்!!
பாலா ஓடி வா வென்று
பாடியாடி ஓடி விளையாடி
பட்டங்கள் பறக்க விட்ட
பசுமையான காலங்கள்
“அன்று”//

பற்றைக் காட்டுக்குள்
பாம்புக்கு மத்தியில்
பதுங்குக் குழிக்குள்ளே
படுத்துறங்க முடியாமல்
பல் குழல் பீரங்கி/கள் முழங்க//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுப் பட்டென குண்டுகள் கூவிவிழ
சிதைந்து போன உடலுக்கு
சிதை மூட்ட வழியில்லை
ஆறடிக் குழி நிலமும் இல்லை
கொள்ளி வைக்கப் பிள்ளையில்லை
தீ மூட்ட நேரமில்லை/கெதியுமில்லை//
இரு கைகளால் புதைகுழி தோண்டி
சிதைந்த பிணத்தை போட்டு மூடிவிட்டு
பெத்தவள் மனம் பதை பதைக்க
வளர்த்தவன் துடி துடிக்க
மாங்கல்யம் சூட்டியவள்/ன்//
மார்பில் அடித்துப் புரண்டழ
தாலி கட்டியவள்/ன்//
தரையில் மயங்கி விழ
பிள்ளைகள் திகைத்து நிற்க
பதறியடித்து சிதறியோடி
நெஞ்சமது படபடக்க
இதயந் துடி துடிக்க
மறைவிடத்தைத் தேடித் தேடி
பதுங்கி இருந்த காலம்
"இன்று"//

பத்தடி, மதில் கட்டி
பார்க்கத் தெரியாத வீடுகட்டி
எட்டி எட்டிப் பார்த்தாலும்
எட்ட முடியாத கேற்றைப் போட்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்துச் சிரிப்பது கேட்காது
சத்தந் சந்தடி கேட்காது//
பள்ளிக்குச் சென்று
பக்கத்தில் இருப்பவனை
பேரென்ன ஊரென்ன எனக் கேட்டால்//
பக்கத்து வீட்டுப்
பரந்தாமனின் சின்ன மகன்
பரசு ராமன் நான் என்பான்//
ஒஹோ... ஒஹோ...
அது நீதானா எனக் கேட்கும்
தற்போதைய காலம்
"இன்று"//

"பட்ட துயர் போதுமடா
ஒன்று பட்டு வாழ்வோமடா"

*2009, 2010 ஆம் ஆண்டுகளில் நலம்புரி நிலையங்களில் இருந்த நம் தமிழ் உறவுகளுக்காக வரையப்பட்ட கவிதை.*
*15.05.2010*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னைய வெளியீடுகளைப் போன்று ஆசிரியர் திருமதி வள்ளியம்மை அவர்களின் "அகரம் எனது சிகரம்" எனும் நூலும் மிக சிறப்பாக அமையும் என்பதும் எனது நம்பிக்கையாகும். ஆசிரியரின் முன்பள்ளி தொடர்பான 28 வருடங்களுக்கு மேலாக அமைந்த அனுபவங்களும் ஆற்றல்களும் இந் நூலின் வெற்றிக்கு துணையாக நிற்கின்றன. இவ் ஆசிரியர் அவ்வப்போது பத்திரிகளிலும் சஞ்சிகைகளிலும்கவிதைகள், பக்திப்பாடல்கள், பாடல்கள் போன்றவற்றை பிரசுரித்துள்ளார்.

திருமதி வள்ளியம்மை அவர்கள் சிறார்களின் உணர்ச்சி களை நன்கு உணர்ந்து அவற்றை கவிதைவடிவில் மிக அழகாக வெளிக்கொணரும் ஆற்றலுடையவர். எமது மத்தியில் சிறார்களிற்கு ஏற்ற பாடல்களை வெளியிடும் தகுதி உடையோர் மிகச் சிலரே. அந்த இடைவெளியை நிரப்புவதற்கு சிறந்த ஒருவராக இந் நூலாசிரியர் விளங்குகின்றார். அவர் மென்மேலும் இவ்வகையான நூல்களை வெளியிட்டு சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவ வேண்டும். பன்முக ஆளுமை கொண்ட ஒருவனின் சிந்தனையும் செயலும் தமிழின் வழி வருவது பெருமைக்குரியது. படைப்பாளியின் படைப்பின் தரத்தை விட சமூக ஒழுங்கின் ஆளுமையின் வெளிப்பாடாக இவரது அகரம் எனது சிகரம் காணப்படுகின்றது.

இ. பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி
யாழ் இந்துக் கல்லூரி

ISBN 978-624-97778-0-4
9 786249 777804

Guru Printers Thirunelvely. 021 222 8266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org